உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சிவபூசைத் திரட்டு.

இஃது

சிவபூசைசெய்கிறவர்களுடைய உபயோகத்துக்காக

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

வைத்திருந்த ஏட்டின்படி

யாழ்ப்பாணம்

சைவபரிபாலன சபையாரால்

தமது

சைவப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது.

உ-ம் பதிப்பு

அக்ஷய௵ ஆவணிமீ.

1926.

உ

சிவபூசைசெய்யச் சத்தியற்றவர்களும் இதனை நியமமாக ஓதிவரின் அதனைச் செய்வோர் பெறும்பலத்தில் ஒருகூறேனும் அடைவர்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சிவபூசைத்திரட்டு.

ஆனைமுகனை யறுமுகனைப் பின்னைப்பொன்னம்பலவன்
ஞானகுருவாணியையுன்னுடு.

ஆரம்பம்.

திருஞானசம்பந்தசுவாமிகள், திருப்பிரமபுரம், பண் நட்டபாடை.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (க)

திருநாவுக்கரசுசுவாமிகள்.
திருவதிகைவீரட்டானம், பண்—கொல்லி.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபலசெய்தனநானறியேன்
ஏற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதும்
தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதுடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

சுந்தரமூர்த்திசுவாமிகள், திருவெண்ணெய்நல்லூர், பண்—இந்தளம்.

பித்தாபிறைசூடிபெருமானேயருளாளா
எத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை.

வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௧)

திருநா. திருவாலவாய்த் திருத்தாண்டகம்.

முளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றி
முதிருஞ்சடைமுடிமேன்முகிழ்வெண்டிங்கள்
வளைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன்றும்
வரைசிலையாவாசுகிமாநாணாக்கோத்துத்
துளைத்தானைச்சுடுசரத்தாற்றுவளநீறாத்
தூமுத்தவெண்முறுவலுமையோடாடித்
திளைத்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே.

பூதசுத்தி.

திருநா. திருக்கற்குடி திருத்தாண்டகம்.

மண்ணதனிலைந்தைமாநீரினான்கை
வயங்கெரியின்மூன்றைமாருதத்திரண்டை
விண்ணதனிலொன்றைவிரிகதிரைத்
தண்மதியைத்தாரகைகடம்மின்மிக்க
எண்ணதனிலெழுத்தையேழிசையைக்காம
னெழிலழியவெரியுமிழ்ந்தவிமையாநெற்றிக்
கண்ணவனைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௨)

திருஞான. [illegible], திருவிராகம். பண் - நட்டபாடை.

இருநிலனதுபுனலிடைமடிதரவெரிபுகவெரியதுமிகு
பெருவெளியினிலவிதரவளிகெடவியனிடைமுழுவதுகெட
இருவர்களுடல்பொறையொடுதிரியெழிலுருவுடையவனினன்
[illegible] (௩)

அந்தரியாகம்.

திருநா. தனித்திருநேரிசை.

காயமேகோயிலாகக்கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலாநிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப்போற்றவிக்காட்டினோமே. (எ)

மேற்படி சுவாமிகள், தனித்திருக்குறுந்தொகை.

தெள்ளத்தேறித்தெளிந்துதித்திப்பதோர்
உள்ளத்தேறலமுதவொளிவெளி
கள்ளத்தேன்கடியேன்கவலைக்கடல்
வெள்ளத்தேனுக்கெவ்வாறுவிளைந்ததே. (அ)

மேற்படி சுவாமிகள். தனித்திருநேரிசை.

உடம்பெனுமனையகத்துவுள்ளமேதகளியாக
மடம்படுமுணர்நெய்யட்டியுயிரெனுந்திரிமயக்கி
இடம்படுஞானத்தீயாலெரிகொளவிருந்துநோக்கில்
கடம்பமர்காளைதாதைகழலடிகாணலாமே. (௯)

சிவோகம்பாவனை.

சுந்தர. திருவொற்றியூர் பண் - தக்கேசி.

வழித்தலைப்படுவான்முயல்கின்றே
னுன்னைப்போலென்னைப்பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்டநீர்துபோலச்
சுழல்கின்றேன்சுழல்கின்றதென்னுள்ளம்
கழித்தலைப்பட்டநாயதுபோல
வொருவன்கோலப்பற்றிக்கறகறவிழுக்கை
யொழித்துநீயருளாயினசெய்யா
[illegible]

திருநா. திருவாப்பாடி திருநேரிசை.

உள்ளுமாய்ப்புறமுமாகியுருவுமாயருவுமாகி
வெள்ளமாய்க்கரையுமாகிவிரிகதிர்ஞாயிறாகிக்
கள்ளமாய்க்கள்ளத்துள்ளார்கருத்துமாயருத்தமாகி
அள்ளுவார்க்கள்ளல்செய்திட்டிருந்தவாப்பாடியாரே. (கக)

மேற்படி சுவாமிகள். கோயிற்றிருநேரிசை.

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகீ
எத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல்காண்பானடியனேன்வந்தவாறே. (கஉ)

பெட்டகக்கோயில் திறக்க.

மேற்படி சுவாமிகள். திருமறைக்காடு திருக்குறுந்தொகை.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. (கங)

பெட்டகக் கோயிலினின்றும் சுவாமியை எழுந்தருளப்பண்ண.

ஷை சுவாமிகள். திருப்புள்ளிருக்குவேளூர். திருத்தாண்டகம்.

ஆண்டானையடியேனையாளாக்கொண்டு
அடியோடுமுடியயன்மாலறியாவண்ணம்
நீண்டானைநெடுங்களமாநகரான்றன்னை
நேமிவான்படையானீளுரவோனாகம்
கீண்டானைக்கேதாரமேவினானைக்
கேடிலியைக்கிளர்பொறிவாளரவோடென்பு

பூண்டானைப்பள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (கச)

ஸ்நானவேதிகையில் எழுந்தருளச்செய்ய.

ஷை சுவாமிகள். திருக்குடவாய்க்கரைப்புத்தூர். குறுந்தொகை.

பந்தபாசமறுத்தெனையாட்கொண்ட
மைந்தனைமணவாளனைமாமலர்க்
கந்தநீர்க்குடவாய்க்கரைத்தென்புத்தூர்
எந்தையீசனைக்கண்டினிதாயிற்றே. (கரு)

அட்டபுஷ்பம்.

மேற்படி சுவாமிகள். திருமறைக்காடு. குறுந்தொகை.

அட்டமாமலர்சூடியடும்பொடு
வட்டப்புன்சடைமாமறைக்காடரோ
சட்டமாடியுநான்மறைபாடியும்
இட்டமாகவிருக்குமிடமிதே. (கசு)

தூபதீபம்.

திருஞான. திருச்சண்பை. திருவிராகம். பண்-காந்தாரி.

எந்தமதுசிந்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதுதிசெய்யவளர்தூபமொடுதீபமலிவாய்மையதனால்
அந்தியமர்சந்திபலவர்ச்சனைகள்செய்யவமர்கின்றவழகன்
சந்தமலிகுந்தளநன்மாதொடுமேவுபதிசண்பைநகரே. (கஎ)

எண்ணெய்க்காப்பு.

திருஞான. கோயில் பண்-காந்தாரபஞ்சமம்.

ஆடினாய்நறுநெய்யொடுபாறயிரந்தணர்பிரியாதசிற்றம்பலம்

ர்டினாய்மறையோடுபல்கீதமும்பல்சடைப்பனிகால்கதிர்வெண்
சூடினாய்அருளாய்சுருங்கவெம்தொல்வினையே. [திங்கள்

பஞ்சகௌவியம்.

திருநா. பாவநாசத் திருக்குறுந்தொகை.

பாவமும்பழிபற்றறவேண்டுவீர்
ஆவிலஞ்சுகந்தாடுமமலன்கழல்
மேவராய்மிகவும்மகிழ்ந்துள்குமின்
காவலாளன்கலந்தருள்செய்யுமே. (௧௧)

பாலமுதம்.

திருஞா. திருச்செங்காட்டங்குடி. பண்-பழந்தக்கராகம்.

பாலினால்நறுநெய்யாற்பழத்தினாற்பயின்றாட்டி
நூலினால்மணமாலைகொணர்ந்தடியார்புரிந்தேத்தச்
சேலினார்வயல்புடைசூழ்செங்காட்டங்குடியதனுள்
காலினாற்கூற்றுதைத்தான்கணபதீச்சரத்தானே. (௨௦)

நெய்.

திருநா. திருப்புகலூர். திருத்தாண்டகம்.

செய்யாய்நின்மலனேநீலகண்டா
நிறைவுடையாய்மறைவல்லாய்நீதியானே
மையாருங்கண்மடவாள்பாகத்தானே
மான்றோலுடையாய்மகிழ்ந்துநின்றாய்
கொய்யாருங்கூவிளங்கொன்றைமாலை
கொண்டடியேனிட்டுக்கூறிநின்று
பொய்யாதசேவடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

பால்.

மேற்படி சுவாமிகள். திருவெண்காடு. திருக்குறுந்தொகை.

பாலையாடுவர்பன்மறையோதுவர்
சேலையாடியகண்ணுமைபங்கனார்
வேலைபார்விடமுண்டவெண்காடர்க்கு
மாலையாவதுமாண்டவரங்கமே. (௨௨)

தேன்.

சுந்தரர். திருவாவடுதுறை பண் - தக்கேசி.

வானநாடனேவழித்துணைமருந்தேமாசிலாமணியேமறைப்பொரு
ளேனமாவெயிறாமையுமென்புமீடுதாங்கியமார்புடையானே [னே
தேனெய்பாறயிராட்டுகந்தானேதேவனேதிருவாவடுதுறையுள்
ஆனேயேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே.

திருநா. திருநீலக்குடி திருக்குறுந்தொகை.

செய்யமேனியன்றேனொடுபாறயிர்
நெய்யதாடியநீலக்குடியரன்
மையலாய்மறவாமனத்தார்க்கெலாம்
கையிலாமலகக்கனியொக்குமே. (௨௩)

கருப்பஞ்சாறு.

மேற்படி சுவாமிகள். திருவீழிமிழலை திருத்தாண்டகம்.

ஆலைப்படுகரும்பின்சாறுபோல
வண்ணிக்குமஞ்செழுத்தினாமத்தான்காண்
சீலமுடையடியார்சிந்தையான்காண்
திரிபுரமூன்றெரிபடுத்தசிலையினான்காண்
பாலினொடுதயிர்நறுநெய்யாடினான்காண்
பண்டரங்கவேடன்காண்பலிதேர்வான்காண்
வேலைவிடமுண்டமிடற்றினான்காண்

பலகனிச்சாறு.

மேற்படி சுவாமிகள். திருவிடைமருதூர், திருக்குறுந்தொகை.

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினும்
தனிமுடிகவித்தாளுமரசினும்
இனியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே. (உ௬)

இளநீர்.

மேற்படி சுவாமிகள். திருவீழிமிழலை, திருத்தாண்டகம்.

நெய்யினொடுபாலிளநீராடினான்காண்
நித்தமணவாளனென்கின்றான்காண்
கையின்மழுவாளொடுமானேந்தினான்காண்
காலனுயிர்காலாற்கழிவித்தான்காண்
செய்யதிருமேனிவெண்ணீற்றினான்காண்
செஞ்சடைமேல்வெண்மதியஞ்சேர்த்தினான்காண்
வெய்யகனல்விளையாட்டாடினான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (உ௭)

சுத்த சலம்.

திருஞான. திருவிடைமருதூர் பண் - தக்கராகம்.

தடங்கொண்டதொர்தாமரைப்பொன்முடிதன்மேல்
குடங்கொண்டடியார்குளிர்நீர்சுமந்தாட்டப்
படங்கொண்டதொர்பாம்பரையார்த்தபரமன்
இடங்கொண்டிருந்தான்றனிடைமருதீதோ. (உ௮)

சந்தனக்குழம்பு.

திருநா. தனித்திருநேரிசை.

தொண்டனேன்பட்டதென்னே தூயகாவிரியினன்னீர்
கொண்டிருக்கோதியாட்டிக்குங்குமக்குழம்புசாத்தி

இன்டைகொண்டேறநோக்கியீசனையெம்பிரானைக்
கண்டனைக்கண்டிராதேகாலத்தைக்கழித்தவாறே. (௨௯)

திருஞான. திருக்கானப்பேர் பண் - கொல்லி.

வாவிவாய்த்தங்கியறண்சிறைவண்டினம்
காவிவாய்ப்பண்செயுங்கானப்பேரண்ணலை
நாவிவாய்ச்சாந்துளும்பூவுளுஞானநீர்
ஆவிவாய்ப்பெய்துநின்றாட்டுவார்தொண்டரே. (௩௦)

தூபம்.

ஷிசுவாமிகள். திருச்செங்காட்டங்குடி பண் - பழந்தக்கராகம்.

தொங்கலுங்கமழ்சாந்துமகிற்புகையுந்தொண்டர்கொண்
டங்கையாற்றொழுதேத்தவருச்சுனற்கன்றருள்செய்தான்
செங்கயல்பாய்வயலுடுத்தசெங்காட்டங்குடியதனுள்
கங்கைசேர்வார்சடையான்கணபதீச்சரத்தானே. (௩௧)

சுத்தோதகம்.

திருநா. திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம்.

வைத்தபொருணமக்காமென்றுசொல்லிமனத்தடைத்துச்
சித்தமொருக்கிச்சிவாயநமவென்றிருக்கினல்லால்
மொய்த்தகதிர்மதிபோல்வாரவர்பாதிரிப்புலியூர்
அத்தனருள்பெறலாமோவறிவிலாப்பேதைநெஞ்சே. (௩௨)

பீடத்திலெழுந்தருளப்பண்ண.

திருஞான. திருப்புள்ளிருக்குவேளூர் பண் - சீகாமரம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதியம்
உள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்

ஆவாகனம்.

திருநா. சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை.

அண்டமாரிருளூடுகடந்தும்பர்
உண்டுபோலுமோரொண்சுடரச்சுடர்
கண்டிங்காரறிவாரறிவாரெலாம்
வெண்டிங்கட்கண்ணிவேதியனென்பரே. (௧௪)

மேற்படி சுவாமிகள். திருவிண்ணப்பம், திருக்குறுந்தொகை.

என்னிலாருமெனக்கினியாரில்லை
என்னிலும்மினியானொருவனுளன்
என்னுளேயுயிர்ப்பாய்ப்புறம்போந்துபுக்
கென்னுளேநிற்குமின்னம்பரீசனே. (௧௫)

தியானம்.

அஞ்சுதிருமுகமேநிறங்களைந்தே
யையமூன்றுதிருக்கண்ணேயத்தம்பத்தே
வஞ்சமழுச்சூலம்வாளபயம்வச்ரம்
வலப்பாலேயமர்ந்ததுமற்றிடப்பால்
துஞ்சனலுமங்குசமுமணியும்பாம்புந்
தோற்கயிறுமுடனுண்டேதொகையுண்டே
பிஞ்சுமதிமுடிமேற்கங்கையுண்டே
யிப்படியெம்பிரானைக்கண்டவாறே. (௧௬)

சிவதருமோத்தரம் பரிகாரவியல்.

உச்சமுகமீசானமொளிதெளியபளிங்கே
யுத்தாபூருவதிசையைநோக்கியுறுமுகத்தே
நிச்சயித்தமுகத்தின்கேழ்ப்பூர்வதிசைநோக்கி
நிகழுமுகத்தற்புருடங்கோங்கலர்போனிறமே
யச்சுறுத்துமகோரமுகமறக்கனிதக்காள
முகிழ்நாடிவலத்தோனிற்றென்றிக்கியமருங்

செச்சைநிறத்தெசிவைமுகமிடத்தோண்மேல்வாழ்ந்து
சிறப்புறத்தின்முகஞ்சத்தியோசாதந்திகழ்வால். (௧௮)

அருக்கியம்.

திருஞான. திருநனிபள்ளி பண் - பியந்தைக்காந்தாரம்.

தோடொருகாதனுக்கொருகாதிலங்குசுரிசங்குநின்றுபுரளக்
காடிடமாகநின்றுகனலாடுமெந்தையிடமாயகாதனகர்தான்
வீடுடனெய்துவார்கள்விதியென்றுசென்றுவெறிநீர்தெளிப்பவிர
லால், நாடொறுமிசெம்மைச்செய்யாப்பெள்ளமாருகனிபள்ளிபோலு
[நமர்காள்.

கோவணம்பாவனை சாத்த.

தேசுவாமிகள். திருக்கோடிகா பண் - [illegible].

பாவணமேவுசொன்மாலையிற்பல
காவணங்கொள்ளையினவின்றசெய்கையர்
ஆவணங்கொண்டெமையாள்வராயினும்
கோவணங்கொள்கையர்கொள்ளிக்காடரே. (௧௯)

கீழ்பாவனை சாத்த.

திருநா. திருப்பாய்த்துறை திருக்குறுந்தொகை.

பட்டநெற்றியர்பான்மதிக்கீற்றினர்
கட்டமாடுவர்நள்ளிருளேமமும்
சிட்டனார்தென்பாய்த்துறைச்செல்வனார்
இட்டமாயிருப்பாரையறிவரே. (௨௰)

பரிவட்டம்.

மேற்படி சுவாமிகள். திருப்பருப்பதம் திருநேரிசை.

கட்டிட்டதலைகைகொண்டுகனலெரியாடிச்சீறிச்
சுட்டிட்டநீறுபூசிச்சுடுபிணக்காட்டாடி

விட்டிட்டவேட்கையார்க்குவேறிருந்தருள்கள்செய்து
பட்டிட்டவுடையராகிப்பருப்பதநோக்கினாரே. (௪௧)

சந்தனஞ்சாத்த.

மேற்படி சுவாமிகள். திருக்கீழ்வேளூர் திருத்தாண்டகம்.

ஆளானவடியவர்கட்கன்பன்றன்னை
யானஞ்சுமாடியைநானபயம்புக்க
தாளானைத்தன்னொப்பாரில்லாதானைச்
சந்தனமுங்குங்குமமுஞ்சாந்துந்தோய்ந்த
தோளானைத்தோளாதமுத்தொப்பானைத்
தூவெளுத்தகோவணத்தையரையிலார்த்த
கேளானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (௪௨)

பூஷணம்.

திருஞான. திருக்கைச்சினம் பண்-சீகாமரம்.

மங்கையோர்கூறுடையான்மன்னுமறைபயின்றான்
அங்கையோர்வெண்டலையானாடரவம்பூண்டுகந்தான்
திங்களொடுபாம்பணிந்தசீரார்திருமுடிமேற்
கங்கையினான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௪௩)

பூணூல்.

மேற்படி சுவாமிகள். திருநணா பண்-காந்தாரம்.

முத்தேர்நகையாளிடமாகத்தம்மார்பில்வெண்ணூல்பூண்டு
தொத்தேர்மலர்சடையில்வைத்தாரிடம்போலுஞ்சோலைசூழ்ந்த
அத்தேனளியுண்களியாலிசைமுரலவாலத்தும்பி
தெத்தேயெனமுரலக்கேட்டார்வினைகெடுக்குந்திருநணாவே. (௪௪

புஷ்பாஞ்சலி.

திருநா. திருவையாறு திருவிருத்தம்.

நின்போலமரர்கணீண் முடிசாய்த் திமிர்த்துகுத்த
பைம்போதுழக்கிப்பவளந்தழைப்பனபாங்கறியா
என்போலிகள்பறித்திட்டவிலையுமுகையுமெல்லாம்
அம்போதெனக்கொள்ளுமையனையாறனடித்தலமே. (சஇ)

இண்டைசாத்த.

மேற்படி சுவாமிகள். திருக்கச்சியேகம்பம் பண்-காந்தாரம்.

அண்டமாயாதியாயருமறையொடைம்பூதப்
பிண்டமாயுலகுக்கொர்மெய்ப்பொருளாம்பிஞ்ஞகனைத்
தொண்டர்தாமலர்தூவிச்சொன்மாலைபுனைகின்ற
இண்டைசேர்சடையானையென்மனத்தேவைத்தேனே. (சசு)

திருப்பள்ளித்தாமம் பத்திரஞ் சாத்த.

ஷை சுவாமிகள். திருப்பராய்த்துறை திருக்குறுந்தொகை.

போதுதாதொடுகொண்டுபுனைந்துடன்
தாதவிழ்சடைச்சங்கரன்பாதத்துள்
வாதைதீர்க்கவென்றேத்திப்பராய்த்துறைச்
சோதியானைத்தொழுதெழுந்துய்ம்மினே. (சஎ)

திருஞான. திருக்கச்சியேகம்பம் பண்-இந்தளம்.

கொச்சியேவன்னிகொன்றைமதிகூவிளம்
உச்சியேபுனைதல்வேடம்விடையூர்தியான்
கச்சியேகம்பமேயகறைக்கண்டனை
நச்சியேதொழுமின்மேல்வினைகையுமே. (சஅ)

போகாங்கமூர்த்திபூசைக்குத் தியானம்.

சிவதருமோத்தரம் பரிகிரியையியல்.

திருவுருவந்தெளிபளிங்குதிரிநயனம்பிறையுஞ்
செறிசடையர்வலக்கரத்திற்றிரிசூலம்வரதம்
கருதுகமற்றையகரத்திற்செபமாலையபயங்
காருணிகர்க்கீசானர்க்கவர்தங்குக்கணிட்டர்
திருவுருவங்கோங்கினலர்திருநயனங்கசமுன்
செப்பியதேதிருநாமர்தற்புருடதேவர்
வரியரவுமினம்பிறையுஞ்சடைமுடியின்வைத்தார்
மலரடியைமறவாதார்வல்வினையைமாய்ப்பார். (கக)

கரியவுருவெரியசடைகபாலநிரைமாலை
காளமுகங்கவிழ்தாடிகண்மூன்றுவட்டங்
கரதலநன்கொருநான்குங்கட்டுரைக்கும்படியே
கட்டினமுன்னிருநான்குகாமுமுனமன்றே
வெருவியிடமருவலரைவெருட்டியவுக்கிரமது
விக்கிரகாகோரமெனவிளம்புபெயருடையர்
இருபதமுமொருபொழுதுமறவாதேதபதப
வெண்ணுமவரிடர்வினையையிடிப்பாரகளொன்றும். (கஉ)

தேமொழியாளுமையென்னத்திருமுகமூன்றோடுந்
திலதமுதற்சிறப்புமிருளனகவிதச்செறிவும்
வாமமெனுந்தேவர்க்குவாய்த்தனவேசெம்மை
வடிவுமவர்கரதலங்கண்ணுறுதனில்வகுப்பே
சேமவுருத்திகழ்சங்கஞ்சடாமுடியிற்பிறையுந்
திரிநயனங்கரதலங்கள்செப்பியமுற்படியே
காமமறுசத்தியோசாதமெனவின்ற
காதற்குயர்தவரைவினைக்கவினோராசம் (கங)

அருவுருவமியர்க்குத்தவமென்றெளிக
[illegible]

[illegible]

திருவுருவங்களைமென்சிரத்தினுக்குந்தெளிக
 செடித்தவுருப்பனைத்துஞ்செப்பியமுற்படியே
திருவுருவஞ்சிரத்தாமென்றெளிக்கிகைக்குச்
 செடித்தவுருப்பனைத்துஞ்செப்பியமுற்படியே
திருவுருவம்வண்டினிறங்காணமுகங்கவசஞ்
 செடித்தவுருப்பனைத்துஞ்செப்பியமுற்படியே. (௯௨)

ஒவ்வொன்றேறதிருமுகமுநேத்திரங்கட்குணரி
 னுடலொளியுயிரவிமதியுதாசனனையொக்கும்
இவ்விரண்டேகரதலமும்வரமபயமதையும்
 இவ்விரண்டேவிழியுமெனவெண்ணிமிகவெழிலார்
செவ்வரத்தர்திருவுருவங்காதலமிரைந்தார்
 திருநயனமொருமூன்றுஞ்சினர்தடித்தகுராலும்
இவ்வகையெல்லாமுடையாத்தினனென்றியம்பும்
 இலாடியையிதயத்தினிருத்தினிடரிலையே. (௯௩)

நிவேதனஞ்செய்ய.

சுந்தர. திருக்கச்சியேகம்பம், பண் - தக்கேசி.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானையாதியையமரர்தொழுதேத்துஞ்
சீலந்தான்பெரிதும்முடையானைச்சிந்திப்பாரவர்சிந்தையுளானை
யேலவார்குழலாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற
காலகாலனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவா
[றே.

அடைக்காய்.

திருநா. திருப்புறம்பயம், திருத்தாண்டகம்.

[illegible]
 [illegible]
[illegible]
 [illegible]
[illegible]

சிவபூசைத் திரட்டு.

போகாதவேடத்தர்பூதஞ்சூழப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (௩௨)

தூபம்.

திருஞான. திருக்கழிப்பாலை, பண் - கௌசிகம்.

வெந்தருங்குலியப்புகைவிம்மவே
கந்தநின்றுலவுங்கழிப்பாலையார்
அந்தமும்மளவும்மறியாததோர்
சந்தமாலவர்மேவியசாந்தமே. (௩௩)

தீபம்.

திருநா. திருவையாறு, திருத்தாண்டகம்.

எல்லாவுலகமுமானாய்நீயே
யேகம்பமேவியிருந்தாய்நீயே
நல்லாரைநன்மையறிவாய்நீயே
ஞானச்சுடர்விளக்காய்நின்றாய்நீயே
பொல்லாவினைகளறுப்பாய்நீயே
புகழ்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
செல்வாயசெல்வந்தருவாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௩௪

மேற்படி சுவாமிகள். திருமறைக்காடு, திருத்தாண்டகம்.

தூண்டுசுடரனையசோதிகண்டாய்
தொல்லமரர்சூளாமணிதான்கண்டாய்
காண்டற்கரியகடவுள்கண்டாய்
கருதுவார்க்காற்றவெளியான்கண்டாய்
வேண்டுவார்வேண்டுவதேயீவான்கண்டாய்
மெய்ந்நெறிகண்டாய்விரதமெல்லாம்
மாண்டமனத்தார்மனத்தான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே.

நீறு சாத்த.

மேற்படி சுவாமிகள். திருவாரூர் பண் - காந்தாரம்.

நீறுமெய்ப்பூசவல்லானுநினைப்பவர்நெஞ்சத்துள்ளானும்
ஏறுகந்தேறவல்லானுமெரிபுரைமேனியினானும்
நாறுகரந்தையினானுநான்மறைக்கண்டத்தினானும்
ஆறுசடைக்கரந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௧௯)

கண்ணாடி.

மேற்படி சுவாமிகள். திருவாரூர், திருவிருத்தம்.

பூம்படிமக்கலம்பொற்படிமக்கலமென்றிவற்றால்
ஆம்படிமக்கலமாகிலுமாரூரினிதமர்ந்தார்
தாம்படிமக்கலம்வேண்டுவரேற்றமிழ்மாலைகளால்
நாம்படிமக்கலஞ்செய்துதொழுதுய்ம்மடநெஞ்சமே. (௨௦)

செபம் செய்து உதகம்பண்ண.

நமச்சிவாயப் பதிகம்.

சுந்தரர். திருப்பாண்டிக்கொடுமுடி, பண் - பழம்பஞ்சுரம்.

இட்டனும்மடியேத்துவாரிகழ்ந்திட்டநாண்மறந்திட்டநாள்
கெட்டநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௨௧)

குருவர்ச்சனை.

மேற்படி சுவாமிகள், திருக்காளத்தி, பண்-நட்டராகம்.

மறிசேர்கையினனேமதமாவுரிபோர்த்தவனே
குறியேயென்னுடையகுருவேயுன்குற்றேவல்செய்வேன்
நெறியேநின்றடியார்நினைக்குந்திருக்காளத்தியுள்
அறிவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (௨௨)

[illegible]

ஏழாம் கூறு.

திருஞா. திருவாரூர்ப்பதிகம், பண்-நட்டபாடை.

குற்றமறுத்தார் குணத்தினுள்ளார் கும்பிடுவார்தமக்கன்புசெய்வார், ஒற்றைவிடையினர் நெற்றிக்கண்ணா ருறைபதியாகுஞ்செறி கொண்மாடம், சுற்றிய வாசலின்மாதர்விழாச் சொற்கவி பாடநிதானநல்கப், பற்றியகையினர் வாழுமாரூர்ப் பசுபதிச்சரம்பாடு நாவே. (௧)

பிரதக்ஷிணம்.

திருநா. திருவாரூர், திருத்தாண்டகம்.

மதிதருவனெஞ்சமேயுஞ்சபோக
வழியாகுமிதுகண்டாய்வானோர்க்கெல்லாம்
அதிபதியேயாரமுதேயாதியென்று
மம்மானேயாரூரெம்மையாவென்றும்
துதிசெய்துதுன்றுமலர்கொண்டுதூவிச்
சூழும்வலஞ்செய்துதொண்டுபாடிக்
கதிர்மதிசேர்சென்னியனேகாலகாலா
கற்பகமேயென்றென்றேகதறுகில்லே. (௪)

கூத்தாட.

மெய்ப்படி சுவாமிகள். கோயிற்றிருநேரிசை.

பார்த்திருந்தடியனேனான் பரவுவன்பாடியாடி,
மூர்த்தியேயென்பனுன்னைமூவரின்முதல்வனென்பன்
ஏத்துவாரிடர்கெடுப்பாயில்லைச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன்கூத்துக்காண்பான்கூடநான்வந்தவாறே. (௧௦)

தண்டம்பண்ணுமுன் செய்யுந்துதி.

சுந்தர. திருப்புன்கூர். பண்-தக்கேசி

[illegible]

ந்தகாலன்றனாருயிரதனை
வவ்வினாய்க்குன்றன்வன்மைகண்டடியேன்
எந்தைநீயெனைநமன்றமர்நலியி
லிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௧௬)

நற்றமிழ்வல்லஞானசம்பந்த
னாவினுக்கரையனாளைப்போவானும்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி
கண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்
கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன்
பொற்றிரண்மணிக்கமலங்கண்மலரும்
பொய்கைசூழ்திருப்புன்கூருளானே. (௧௭)

இயக்கர்கின்னரர்யமனொடுவருண
ரியங்குதீவளிஞாயிறுதிங்கள்
மயக்கமில்புலிவானரநாகம்
வசுக்கள்வானவர்தானவரெல்லாம்
அயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனை
யர்ச்சித்தார்பெறுமாசுருள்கண்டு
இசைப்பொன்றின்றிநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௧௮)

[illegible]ண்டம்பண்ணை.

௱௧௩. [illegible]

[illegible]

மேற்படி சுவாமிகள். திருக்கடம்பூர். குறுந்தொகை.

கன்கடம்பனைப்பெற்றவள்பங்கினன்
தென்கடம்பைத்திருக்கரக்கோயிலான்
தன்கடனடியேனையுந்தாங்குதல்
என்கடன்பணிசெய்துகிடப்பதே. (எ0)

மேற்படி சுவாமிகள். தனித்திருக்குறுந்தொகை.

வாழ்த்தவாயுநினைக்கமடநெஞ்சுந்
தாழ்த்தச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர்தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே. (எக)

ஷை சுவாமிகள். திருமருகல், குறுந்தொகை.

பெருகலாந்தவம்பேதைமைதீரலாம்
திருகலாகியசிந்தைதிருத்தலாம்
பருகலாம்பரமாயதோரானந்தம்
மருகலானடிவாழ்த்திவணங்கவே. (எஉ)

எழுந்து தோத்திரம்பண்ண.

மேற்படி சுவாமிகள். திருக்கடம்பூர், குறுந்தொகை.

பொய்தொழாதுபுலியூரியோன்பணி
செய்தெழாவெழுவார்பணிசெய்தெழா
வைதெழாதெழுவாரவரென்கணீர்
கைதொழாவெழுமின்கரக்கோயிலே. (எங)

மேற்படி சுவாமிகள். தனித்திருத்தாண்டகம்.

ப்பனீயம்மைநீயையனுநீ
யன்புடையமாமனுமாமியுநீ
ஒப்புடையமாதருமொண்பொருளுநீ
யொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ

துய்ப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீ
துணையாயென்னெஞ்சந்துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீ
யிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே. (எச)

குலம்பொல்லேன்குணம்பொல்லேன்குறியும்பொல்லேன்
குற்றமேபெரிதுடையேன்கோலமாய
கலம்பொல்லேனான்பொல்லேன்ஞானியல்லே
னல்லாரோடிசைந்திலேனடுவேநின்ற
விலங்கல்லேன்விலங்கலாதொழிந்தேனல்லேன்
வெறுப்பனவுமிகப்பெரிதும்பேசவல்லேன்
இலம்பொல்லேனிரப்பதல்லாலீயமாட்டே
னென்செய்வான்றோன்றினேனேழையேனே. (எரு)

ஷை சுவாமிகள். திருவாவடுதுறை. திருத்தாண்டகம்.

திருவேயென்செல்வமேதேனேவானோர்
செழுஞ்சுடரேசெழுஞ்சுடர்நற்சோதிமிக்க
உருவேயென்னுறவேயென்னூனேயூனி
னுள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற
கருவேயென்கற்பகமேகண்ணேகண்ணிற்
கருமணியேமணியாடுபாவாய்காவாய்
அருவாயவல்வினைநோயடையாவண்ண
மாவடுதண்டுறையுறையுமமரரேறே. (எசு)

மேற்படி சுவாமிகள். திருவாரூர். திருத்தாண்டகம்.

ஆடுவாய்நீநட்டமளவிற்குன்றா
வவியடுவாரருமறையோரறிந்தேனுன்னைப்
பாடுவார்தும்புருவுநாரதாதி
பரவுவாரமரர்களுமமரர்கோனும்
தேடுவார்திருமாலுநான்முகனுந்
தீண்டுவார்மலைமகளுங்கங்கையாளும்

கூடுமோவாயடியேன்செய்குற்றேவல்
குறையுண்டோதிருவாரூர்குடிகொண்டீர்க்கே. (எஎ)

மேற்படி சுவாமிகள். போற்றித்திருத்தாண்டகம்.

சங்கரனேநின்பாதம்போற்றிபோற்றி
சதாசிவனேநின்பாதம்போற்றிபோற்றி
பொங்கரவாநின்பாதம்போற்றிபோற்றி
புண்ணியனேநின்பாதம்போற்றிபோற்றி
அங்கமலத்தயனொடுமாலுங்காணா
வனலுருவாநின்பாதம்போற்றிபோற்றி
செங்கமலத்திருப்பாதம்போற்றிபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி. (எஅ)

திருநா. திருக்கடவூர்விரட்டானம். திருநேரிசை.

பழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன்மாயமுநதெரியகில்லேன்
அழிவிடைத்தாயவாழ்க்கையைவாலவலைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேன்கடவூர்வீரட்டனாரே. (எக)

மேற்படி சுவாமிகள். திருவதிகைவீரட்டானம், திருநேரிசை.

நீதியால்வாழமாட்டேனித்தலுந்தூயனல்லேன்
ஓதியுமுணரமாட்டேனுன்னையுள்வைக்கமாட்டேன்
சோதியேசுடரேயன்றன்றூமலர்ப்பாதங்காண்பான்
ஆதியேயலர்துபோனேனதிகைவீரட்டனாரே. (அ0)

கழித்திலேன்காமவெந்நோய்காதன்மையென்னும்பாசம்
ஒழித்திலேனூன்கணோக்கியுணர்வெனுமிமைதிறந்து
விழித்திலேன்வெளிறுதோன்ற வினையெனுஞ்சரக்குக்கொண்டே
னழித்திலேனயர்த்துப்போனேனதிகைவீரட்டனாரே. (அக)

மேற்படி சுவாமிகள். திருக்கோடிகா, திருநேரிசை.

கேழல்வெண்கொம்புபூண்டகிளரொளிமார்பினானை
ஏழையேனெழையேனென்செய்கேனெந்தைபெம்மானை

ம்மாழையொண்கண்ணினார்கள்வலைதனின்மயங்குகின்றேன்
கூழையேறுடையசெல்வாகோடிகாவுடையகோவே. (அஉ)

மேற்படி சுவாமிகள். தனித்திருநேரிசை.

தொண்டனேன்பிறந்துவாளாதொல்வினைக்குழியில்வீழ்ந்து
பிண்டமேசுமந்துநாளும்பெரியதோரவாவிற்பட்டேன்
அண்டனேயமரர்கோவேயறிவனேயஞ்சலென்னாய்
தெண்டிரைக்கங்கைசூடுந்திகழ்தருசடையினானே. (அங)

மேற்படி சுவாமிகள். கோயில், திருவிருத்தம்.

படைக்கலமாகவுன்னாமத்தெழுத்தஞ்செனாவிற்கொண்டேன்
இடைக்கலமல்லேனெழுபிறப்புமுனக்காட்செய்கின்றேன்
துடைக்கினும்போகேனொழுதுவணங்கித்தூநீறணிந்துன்
அடைக்கலங்கண்டாயணிதில்லைச்சிற்றம்பலத்தரனே. (அச)

மேற்படி சுவாமிகள். திருப்பாதிரிப்புலியூர், திருவிருத்தம்.

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே. ()

சுந்தர. திருவாவடுதுறை. பண் - தக்கேசி.

ஒப்பிலாமுலைபாளொருபாகாவுத்தமாமத்தமார்தருசடையாய்
முப்புரங்களைத்தீவளைத்தங்கேமூவருக்கருள்செய்யவல்லானே
செப்பவாணிழற்கீழிருந்தருளுஞ்செல்வனேதிருவாவடுதுறையுள்
அப்பனேயென்னையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே.

குறைவிலாநிறைவேகுணக்குன்றேகூத்தனேகுழைக்காதுடையானே, உறவிலேனுனையன்றிமற்றடியேனொருபிழைபொறுத்தா லிழிவுண்டோ, சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்ச்செம் பொனே திருவாவடுதுறையுள், அறவனேயென்னையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (அஎ)

சுந்தர. திருவிடைமருதூர். பண் - தக்கேசி.

கொடுக்ககிற்றிலேனொண்பொருடன்னைக்குற்றஞ்செற்றமிவை முதலாக, விடுக்ககிற்றிலேன் வேட்கையுஞ் சினமும்வேண்டிலைம் புலனென்வசமல்ல, நடுக்கமுற்றதோர்மூப்புவந்தெய்தநமன்றமர் நரகத்திட லஞ்சி, இடுக்க ணுற்றன னுய்வகையருளா யிடைமரு துறையெந்தைபிரானே.

சுந்தர. திருமழபாடி. பண் - நட்டராகம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
அன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௯)

ஷை சுவாமிகள். திருக்கடவூர்வீரட்டம். பண் - நட்டராகம்.

மண்ணீர்தீவெளிகால்வருபூதங்களாகிமற்றும்
பெண்ணோடாணலியாய்ப்பிறவாவுருவானவனே
கண்ணாருண்மணியேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அண்ணாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௰)

திருவாசகம்.

திருச்சதகம்.

விச்சதின்றியேவிளைவுசெய்குவாய்
  விண்ணுமண்ணகமுழுதும்யாவையும்
வைச்சுவாங்குவாய்வஞ்சகப்பெரும்
  புலையனேனையுன்கோயில்வாயிலில்
பிச்சனாக்கினாய்பெரியவன்பருக்
  குரியனாக்கினாய்தாம்வளர்த்ததோர்
நச்சுமாமரமாயினுங்கொலார்
  நானுமங்ஙனேயுடையநாதனே. (௧௧)

அடைக்கலப்பத்து.

மாவடுவகிரன்னகண்ணிபங்காநின்மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேயிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததுள்ளம்
ஆகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (கஉ)

குழைந்த பத்து.

அன்றேயென்றனாவியுமுடலுமுடைமையெல்லாமுங்
குன்றேயனையாயென்னையாட்கொண்டபோதேகொண்டிலையோ
இன்றோரிடையூறெனக்குண்டோவெண்டோண்முக்கணெம்மா
நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்நானோவிதற்குநாயகமே. [னே

திருவிசைப்பா.

உண்டதேயுண்டுமுடுத்ததேயுடுத்துமடுத்தடுத்துரைத்ததே
யுரைத்துங், கண்டதேகண்டுங்கேட்டதேகேட்டுங்கழிந்தனகடவ
நாளெல்லாம், விண்டதாமரைமேலன்னம்வீற்றிருக்கும்விழாவரு
வீதிவெண்காடா, அண்டரேகாணவம்பலத்தாடுமையனேயுய்யு
மாறருளே. (க௪)

சேந்தனார் திருப்பல்லாண்டு.

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னுள்
ஆலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (க௫)

பெரியபுராணம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம். (க௬)

மறவாமையானமைத்தமனக்கோயிலுள்ளிருத்தி
உறவாதிதனையுணருமொளிவிளக்குச்சுடரேற்றி

இறவாதவானந்தமெனுந்திருமஞ்சனமாட்டி
அறவாணர்க்கன்பென்னுமமுதமைத்தர்ச்சனைசெய்வார். (கஎ)

இறவாதவின்பவன்புவேண்டிப்பின்வேண்டுகின்றார்
பிறவாமைவேண்டுமீண்டும்பிறப்புண்டேலுன்னையென்று
மறவாமைவேண்டுமின்னும்வேண்டுநான்மகிழ்ந்துபாடி
யறவாநீயாடும்போதுன்னடியின்கீழிருக்கவென்றார். (கஅ)

கோயிற்புராணம்.

கற்பனமாய்ப்பரபதமாய்த்தாவிலனுபூதியதாய்
அற்புதமாயாரமுதாயானந்தவிலயவொளிப்
பொற்பினதாய்ப்பிரிவிலதாய்ப்பொருளாகியருளாகுஞ்
சிற்பரமாமம்பரமாந்திருச்சிற்றம்பலம்போற்றி. (கக)

திருக்கோவையார்.

சேயத்தாய்நென்னலென்னைப்புணர்ந்துநெஞ்சநெகப்போய்
ஆயத்ததாயமிழ்தாயணங்காயரனம்பலம்போல்
தேயத்ததாயென்றன்சிந்தையதாய்த்தெரியிற்பெரிது
மாயத்ததாகியிதோவந்துநின்றதென்மன்னுயிரே. (க00)

ஓமம்.

திருநா. திருக்கடம்பந்துறை. திருக்குறுந்தொகை.

பூமென்கோதையுமையொருபாகனை
யோமஞ்செய்துமுணர்மின்களுள்ளத்தாற்
காமற்காய்ந்தபிரான்கடம்பந்துறை
நாமமேத்தநந்தீவினைநாசமே. (க0க)

பெட்டகக் கோயிலில் எழுந்தருளப்பண்ண.

சுவாமிகள். திருக்கச்சியேகம்பம். பண் - காந்தாரம்.

கைப்போதுமலர்தூவிக்காதலித்துவானோர்கள்
முப்போதுமுடிசாய்த்துத்தொழநின்றமுதல்வனை

அப்போதுமலர்தூவியைம்புலனுமகத்தடக்கி
எப்போதுமினியானையென்மனத்தேதகைத்தேனே. (கoஉ)

திருஞானா. திருமறைக்காடு. பண்-இந்தளம்.

சதுரம்மறைதான்றுதிசெய்துவணங்கும்
மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
இதுநன்கிறைவைத்தருள்செய்கவெனக்குன்
கதவந்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே. (கoக)

திருஞானா. திருக்குடவாயில். பண்-நாந்தாரம்.

அடியார்ந்தலைங்கழலுஞ்சிலம்புமார்ப்பவங்கையிற்
செடியார்ந்தவெண்டலையொன்றேந்தியுலகம்பலிதேர்வீர்
குடியார்ந்தமாமறையோர்குலாவியேத்துங்குடவாயில்
படியார்ந்தகோயிலேகோயிலாகப்பயின்றீரே. (கoச)

சண்டேசுர பூசை.

ஷை சுவாமிகள். திருக்குறுக்கை. திருநேரிசை.

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
அழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதைதாளைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (கoரு)

வெண்பா.

நீலகண்டன்பங்கயத்தானேசமாயுள்ளிருத்தும்
பாலனேஞானப்பாஞ்சுடரே—ஆலமுண்டான்
வண்டாரணிபுயனேவள்ளலைப்பூசித்தபயன்
சண்டேசனேபணிக்கேதன்று. (கoசு)

பின்பு பிராயச்சித்தார்த்தம் அகோரமந்திரஞ் ஜபித்து
இயன்றமட்டுந் தோத்திரம் பண்ணுக.

சிவபூசைத்திரட்டு முற்றும்.

[வேறு பிரதிகளிற் காணப்பட்டவைகளுட் சில பாக்கள்.]

ஸ்நானம்பண்ண.

திருநா. திருவாலங்காடு, திருத்தாண்டகம்.

ஒன்றாயுலகனைத்துமானார்தாமே
 யூழிதோறூழியுயர்ந்தார்தாமே
நின்றாகியெங்குநிமிர்ந்தார்தாமே
 நீர்வளிதீயாகாசமானார்தாமே
கொன்றாடுங்கூற்றையுதைத்தார்தாமே
 கோலப்பழனையுடையார்தாமே
சென்றாடுதீர்த்தங்களானார்தாமே
 திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

திருமூலநாயனார், திருமந்திரம்.

அறிவாரமர்களாதிப்பிரானைச்
செறிவானுறைபதஞ்சென்றுவலங்கொண்
மறிவார்வளைக்கைவருபுனற்கங்கைப்
பொறியார்புனன்மூழ்கப்புண்ணியராமே.

விபூதி தரிக்க.

திருஞான. திருவாலவாய் திருநீற்றுப்பதிகம். பண்-காந்தாரம்.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்றிரு வாலவாயான் றிரு நீறே.

திருநா. தனித்திருநேரிசை.

சந்திரற்சடையில்வைத்தசங்கரன்சாமவேதி
அந்தரத்தமரர்பெம்மானானல்வெள்ளூர்தியான்றன்
மந்திரநமச்சிவாயவாகநீறணியப்பெற்றால்
வெந்தறும்வினையுநோயும்வெவ்வழல்விறகிட்டன்றே.

திருவெண்காட்டடிகள். (பிராயச்சித்தார்த்தம்.)

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங்கசிந்துருகி
நில்லாப்பிழையுநினையாப்பிழையுநின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்ப் பள்ளு

கமலை ஞானப்பிரகாசர்

பதிப்பாசிரியர்

திரு. சோமசுந்தர தேசிகர்

All rights reserved]

{ விலை தனிப்பிரதி அணா 4.
ஒன்பது பிரதி ரூ. 2.

சிவமயம்

முகவுரை

கருணாகரன்செய்த திருப்பணியைக்
  கருதிநிலமாயக் கண்டுசெய்து
பொருளானதுலகத் தொன்றுடையானைப்
  பூமியானைப் போலாரோ
திருவாரூரில் வணங்கத்
  தியாகராசப் பள்ளுக்கொரு
மருவாரப்பணிய வரங்கேற்றி
  வைத்தார்சோழ மண்டலமே.

என்பது சோழமண்டலசதகத்திற் கண்ட எண்பத்தெட்டாவது செய்யுள். இச்செய்யுளிலே காணும் தியாகராசப் பள்ளு, தியாகப்பள்ளு என்றும் தியாகேசர் பள்ளேசல் என்றும் பெயர் பெறும். பள்ளு 'பள்ளிசை' யெனவும் 'பட்பிரபந்தம்' எனவும் பிற்காலத்திலே வழங்கலாயின. பள்ளு தொண்ணூற்றாறு தமிழ்ப் பிரபந்த வகையில் ஒன்றாகும் என்ப. மிகப் பழைய நூலாகக் கருதப்படும் பன்னிருபாட்டியலிலே

புரவலர் கூறி யவனவாழ் கென
றகல்வயற் றொழிலை யொருமை யுணர்த்தனள்
எனவரு மீரைந் துழத்திப் பாட்டே.

என்றொரு சூத்திர யாப்பு காணப்படுகிறது. அதனிற் கண்டவாறு பத்துப் பாக்கள் கொண்டதே உழத்திப்பாட்டாதல் வேண்டும். இதுபொழுது கண்டு ஆராயப்படும் பள்ளின் வகை அச்சூத்திரத்திற் பாற்படுவ தன்று.

வீரமாமுனிவரென்ற ஐரோப்பியத் தமிழ்ப் புலவர் இயற்றிய சதுரகராதியில பள்ளின் வகை கூறப்பட்டுளது. அதற்குரிய ஆதாரம் இதுவெனத் திட்டமாகக கூறுவதற்கில்லை. நாமறிந்தவரையிற் பள்ளுப் பிரபந்த வகையில் முற்படக் காணப்படுவது திருவாரூர்ப் பள்ளே. இதனில் கடவுள் வாழ்த்துக்குப் பின்னர் பள்ளன் பள்ளிகள் வரவு, ஆற்று வரவு, மீனினந்திரிதல், குயில் கூவுதல், மழை பெய்து ஆறு பெருகுதல், பண்ணைக்காரன் வரவு,ஏர் விதை கணக்கு, பள்ளிகளின் சச்சரவால் பள்ளன் தொழுவிலிருத்தல், மூத்தபள்ளி பள்ளனை மீட்டல், உழவு, பயிரேற்றுகை கண்டுமுதல், பள்ளிகள் ஏசல், உறவு, வாழ்த்து இவைகள் உட்பொருளாகக் காணப்படுகின்றன. இதனையடுத்து அடியொற்றித் தோன்றியதாகப் புலப்படும் குருகூர்ப் பள்ளிலே மேற்கூறியவைகளோடு நாட்டின் பெருமை பள்ளனுக்கு இளைய பள்ளி மருந்திடுகை, மருந்தின் குணம், நடவு முதலியவைகள் விரித்துக் கூறப்பட்டுள்ளன. இவற்றின்பின்னே உண்டான பள்ளுப் பிரபந்தங்களில் கவிகளின் மனப்பாங்கிற்கேற்ப பலவகையிலும் அவைவிரித்துக் கூறப்பட்டுள்ளன.

பள்ளு நாடகமாக நடிக்கப்பட்டுவந்தது. அது நாடகமாக நடிக்கப்படுங்கால் நாடகத்திறகு அங்கங்களாகவுள்ள கட்டியக்காரன் வரவு, நூல் கொண்டார் பெருமை முதலாயினவெல்லாம் சேர்க்கபபட்டு நடிக்கப்பட்டு வந்தன. அவ்வாறே இந்தத் திருவாரூர்ப் பள்ளும் நாடகமாக நடிக்கப்பட்டதாகும். ஆண்டுதோறும் ஆவணித்திங்களில் பவித்திரோற்சவம் என்றொரு திருவிழா நடைபெற்றுவந்தது. அத்திருவிழாக் காலத்தில் சாரங்கதரன், திரிபுரன், பாணாசுரன், மன்மதன், மநுநீதிகண்ட சோழன் இவர்களது சரித்திரங்

களும், பாவை கல்லியாணம், குறவஞ்சி, பள்ளு இவை களும் நாடகமாக ஆடப்பட்டு வந்தன. நடித்தற்கேற்ப மூல நூல்களில் வேண்டுவன கூட்டியும் குறைத்தும் யாக்கப்பட்டு நடிக்கப்பட்டன. அவ்வாறே இந்தத் திருவாரூர்ப் பள்ளி லும் காப்புச் செய்யுளுக்குப்பின்

அரியசதா சிவமொரு ஆணடை யாக
அருளுமீ சுரன்றனைப் பள்ள னாக
இருசத்தி தனையுமே பள்ளி ராக
யிசைந்தநந்தி கணக்கனா யியம்பிப் பின்னு
மருள்சத்தியினை யிருதோழி யாகச் செய்து
மாலதனை யுழவு தொழிற்கே யிசைத்து
பிரமனையுந் தாளமதைக் கையிலேந்தப்
பெருஞானப் பள்ளென்னும் ப்ரபந்தஞ் சொல்வார்.

என்றும்

மலைமகளசோ காவிரிசூழ் சோழ நாட்டில்
மகிழ்கமலைத் தியாகேச னருளி னாலே
அலைமோதி மணிமுத்தா நதியில வெள்ளம்
ஆரப்பரித்தருக கரைபு ரண்டு வாரவே
நிலைபெறுநாம பயிரேற உழவு செய்ய
நிச்சயித்துப் பள்ளாகளை யழைக்கப் பின்னும்
தலைமையுள காரியங்கள பலவும பாக்கச்
சபையில்கட் டியக்கார னேனறி னேனே

என்றும்

பல்லவி

ஐயனே யுனையன்றி வேறுண்டோ

அநுபல்லவி

வையம புகழு மாரூர் வசந்தத்தியா கேசரே

மண்டலத்திலும்மைப் போலே
மகராஜ ருணடோ மேலே
யெணடிசையு ரியான தாலே
இரட்சிப் பதுவு முனறன பாலே (ஐயனே)

என்பதும் போன்ற செய்யுட்கள் இடைமடுக்கப் பட்டு சற்றேறக் குறைய முபபது ஆண்டுகளுக்கு முன்னர் வரை ஆடப்பட்டு வந்தன. இவவாறு பெருமைபொருந்திய இந்த நூலை யியற்றிய ஆசிரியர் கமலை ஞானப்பிரகாசர் என்ற பெரியார் ஆவர். பதினாறும் நூறறாண்டின இடைக் காலத்திற் றிகழ்ந்தவர். இவர் திருவாரூரிலே பிறந்து வளர்ந்து உரிய காலத்தே கல்வி கற்றுப் பெரியோரோய் வாழ்ந்தவர். தருமை ஞானசம்பந்தர், மாசிலாமணிச சம்பந்தர் முதலா யினாது ஆசிரியர். பல நூல்களியற்றியவர். இவரது சரித்திர விரிவு பதினாறும் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர் வரலாற்றிற் கூறப்பட்டுள தாகலின் ஆண்டுக் காண்க.

இனி, இந்நூலின் றிறனை முன்னர்க் காட்டிய 'அரிய சதாசிவ......சொலவார்' என்ற செய்யுள் இனிது விளக்கும். இச்செய்யுள் 'ஞானப்பிரகாசமான்மிய'த்திலுள்ள எ௬-வது செய்யுளாகும். இந்நூலை யரங்கேறறி வைததவர் நனனிலந் தாலூக்காவிலுள்ள 'நாலொதசொன்று' என்ற ஊரிலே யிருந்த பூமிநாதர் என்ற செல்வர். இவரை நூலிலே 29, 4064, 70-ல் புகழ்ந்துள்ளார். இந்நூல் மேலே கூறியாங்கு உருத்திரகணிகையரைக் கொண்டு நாடகமாக நடிக்கப்பட்டு வந்தது. இது வெறும் நாடகமாக மாத்திரமன்றி பரதநாட்டி யமுஞ் சேர்த்து நடிக்கப்பட்டது. இப்பள்ளைக் கோயிலில்

ஆடி முடிந்தவுடன், அடியவர்கள் ஆசிரியரான ஞானப் பிரகாசரது இல்லஞ் சென்று வாழ்த்துப் பாடித் தாம்பூலம் பெற்று, கோயிலதிகாரி வீடு சென்று திரும்புவர். இவ்வாறு பலவகையிலுஞ் சிறந்த இந்த நூல் இதுவரையில் அச்சேறாமலே யிருந்தது. சென்ற ஆண்டில் திரு உலகநாத பிள்ளையவர்கள் தஞ்சையில் சரசுவதி மாலிலுள்ள பிரதிகளைப் பார்த்துப் பிரதி யெடுத்துத் 'தமிழ்ப் பொழி'யில் வெளியிட்டார். அது அத்துணைத் திருத்தமுடையதன்று. பல பிரதிகளைப் பார்த்துத் திருத்தமாக இதுபோது இதனை வெளியிட்டுள்ளேன். பின்னும் பல பிழைகள் இருத்தலுங் கூடும். குற்றம் நீக்கிக் குறைபெய்து கொள்ளுதல் கற்றறிந்த மாந்தர் கடனும்.

இலக்கண விளக்க ஆசிரிய பரம்பரை

திரு. சோமசுந்தர தேசிகன்.

செய்யுள் முதற்குறிப்பு

அடைந்து	20
அணடாமனே	12
அரியநாயகம	51
ஆணட	72
ஆதாரமான	69
ஆரவமிகுநத	23
ஆலகந்தரா	63
ஆலில்நினற	45
இரவுதனே	52
இளவிதை	38
இன்றுணே	55
இன்னேரம்	53
உரையடுதத	48
ஊரூாகள	31
ஊற்றமுள்ள	30
எனனே யென்னே	68
கசசைகட்டி	7
கந்தமருவும	61
கமலேயுமெண	36
கலந்து	24
கழையேறு	18
கறுத்தமெய	35
கனததமேக	17
காலமுமந்தி	13
குஞசர	9
குயிலுககு	16
கைததலஙகள	70
கோடுமையேன்	44
கோட்டைகட	37
சனகாதி	4
சீர்பரவு	1
சேஙகைககுறி	25
சேணமருவும	43
சோலேயழகா	59
தனகுழவி	56
தாளுஞ்	5
தததாளுடன	[illegible]
துஙகமலே	57
தேணடிரை	65
தெணணீர	20
தெளிசெந்	54
தெளிததேன	58
தேடரப்பாலே	19
தொழுதபோ	46
நறகவிதை	71
நாரிபஙகா	41
படிதத	62
பலவகை	39
புகழபடைதத	40
புரணடு	22
புலிமீதிலே	29
பூமாதொரு	2
பெருஙகட	27
பைஙகமல	8
பொறகடக	34
பொனபரப்	11
போரஙகமா	6
மஙகையாட	60
மாயககள்ளி	67
யாயாபாகனா	52
முடிககாலன	49
முணடகநாபி	15
மேளளவே	4[illegible]
மேயசீரஙக	4[illegible]
மேவுமை	[illegible]
வசிரமா	5[illegible]
வளவிலுஞ்	6[illegible]
வாடுகினறுள	2
வாளே திருக்	2[illegible]
விரவுசிலே	1[illegible]
வீக்கியவெ	3

சிவமயம்

திருவாரூர்ப் பள்ளு

காப்பு

1. சீர்பரவு மாரூர்த் தியாகர்க்குச செந்தமிழால்
பார்புகழும் பள்ளேசல் பாடவே—வார்மருவுங்
கொங்கையுமை யாள்பாலனுங் குஞ்சரனும் வேலவனும்
கங்கைசர சோதியுமே[1] காப்பு

வாதாவி விநாயகர்

2. பூமாதொரு மாதவ முநி[2] துறை
நீராடிய வாவியி னறைகமழ
பூகாடவி மேவிய[3] பொழில்களும் எழில்வீறப்
பாமாதிசை வீறிய புகழ்பயில
ஆரூரர் தியாகர்த மனமகிழ்
பாவானபள் ளேசலி னிசைவகை பலகூற
ஏமாசல மாகிய புயமிசை
யாகாச மளாவிய பணாமணி
யேகாசம தாமென வணிதரு மியலாளன்
மாமால்மரு கேசன்முன் வருமொரு
போர்மாமத வாரண முகமுள
வாதாவி விநாயக னிருபத மறவேனே.

(பிரதி பேதம்) 1. சரசுதியுங. 2. மினி. 3. தாவிய.

முருகக் கடவுள்

3. மேவுமைகண்டப[1] பெருமானைப் புகழ்
வீதி விடங்கப் பெருமான் திரை
மேவிலை விடர்புத குமுதநாமென விரும்பிய
பெருமாள்
தேவர கண்டப் பெருமானைக் கறை
தாவிய கண்டப் பெருமானை மிசை
சீர்பெறு வுகந்து பண் ஆர ரவி னிசைபாட
வாவி நிறம்பொற[2] கலாபம
யூர மெனுநெடுஞ்சொற் பரிப் திணில்
வானவர் தம்பொற் பதிகாவல செய் வடிவேலன்
ஆவலுடன் கைத்தலமுய்ய கொடு
மேவிவர் மங் கைக்குயாகா முக
ஞறு முகமும் பொற் பதந்தா னினில் நவில்வேனே[3]

கமலாலய அம்மை

4. சனகாதிகள்[4] சேவடியிணை தொழ
வடதாருவின் விழுமி லருமறை
தனையோதிய நிச்சிக ரிமையவர் தமையாள்வார்
அனமேனமுன ஞந்த லரியவர்
அருளாயமா தியாகர் தம் மனமகிழ்
அடைவாயபள் ளொசலி னிசைவகை நசைகூர
இனகோடியை நேர்தரு மெழிலினள்
திரிசூலி மனோன்மணி திரிபுரை
யிமயாசல மேவிய வுமையவ ளுமையாள்வாள்

(பி - ம்) 1. மகண்ட, 2. பெற்ற, 3. மறவேனே.
4. சனகாதியா.

கனகாசல மாகிய முலையினை
அருணாசல மாகிய நிலையினை
கமலாலய நாயகி யிருபத மறவேனே.

இன்னிசைக் கலிப்பா

5. காருந்த சிலம்பாந் தடவரையுங்[1] கனகிரியுந்
தோருந்த செயவந்தித் தொட்டமற வாதருள
ஏருங் கருணை முகுந்த லடியவரை
யாரும் பெருமானென்ன ஞாளும் பெருமானே

வன்மீகப்பள்ளி சீரங்கப்பள்ளிகளுடன்
வன்மீகநாதப் பள்ளன் வரவு—சிந்து

6. போரங்க மானநிலை மாரவங்க மேவிரிய
போரூரந் திருநகரில் மேவா வரும்பா
கூரங்க வேல்விழிகள் கோரங்க மாலைதொரு
குற்றிடைகொடி தவண்டு தலைதலைய
தாரங்க மானகுழல் காரங்க மாலைவண்டு
தந்தனதன தென்னவன்று[2] தமிழ்பாட
வாரங்க மானகொங்கை சீரங்கப் பள்ளியுடன்
வன்மீக நாதப் பள்ளன் தோன்றினனே.

7. கச்சைகட்டிச் சுளிமீறு கள்ளூறிகள் பருகிக்
களிதத்தேப்ப மிட்டுவிழிக்[3] கண்கள் சிவப்ப
மெச்சுமிள நகைசெய்து மீசைதனை முறுக்கி
வெண்ணீறு தனைமுகம் பூசி லணிந்து

(பி - ம்) 1. தடவரைக. 2. தந்தன தனனென்று
3. வெறி.

பச்சைமணித் தொண்டிகட்டிப் பவளத்தாழ்
வடம்[1] கட்டிப்
பருக்கச்செந் திரிகைத்[2] தொப் பாரமுங் கட்டி
வசிரமணிக் கொட்டிமணித் தோளின்மிசைகொண்ட
வன்மீக நாதப்பள்ளனைத் தோன்றி னானே[4]

வன்மீகப் பள்ளத்தி

8. பைங்கமலத் திருமுகம் வெயர்வெழ[5]
பாதமலர் பரிபுர மொலியெழ[6]
படைவேல்விழிக் கடைபோர்செய
மகரக்[7] குழையசைய
அங்கைமலர்ச் சரிவளை யசைதர
அணிமுறுவற் சிறுநகை யொளிதர
அளகாடவி நெகிழ்வுறவே
யளியினமிசைபாடக்[8]
கங்கைதனைச் சடையணி பெருமாள்
காலனைக்கா லாலடர்த்திடு பெருமாள்
கணைவேளுடல் பொடிபடவே[9] செய்த
கண்ணுதற்பெருமாள்
தென்கமலைப்[10] பதியுறை பெருமாள்
தேவர கண்டப்பெரு மாள்தம்
திருநாமம்பாடியாடிப்
பள்ளத்தி தோன்றினாளே[11]

(ஒ - ம்) 1. ...ரவடம். 2. சேநதிருகக. 3. தோனற, 4. இப்பா துருகூர்ப் பள்ளு 6-ல் சிறிது வேறுபாடுடன் காணப் படுகிறது. 5. வெயாவுற. 6. சரிவளை யசைதர. 7. மலடம். 8. அளி மகிழ்ந்னளிசை பாட. 9. வெரி செய். 10. செஙகமலை. 11. பள்ளத்திகள் தோனறினரே.

9 குஞ்சரமேய துணைமுலை யசையக்
கோவைமணித் திரள்பல புரளக்
கோல நுதற் சிந்தூர மழுங்குறக் கொடியிடைதுவள
அஞ்சனமைக் கயல்விழி யயல்பொர[1]
அமுதமொழிக் குமுத மலர்ந்திட
அணியுமணிப் பணிபல வசையுற வளர்குழல் நெகிழக்
கஞ்சமலர் கொடியிடைப்[2] பெருமாள்
காயாமலர் வண்ணப் பெருமாள்
காவேரியின் நடுவிணைமிசை கண்டுயில பெருமாள்
செஞ்சிலைவேள் தனையருள் செய்த
திருவரங்கப் பெருமான் பெருமைத்
திருநாமம்[3] பாடியாடும் பள்ளிகாணே[4]

வெண்பா

10. விரவு சிலைமதவேள் வெங்கால னென்னு
மிரவுமொரு முப்பதுக மென்னும்—பரவுங்[5]
கறைக்கண்ட னேகமலைக் கண்ணுதலே யென்னும்
பிறைக்கண்ட னேருமொரு[6] பெண்.

11 பொன்பரப்பிய திருவீதியிலே
கணைபரப்பிய சிலைவேள் நிலைதரு[7]
புகழ்பரப்பிய கமலா லயமெனும் புரியுறைபெருமாள்
அன்பருக்கெளி தாகிய பெருமாள்
அருமைப் பெருமாள் கலைமானுறை
யணங்கைப் பெருமாள் மலையாளுறை யாகப்பெருமாள்

(பி - ம்) 1. மேய்கயல விழிபுரள, 2 கொடிபடா. 3. நாமங்கள் 4. பள்ளத்திகள் தோன்றினரே. 5. பரவு 6. னேரு. நுதற. 7 தரும்,

தென்புறத்திளந் தென்றலிழைத் திடுந்
திருச்சாளர[1] வரிசைப்பெரு மாள்
சிங்காதன மழகியபெருமாள் தியாகப்பெருமாள்
வன்மீகப் பெருமாள் [2] வீதி
விடங்கப்பெரு மாள்தன் பெருமைத்
திருநாமம் பாடியாடும் பள்ளி நாமே

12. அண்டர்மனைக் கொடியிடைமட விய
ரளையற்றளை [3] யப்படுதிரு மால்[4]
அழகியமெய்க் குழையைக் குழைப்பித்திடு பெருமாள்
மண்டலமுண் டெழுகடலுண் டெழு
வரையுண்டெழு புவனமுமுண் டொரு
வடபத்திர மிசைதுயில் வடிவுடைத் திருமால்
கண்டக [5] வெஞ் சமர்பொருதிரு தனை
யொருபதுசிர மிருபதுகர மற
கரதாடனர் முடிதாளெழ
பொரு [6] கணை தொடு திருமால்
தெண்டிரைவெண் சங்குமுழங் கிட[7]
திருக்காவிரி வளர்ந்திடவளந் தரு[8]
திருவரங்கப் பெருமாள் பெருமை[9]
பாடியாடும் பள்ளி நாமே.

(பி - ம்) 1. திருச்சாலக, 2 மின பரபபிய உடைமுடிப பெருமாள, 3. தயிரப்பபடு. 4. அணடா மனைககொடியிடை மட வியா—ரளையத தயிர்ப்பபடு மழகிய மெய்ககலை பிடிததழுதிடு திருமால்—மணடல முணடெழுவரை யுணடெழுபுவன முண டொரு வடபததிர மிசைததுயில மதலையின் வடிவுள திருமால். 5. கண்டகர. 6. வொரு. 7. முழங்கிய. 8. விளந்திடவளாந் தருள். 9 திருமால திருநாமம.

கட்டளைக் கலிப்பா

13. காலமு மந்தி படைபொருதல பாரீர
காத லறிந்து களபமுலை சேரீர
சில மறிந்து பணிவிடைசெய் யேனே
சேவடி வந்து தினமும்வரு டேனே
ஓலிடு வண்டு குமுறுகுழ லாரே
யோசை முழங்கு குயிலின்மொழி யாரே
வேலை யடாந்த கலகவிழி யாரே
வீதி விடங்கர் கமலையனை யாரே.

14. அன்பர்க் கெளிதாகிய பெருமாள்
திருவந்திக் காப்பழகிய பெருமாள்
ஆடுதண்டினிற் றேடசைந்திட
வசைந்தாடும் பெருமாள்
பைம்பொற் றேடழகிய பெருமாள்
செவவந்தித் தோடணி [1] பெருமாள்
பாலொத்திடு மொழியாளுறை யும்பாகப பெருமாள்
கம்பிக் காதழகிய பெருமாள
கனக வசந்தப் பெருமாளுயர்
கங்காளப் பெருமாள தேவரகண்டப் பெருமாள்
செம்பொற் சிங்காதனப் பெருமாள் [2]
தியாக வினோதப் பெருமாள்தம் [3]
பெருமைத் திருநாமம் பாடியாடும் பள்ளி நானே [4]

15. முண்டக நாபிதனில் நான்முக வண்டிருந்து
மூலமறை மொழிதன்னை முழங்க வைத்தோன்

(பி - ம்) 1. தொடையணி. 2. அழகிய பெருமாள். 3 தன. 4. நாமே.

அண்டர் மகிழ்ந்திடவே மோகினியாகி முன்ன
மாரமுதம் பகுந்தளித்த வன்புடையோன்
வண்டெனவேயுகந்து வாவியில் வண்கழுவில்
மாயமுட னுறைந்த மாயவனார்
தெண்டிரை வாவிசூழும் சீரங்க ராசனார்தம்
திருநாமம் பாடியாடும் பள்ளிநானே.

கடவுட்பராவல்—விருத்தம்

16. குயிலுக்கு நீணிலா[1] வெயிலுக்கு மாரவேள்
கொடுமைக்கு வாட லாமோ
மயிலொத்த[2] 'சாயலாள் மயலுற்றி டாமலே
மருமத்தி லாளொ னாதோ
சயிலுற்ற நாதரே[3] யரவுற்ற பாதரே[4]
தமிழ்விட்ட தூத னாரே
கயிலைத்தி யாகரே கனகத்தி யாகரே
கமலைத்தி யாக னாரே.

ஆற்றுவரவு

17. கனத்த மேகக் குலங்கள் கூடிக்
கலங்கி வேலை விலங்கியே[5]
கருகி[6] நீரைப் பருகி வானத்
தருகி னேறிப் பெருகியே
வனத்து மிகுத்த குடகிற் பொழிந்து
வழிந்து கரையி லழுந்தியே[7]
வரகு டன்பயில் தேக்கு மாரமும்
நூக்கி யேகரை தாக்கியே

(பி - ம்) 1. நன்னிலா. 2. மயிலுற்ற. 3. பாகரே. 4. நாதரே. 5. விலங்கவே. 6. கருகிய. 7. லெழுந்துமேல்.

இனத்திற் குறவர் புனத்தி லிதணு
மெடுத்த குடிலு மிதக்கவே
இரைந்து குமுறி விரைந்து மருவி
யிருவிக் குருவி வெருவவே[1]
அனத்தை நேர்தருங் குறத்தி காதலி
லழுந்து வேள்பதம்[2] வழுத்தியே
அலருங் குறிஞ்சி மலரு மருவி
யதிர்ந்து பாலை யெதிர்ந்ததே.

கலித்துறை

18. கழையேறு செஞ்சொ லுமைபாகர் வாழுங் கமலைவெற்பில்
மழையேறு தண்டலை யேபுனமே வண்ட[3] லாடிடமே
உழையே வெறுங்கவ ணேயிதணேமெய் யுறவன்றியே
பிழையேது செய்தன ரோவென்று[4] மாதர் பிரிந்தனரே.

19. தேடிப் பாலை நிலத்திற் புகுந்து
திரள்வெட்[5] பாலை குரவுடன்
திரட்டிப் பிடுங்கி யிலுப்பைக் குலங்கள்
சேரச சுழியில்[6] வாரியே
ஓடிப் பறந்து பருந்துங் கிளியுங்[7]
கழுகுஞ் சுழியில்[8] முழுகவே
உலக மெங்கு நிலைக லங்கி[9]
யுறுதி கொண்டு நிறுவியே
கூடித் திகழுங் கமலைத் தியாகர்
துங்கர் கங்கை பெருமைபோல்

(பி - ம்) 1. வெருவியே. 2 பொற்பதம். 3. வணடல்கு; இவ்வாறாயின் எழுத்துக்கூடுகிறது. 4. வின்று. 5. திரண்டுவெட். 6. சேர்ச்சுழிக்கிரையில். 7. பறவம். 8. மகங்கா 9. கலங்கி.

சூழத் திரியுங் கேழற் றிரளை
தொடர்ந்த [1] ஞாளி யடங்கவே
நாடிப் பரவு மயிடன் சிரத்தில்
நடித்த கன்னியை வழுத்தியே
நல்ல வளமை முல்லை நிலத்தில்
நடுங்க வேகரை புரண்டதே.

வெண்பா

20. தெண்ணீர் புனைகமலைச் சிற்பரமாம் வெற்பிலெதிர் [2]
வெண்ணீறு தந்தும் விடைதந்தும்—வண்ணக்
கரங்குவித்தா ரந்தோகைக் கார்மயிலன் னாரின்
றிரங்குவித்தா ரந்தோ [3] வெமை.

21. வாடுகின்றாள் நின்மாலை வாங்கக் கிளியொன்று
தேடுகின்றா ளாரூர்த் தியாகரே—நாடி
அனங்கனம்பு சொரியவந் தனலைமொணடு வீசவெமயி
மனதுநொநது கலையிழுந்த மான்.

22. புரண்டு முல்லை நிலத்திற புகுந்து
பொதுவர் மனையிற் கதுவியே
புதிய நெய்யும் பழைய தயிரும்
பொருநது பாலு மருந்தியே
கரந்தை யணியும் பரந்த சடையர்
கமலைத் தியாகர் விடையைப்போல்
கள்ள மேகொடு வெள்ள மேவிய
கான வாரண மோடவே

(பி - ம்) 1 துரந்து. 2. சிற்பரமா வேற்பதனல். 3. ரென்னே. 4. இது சில பிரதிகளிற காணப்படவில்லை.

தூரந்து பயிலு முறையு முயலு
மெழுந்து திரையி லழுந்தவே [1]
தோன்றிக் குருந்துந் தான்றிப் படவுஞ்[2]
சுழியி னிடையி லுழலவே

பருந்தி ராசன் பொருந்து முபய
பதங்கள் கருதி வணங்கியே
பரிந்து [3] துளவுஞ் செருந்தி மீதினில்
பாய்ந்து [4] மருதங் கலந்ததே

கலிப்பா

23. ஆர்வமிகுந் தன்பெடையை யணிசிறகா லருங்குளிர்க்குப்
போர்வைசெய்து குடமபைதனிற் புளளுறங்கும் கார்காலம
சேர்வைதரும் புகழாரூர்த் தியாகர்வள நாட்டிலன்பர்
கார்வரவில் வரவுபொய்க்கக் கலிகால மானதே.

24. கலந்து மருத நிலத்திற் புகுந்து
கமுகச சமுகங் குலையவே
கருதி பேபல சுருதி மேவிய
கரும்பிற் சுரும்பர் திரும்பவே[5]

அலர்ந்தகமலத் தடங்க ளுழக்கி
யணிவ ரால்கள் பனியவே
யடுத்த வாழையி னெடுத்த தாறுக
ளாறு நேர்மது வீறவே

பலந்த ரும்பல வருக்கை நெருக்கிப்
பற்றி மாங்கனி யெற்றியே

(பி - ம்) 1. லழுந்தவே 2. யடகுஞ். 3. பரிந்த 4. பரிந்து.
5. கரும்புள் கரும்பிற் றிரும்பவே.

பயிலு மாதளை தனைவி டாமலே
பவளக் கொம்பெனத் துவளவே
இலங்கு குலிசப் புரந்த ரனையு
மிணங்கு தாளை வணங்கியே
யிஞ்சி மஞ்சள் வஞ்சி யஞ்சிட
இடங்கொள் நெய்த லடைந்ததே.

கலிப்பா

25. செங்கைக் குறிமறைத்த செஞ்சந்த னத்தையெங்கள்
கொங்கைக் குறியைக் குறியாது செய்தனரோ [1]
மங்கைக் கொருபாகம் வாழ்வாக வேயளித்த
கங்கைச் சடையாரே கமலைவள நாடாரே. [2]

26. அடைந்து நெய்த லிடங்க ளோடி
யளவர் மனையி லளவியே
அலையில் வாரும் வலையில் மீனை
நிலையில் வாரிக் குலவியே
உடைந்து திரையில் விடைந்து பணில
முதறு மணிகள் சிதறவே
உயர்ந்த தாழையும் விரிந்த [3] ஞாழலு
மொருமு கம்படப் படியவே
படிந்த திமிலும் பலசம பாணும்
பாரச் சோங்கு மிதக்கவே
பாய்ந்து மகரம் வாய்ந்து மாயப்
படகைக் குழிய [4] முடுகியே

(பி - ம்) 1. செய்ததன்றோ 2. கடையா கமலைவள நாடோ.
3. இழிந்த வாய்நது. 4. படுவா படகைக கிழிய.

வடிந்த தரளப் பவளத் தாலும்
வருணன் பதத்திற் சாத்தியே
ந் தாறு பெருகி வார [1]
வதிசயம் பாரும் [2] பள்ளீரே.

வெண்பா

27. *பெருங்கடனஞ் சுண்ட பிரான்கமலை சூழும்
கருங்கடலே நெய்தற் கழியே—நெருங்குமுதல் [3]
புன்னைக மேதிரையே போனவர்தேர் [4] மீண்டக்கா
லென்னைக மேகரையே னே. [5]

28. வாளை திருக்கை சுறவு தொழுத்தை
வஞ்சி ரஞ்சிறு பஞ்சிரம் [6]
மடவை யுல்ல மயிரை கெளிறு
மகரங் குரவை மலங்குமீன் [7]
தேளி யுளுவை சன்ன மயறு [8]
திமிதி மிங்கலம் புரவிமீன் [9]
சீனி கைத்தலை யானை மீனொடு
தெள்ளிறு லொடு வெள்ளிறால்
நாளும் புதிய கடலில் மீனும்
நாட்டில் [10] மீனுங் கூட்டமாய்
நளிகொள் தாலக் கனியை மோதி
நறிய தாழை முறியவே

(பி - ம்) 1. வருகிற. 2. வளமை பாரடி. 3. நெருங்கு நிழல. 4. போனவா. 5, யேனுனை. 6. வஞ்சனம சிறும மஞசனம். 7. மலஙகு மீன். 8. மயறு சன்னை. 9. பல புரவி மீன். 10. நாட்டு.

*. இசசெய்யுள 28-ன்பின் சில பிரதிகளிற் காணப்படுகின்றது.

ஆளை விலக்கிக் கலக்கிக் களித்திட்
டலையக் குலைய முழுகியே [1]
யழுந்து தடத்தி லெழுந்து பாயு
மதிசயம் பாரும் பள்ளீரே.

குயில் கூவுதல்

29. புவியீதிலே திங்கள் மும்மாரியும் பெய்து
பொங்குகலி தீரவே கூவாய் குயிலே
சிவகாரி யந்தனைக் கிதங்கள் செய்யுமவர்
தீரகில வீழவே கூவாய் குயிலே
தவமேவு[2] தானமும் பரிகலமு மாரூரா
சன்னிதியுந் தழைக்கவே கூவாய் குயிலே
நவமாகத் தென்னிலை பூமிபான மகபூசை
நடத்துநெறி தழைக்கவே கூவாய் குயிலே

30. ஊற்றமுள்ள முனிவென முனைனுள் வருந்தவயன்
உள்ளதலையும் போகவே[3] கூவாய் குயிலே
சேற்றியற[4] மடவாரைக் கூட்டுறவு செய்யுமவர்
நீடேறி வாழவே கூவாய் குயிலே
காற்றுள்ள போதிலே தூற்றுபவர்க்குத் தானகை
கைப்பொரு ளுண்டாகவே கூவாய் குயிலே
சாற்றுமட லூரவே யாரூரர் வளநாட்டில்
தடம்பணைகள் விளங்கவே கூவாய் குயிலே

31. ஊரூர்கள் தோறுஞ்செவ்வி மழை[5] பொழிந்தே
யொருகோடி தேரைவாய்கள் ஒலிவீறவே[6]

(பி - ம்) 1. முடுகியே. 2. தவமெமு. 3. ஒற்றமுள்ள எற்றமுள்ள போகக். 4. சேற்றியூரும. 5. செவிமழைகள். 6. ஒலி வீறவே.

சீரூரு மணிமுத்தாறு நீர்பாய்ந்தே[1]
 சிறந்தாவிப்ப[2] யெழுந்துகரை மோதவே
வேரூரும் கோரைகொண்ட கழனியெல்லாம்
 வெண்கார்கள் பாய்ந்துபுனல் மீளாமலே
ஆரூரர் பண்ணைபார்க்கு[3] மாண்டவர்தம்மை
 யணைமேல நாமழைக்க வாரும் பள்ளிரே.

பண்ணைத் தலைவன் வரவு

32. வீக்கிய வெறும்பழுதை வாகுபுரி யழகும்
 வெந்தவீட்டுக்[4] கரிகட்டை மேனியழகும்
தூக்கணன் குருவிகூட்டுத்[5] தொப்பாரங் கட்டழகும்
 தூக்கிவைத்த வளைந்ததடிக் காம்பி னழகும்
மீக்கடியுண் டிறையுண்ட கண்ணி னழகும்
 மிட்டவெத் தாபபுமிறு மாப்பி னழகும்[6]
பாக்கிலேயின் றறியாத வாயினழகு
 பண்ணைக்கார னும்வந்து தோன்றி னரே.

33. இரவு தனையோ விகலவேள் தனையோ
சருவுருபி லோசை தனையோ—மருவாமல
போனரை யோபரமர் பூங்கமலை நன்னாட்டில
யானரை யோநோவ தின்று.

34. பொற்கடக முன்கையேந்திக் கடகமேந்திப்
 பொன்னெழுத்துச் சேலைகட்டிப் பூங்குழல் கட்டித்
தற்கமான வெற்றிவிழிக் கஞ்சன மிட்டுச்
 சந்தனத்தைத் தனத்திலிட்டுத் தளப்ப மிட்டு

(பி - ம்) 1. பரந்தே. 2. திரை தாவியே 3. பணை தொறும். 4. வீட்டில். 5. கூட்டில். 6. போட்ட ஈத்தாப்பு மிறு மாப்புமேற்றவழகும்.

நற்கமலை யாடரவக் கிண்கிணிக் காலன்
நங்கைபங்கன் தென்கமலை நாடு தன்னில்
வற்கமான பண்ணைபார்க்கு மாண்டவர் தம்மை
மகிழ்வுடனே கண்டுதொழ வாரும் பள்ளீரே.

35. கறுத்தமெய் யழகரே கும்பிடுகிறேன்—கொழுக்
கட்டைமூக் கழகரே கும்பிடுகிறேன்
சொறித்தலை யழகரே கும்பிடுகிறேன்—கூறுஞ்
சோனிவயிற் றழகரே கும்பிடுகிறேன்
பறித்தகண் ணழகரே கும்பிடுகிறேன்—ஊசிப்
பாசிப்பல் லழகரே கும்பிடுகிறேன்
அறுத்தகா தழகரே கும்பிடுகிறேன—பண்ணை
யாண்டவரே யாண்டவரே கும்பிடுகிறேன்.

வெண்பா

36. கமலையுமென் கன்மனமுங் காதலித்து வாழும்
அமலர்திரு முன்போ யனங்காள்—சமரமதன்
தன்றுமிருந் தேன்பகழி தூற்றுமெனு மாருயிர்கொண்
டென்று மிருந்தே னெனும்.

37. கோட்டை கட்டும் பலவிதை வர்க்கமுங்
கொண்ட கொட்டுக கொழுவின் வகையும்
பூட்டு கெட்டை நுகமுங் கயிறும்
பொன்னின் மேழிக் கலப்பை வகையும்
நீட்டு மெய்ப்புகழ் வீதி விடங்கத்
தியாகர் பண்ணைவயலி லுழுத
மாட்டு வர்க்கமு முள்ள படிதன்னை
வந்து சொல்லடா வன்மீகப் பள்ளா.

38. இளவி தைகார் பசான விதையி
லெலியருந்தியது தொண்ணூறு கோட்டை
வளவி லிட்ட பட்டடையில படி
மாடு தின்ற தெழுநூறு கோட்டை
யளவு வாசி யறுநூறு கோட்டை
யந்து தின்றதோ ரைஞ்ஞூறு கோட்டை
களவு போனது நானூறு கோட்டை
கண்ட கோட்டை முந்நூறே யாண்டே.

39. பலவ கைநின்ற மாட்டில் உருத்திரர்
பத்து மாடு பதினொரு மாடு
கலக மாகிய காலனை சாடக்
கலங்கி[2]யோடுங் கடா வொன்றுங் காணேன்
உலக மெங்கு முழுத விடத்தி
லுறங்கி நின்ற[3]தொருபெருங் காளை
நிலவ ணிந்தவ ராரூர்த் தியாகர்க்கு
நின்ற குண்டை யொருகுண்டை யாண்டே

40. புகழ்ப டைத்த தியாகர்க்குத் தென்னைப்
பூமி யான்செய் திருப்பணி தன்னில்
முகவ ணைக்கல்லுப் பூட்டு மிடத்தில்
முறிந்து போன நுகமொரு கோடி
அகலி டத்தை[4] முழுது முழுத
வருங்க லப்பை யனந்த மதுதனில்
இகல் படைத்த [5]பலபத் திரன்கையி
லிருக்குங் கலப்பை யொன்றுண் டாண்டே.

(பி - ம்) 1 உருத்திரன. 2 கடுகி 3 உறங்குகின்ற. 4 அகலிடத்து 5. பலபத்திரனிடத்தில.

41. நாரி பங்கர் கமலையஞ் சாரலில்
நயந்து நண்பு வியந்துற வாகியே
காரி லங்கிய சந்தனச் சோலையில்
கலவி நீங்குங் கயல்விழி மாதரார்[1]
சோரு மாடை தலைமாறிச் சூழ்ந்ததும்
தொலைந்த நாண நினைந்தே யலைந்ததும்[2]
வாரி யங்[3]கையிற் கூந்தல் முடித்தது
மனத்தி லொன்று மறக்க வொணாததே[4]

பள்ளி முறைப்பாடு

42. மெள்ள வேசென்று சிரங்கப் பள்ளியை
வேட்டு நானூறு கோட்டை யளித்தான்
பள்ள ராமுற வின்முறை யார்க்குப்
பண்ணை மாட்டிலே பாதி கொடுத்தான்
சுள்ளி னோடுறு கள்ளு மருந்திடத்
தொண்ணூறு மாட்டையு மெண்ணி யவித்தான்
கள்ளமே செய்யும் பள்ளனைக் காவலிற்
கட்டிடீர் பண்ணைக் காரனா ராண்டே.

கலிப்பா

43. சேண்மருவும் நான்முகனுஞ் செங்கண்மா லுந்தேடிக்
காண்பதரிதாய் நின்றோன கமலைவள நாடனையீர்
நான்முகமுஞ் சேண்முகமு நன்னிலா வீசுமிள
வாணகையு மென்று மறவேன் மறவேனே.

(பி - ம்) 1. மாதரீர். 2. நினைந்தே நகைத்ததும். 3. வாரியே. 4. மறக்கவொணாதே.

சீரங்கப் பள்ளி முறையீடு

44. கொடுமை யே[னின் றுணைக்]கண் டழுகைக்கே
குறைகள[1] செய்து சிறையி லிருந்தாய்
தொடர வாதுசெய்[2] வன்மீகப பள்ளத்தி
சொன்ன வாறது சூது[3] முடித்தாள்
அடிமை தன்னை யறியாம லேபண்ணை
யாண்டை தானு மவள்வார்த்தை கேட்டார்
விடவ ரா[4]வரங் கேசர் விதித்த
விதியை யாரும் விலக்கவொண் ணாதே.

45. ஆலில் நின்றிடும் வீரன் றனக்கிட்ட
வாட்டி றைச்சியு மாககிய சுள்ளு
மூலி யென்பதுங் கொண்டு வடிததபின்
மொந்தையிற் கொண்டு வந்த மதுவும்
பாலில வெந்து படைத்த வடிசிலும்
பானை தன்னொடும பாவிகக வேண்டிக்
காலி ரண்டுந் தொழுவி லிருக்கவே
கையி ரண்டுந் தொழும் பள்ளிமேர.

46. தொழுத போதி லிழுக்குள்ள தாருமோ
சொன்ன வார்த்தையி லென்ன மறுத்தேன்
பழுது தானொரு கோடி செய்தாலும்
பாரி யானவள் பாராட்ட லாமோ
உழுத ஏருங் கலப்பை விதைவகை
யுள்ள வாறெல்லா முத்தாரஞ் சொல்வேன்
அழுதி டாமனீ வன்மீகப பள்ளத்தி
யாண்டைக்கே சொல்லி மீண்டுகொள் வாயே.

(பி - ம்) 1. கொடுமைகள. 2. வாது செய. 3. சூளு. 4. விட வரவிற் றுயிலரஙகேசர்.

47\. மேய சீரங்கப் பள்ளி யிடத்தில்
வெறுப்பினா லன்று விண்ணப்பஞ் செய்தேன்
ஆயி ரம்பிழை செய்யினு மெங்களை
யாண்டையே[1] யன்றி யாரே பொறுப்பார்
பாயு மாடும் விதையுந்[2] தந்து
பண்ணை சேரப் பயிர்செய்து தாரோம்
நாய டியேன் பிணையாக வன்மீக
நாதப பள்ளனை[3] விட்டிடு மாண்டே.

48\. உரையெ டுத்த சதுர்வேத நாதனார்
ஒலி லந்தரி[4] மேவிய பாகனார்
கரைய டுத்த வளர்முத் துதிர்ந்திடுங்[5]
கழனி சூழுங் கமலைநன் னாட்டினிற்
றிரையெ டுத்த திருப்பாற் கடலிலே
செய்ய பத்மத் திருக்கோயில் வாழ்வீர்
வரையெ டுத்த புதுமணச் சோலையில்
வந்து நீரின்ற மாயமென் மாயமோ.

மாட்டு வகை

49\. முட்டிக்காலன் வெட்டிக்கிடாய் மொட்டைக் கறுப்பன
மோழைககாளை வீணைகொமபன் யானைச சொறியன
மட்டைக கொமபன[6] நெட்டைக்காலன் வட்டககரியன[7]
மணிகட்டி வெள்ளைககாளை[8]குள்ளச சிவபபன்
வெட்டுககாலன மொட்டைககணணன் மேகநிறத் தானே
வெட்டுவாலன[9] தறிகொமபன வெள்ளைக குளம்பன
கொட்டைப்பாககன் கூழைவாலன கூடு கொமபன்
கொண்டபணணை மாட்டுவர்ககம[10]கூறினே னாணடே.

(பி - ம்) 1. ஆணடை. 2. மாட்டு வகையும. 3. வனமீகப் பள்ளனை. 4. ஓலியந்தனை. 5. வளமுததி தந்திடுங. 6. மடடக கொம்பன. 7 வட்டக குறியன. 8. வெள்ளைக காலன. 9. வெடி வாலன. 10. மாட்டின வகை.

50. வச்சிரமா ணிக்கத் தாலே படைவாளும்
வன்பவளக் கொம்பினாலே மேழிநுகமும்
மெச்சியதங்[1] கத்தினா லிழைத்த[2] கொழுவும்
மெல்லியவெண் பட்டுநூலால் விட்ட கயிறும்
பசசைவெட்டுச் சந்தனத தாலுயா[3] காலும்
பதுமராகத் தாலிழைதத உழவு கோலும்[4]
கச்சணிந்த கொங்கை பங்கன் தென்கமலைக்கே
கலப்பையா யிரங்கொண்டு கட்டினே னாண்டே.

நெல்வாக்கம்

51. அரிய நாயகங் குறுவை பொற்சாலி
யருச்சுன மென்னு மரியா[5] நுணங்கு
திருவ ரங்க னழகிய வாணன்
தில்லை நாயகன் சீரகச் சம்பா
இரண வாரிகர்ப் பூரம்பொற் பாளை
யிரங்க மீட்டான்[6] குறுவைக் கிளையான்[7]
கருணை வாலன் கருவாலன சம்பா[8]
சொரிகு ரும்பை விதைவகை யாண்டே.

விருத்தம்

52. மாயர் பாகனார் மாது பங்கனார்[9]
மதத மாடரா வைத்த வேணியார்
காயு மாரவேள் கணையை வென்றுளார்
கமலைதன் னிலவாழ் கனக வல்லியார்
சேய கூர்விழிக் கொப்பு வாளியே
செவிய ணிந்தது கொப்பு வாளியே
சாய லானதுங் கமலை போலுமே
தாங்கு கொங்கையுங் கமலை போலுமே.

(பி - ம்) 1. உசசிததங 2. வைதத. 3. சந்தனத்தாலேற்கும் ஏர்க்காலும. 4. உழககோலும. 5. யருசசுனன தியாதா. 6. மாட்டான். 7. கிணையான. 8. செவவாலன.

53. இந்நேரம் பூசமென்றார் பஞ்சமி யென்றார்
யேற்றசோம வாரமென்றார் சோபன மென்றார்
நன்னேர மாகுமிந்த முகிழ்த்தந்[1] தன்னில்
நரையானும் வலமாக விரையச் சென்று
பொன்னேரைப் பூட்டிவயல் சேறு செய்தபின்
போதவெருத் தழைபோட்டுப் பரம்ப டித்துத்
தென்னேர்மொ ழிச்சிபங்கன் தென்க மலைக்குச்
செந்நெல்[2]விதை தெளித்துவிடச்[3] செல்லடாபள்ளா

54. தெளியுஞ்செந் தமிழ்ச் சுந்தரற் காகத்
தெருவிற் றூது பரவைக்குச் சென்றோன்
களித ருஞ்சிறை வண்டிசை கொண்ட
கடுக்கை யண்ணல் கமலை வயலில்
மிளிர்த ரும்பனி நீரை விடுத்து
விளைவயல தனிலவெங் காரைப் பாய்ச்சி
யொளிதரும் பொற்க லப்பையைப் பூட்டி
யுழுகைக் கேகொழு தச்சுதே[4] யாண்டே.

55. இன்றனையே[5] கண்டழுகைக்கே பண்ணைக்காரன்
எங்களைத்தான் சிங்கி கொள்ளுகிறான்.
சென்றபோது சேரிப்பள்ளிகள் உன்னழகைச்[6]
சேரவே கண்ணூறு[7] கொண்டதோ
அன்றியேயா ளிட்டமருந்தோ அவளிடத்
தாசை மோகந்தலைக் கொண்டதோ
மன்றினின்ற வீரன்குற்றமோ மயங்கினாய்
வன்மீக நாதப் பள்ளனே.

(பி - ம்) 1. முகூர்த்தந். 2. சென்னல். 3. தெளித்திட... 4. தைத்த. 5. இன்றனையக. 6. உன்னழகு. 7. கண்ணீர்.

56\. தன்குழவி தன்னையும் பாராய் தன்னுடைய[1]
தாதை வர்க்கந் தன்னையும் பாராய்[2]
என்கொடிய முன்னை வினையோ கைபிடித்
தென்னைக் கொண்ட நேர வாசியோ
உன்னை பார்க்குமெங் களுக்கும் வேறொரு
தஞ்சமுன் னையன்றி வேறு[3] முண்டோ
வன்கமலை[4] நாத னருளா லெழுந்திராய்
வன்மீக நாதப் பள்ளனே.

57\. துங்கமலை நேர்விழியுந் தோளிணையு மொன்றாக
சங்கமலைப் பாலால் தழும்பறு தெந்நாளும்
பைங்கமலை வாவியிற் பணிலக்குழா முழங்குங்
தென்கமலை வாழ்வே தியாகப் பெருமாளே.

58\. தெளித்தேன் விதையுநீரும் வடியப் போட்டேன்
சேரவே முளைததபின்பு நீருங் கட்டினேன்
அளித்தே னளிக்குலஞ்சூழ் தென்க மலையோர்
அறிவு போலே கிளைத்துச செறிவாகியே
தளிர்தமே தறுஞ் செந்தமிழ்மழைக கொண்ட வரசர்
தக்கபுகழ் போலே நாற்றுஞ் சமைந்ததிப்போ
களித்தே பறித்துமுடி நடவெ தெல்லாங்
காணவர வேண்டும்[5] பண்ணைக்கார னருமாண்டே

59\. சேலை யழகா திருமார்பிற செங்கழுநீர்[6]
மாலையழ காதே வரகண்டா—மாலையந்திக்[7]
காப்பழகா வென்று கணிந்துகனிந் தோதுதற்கு
நாப்பழகா வென்[8]செய்வே னுன்.

(பி - ம்) 1. என்னுடைய தாதை. 2. காணுய். 3. பின்னையு. 4. செங்கமலக். 5. வரவேணும். 6. செவவந்தி 7. வேலையந்தி. 8. தென.

60. மங்கை யாடக் கமலைச சடிலர் மருவு மரவு மாடவே[1]
மாரபிற் செங்கழு நீரும் மணிப் பொற் றேரூ மாடவாடவே
கங்கையாடத் திங்களாடக் கனகதண்டினி லாடுவார்
கமலைவாழு மமலர்மேவுங் கயலுலாவும் வயலுளே
செங்கையாட வளைகளாடத் திரளுந்தரள மாடவே
சேலையாட மாலையாடச் சேலைநேர்விழி யாடவே
கொங்கையாடக் குழைகளாடக் கொடியிடைதுவண்
[டாடவே
கொந்தளாடவி யாடவாடிக்[2] கூடிநடவாரும்[3] பள்ளீரே.

61. நீத்தாளுடன் காத்தா ளுலகாள்
திருவாளுட னிருவா ளிளையாள்
சிவந்தாளுடன் வந்தாள் குளுந்தாள்
சினனாள் பெரியாள்
கூத்தாளுட னெழுவாள் விழியாள்[1]
குழைஞ்சாளுடன் குளுந்தாள் தொடர்ந்தாள்
குயிலாளுடன் மயிலாள் தையலாள்
குரவைகளிடவே
பூத்தாரணி சடைமுடி யசையப்
பூங்கமலத் தாளிணை வருந்தப்
புண்டரீகத் திருமுகம் வேர்வெழப்
பொற்குழை யசைய
நாத்தான்புகழ் நாவலனே வலின்
நள்ளிருளிற் றூதென வீதியில்
நடந்தோன் கமலாலயக் கழனியில்
நடவாரும்[2] பள்ளீரே.

(பி - ம்) 1. மஙகையாடக குடிலச சடில மருவுதரள மாடவே. 2. கொந்தளாடவி யாடவே. 3. நடவா. 1. வழியாள். 2. நடவா.

62. படித்த செந்தமிழ்க் கவிதைச் சுந்தரன்
பரவைக் கிரவில் நடக்கவே
பாதஞ் சிவக்கத் தூது நடந்த
பரமர் கமலை வயலுளே
முடித்த குழலுஞ் சரியக் குரவை
முழக்கி வயலி லுழக்கியே
மொண்டு மதுவை யுண்டு முடியைக்
[முடியக்] கடுகி நடுகைக்கே
வெடித்த கமல மடித்த குவளை
விரவிக் குமுத மருவியே
மேவி யெதிர் தாவி யேநரை
விரும்பிச் சுரும்பு திரும்பவே
அடித்த போது வகன்றி டாம
லகன்ற பூங்குழல் காட்டியே
அளிக்கு லம்பல களித்தெ ழுந்திடு
மதிசயம் பாரும் பள்ளீரே.

63. ஆலகந்தரர் கமலை நாயக
ரடல்வேள் தன்னை யெரித்தவர்
சூல கங்கணர் பாணி சங்கரர்
துலங்கும் பண்ணை வயலுளே
நீல கொந்தள மேக பந்திகள்
நெடுகச் சரிய நடுகைக்கே
கோலக் கொண்டையர் பரவைக் காயிரம்
கொடுப்பர் பாரும்[2] பள்ளீரே

(பி - ம்) 1. கோலக்கொண்டையப் பார்வைக்கெண்டைகள் கூடிப் பாய்வது பாரும்

64. கந்த மருவும் கடுக்கைச் சடையர்
கமலை சூழும் பயிரெல்லாம்
தந்தை யணையுந் தனத்தைப்[1]போலக்
தளர்ச்சியே யன்றி வளர்ச்சியாய்
முந்து[2]கருணை முனிவ ரிடத்தி[3]
லுருவம் போலக் கருவதாய்
விந்தை பயிலும் நாலைப் பூமியான்
விளங்கும் புகழ்போல் விளைந்ததே.

65. தெண்டிரைநஞ் சுண்ட கண்டன் தேவர கண்டன்
தென்கமலை வாவி சூழு நங்க மலைக்கே
கொண்டகதிர் சொன்னவாளிட் டறுத்தேற்றினேன்
கூலிப்பண்ணை மரக்காலால கோலி யளந்தேன்
அண்டமுக டளவாக மேருகிரிபோ
லாயிரம்போர் விதைப்போராய்ச் சேருங் கட்டி
கண்டபொலி தூற்றிமுதற் கண்டளக்கவே [னேன்
கண்காணிக்க வேணும்பண்ணைக் காரனாண்டே.

66. வளவினுஞ் சற்றுமிராள் சுற்றித் திரிவாள்
வன்மீகப் பள்ளியென் வார்த்தையுங் கேளாள்
தளராமற் சோறுமிடாள் கறியுமிடாள்
தாய்க்கொளித்த சூலுமுண்டோ தஞ்சம் வேறு
[ண்டோ
வளமாகக் கள்ளியவள்[1] பண்டமும்பாராள்
யாருடன் முறைப்படுவ னாண்டவ ரல்லால்
இளையாளைக் கொண்டவன்றே வன்பகையால்
இத்தனைநாளுஞ் சொல்லக்கூசியிருந்தேனாண்டே.

(பி - ம்) 1. யணையதாதை. 2. உந்து. 3. முனிவர் நினைவு
4. அளவாய களியாட்டமாய்

67. மாயக்கள்ளி குள்ளியான சீரங்கப்பள்ளி
வந்தவன்றே பள்ளன்மிகச் சிந்தைவேறானான்
காயப்போட்ட வயலுக்குத் தண்ணீரும் பாய்ச்சான்
கட்டேச்சூடு களப்பேறு[2] விட்டதுந் தாரான்
பாயிற்கிடை போலக்கள வரப்பிற்[3] கிடப்பான்
படிபோட்டா லவளுக்குப் பாய்ச்சி யளப்பான்
தாயத்தாரை வெல்வது முபாயத்தா லன்றோ[4]
தாறுமாறு யென்கொடுமை சாற்றினே னண்டே[5]

68. என்னையென்னை யாணடைமுனனே சொன்ன தென்னடி;
உன்னையேசிய பள்ளனோடு பேசொண்ணாதடி.

2. ஏசினாலும் பேசினாலுஞ் சீரங்கப்பள்ளி உன்மே
லிருந்த மருந்தாசை பாரி லுள்ளதோ
பாரிலுள்ள மருந்தாசையினால் வன்மீகப் பள்ளி
பள்ளனையும் வசமாக்கிக் கொள்ளொணாதடி

3. வசமாக்க வுன்னைப்போல் மருந்தார் வல்லார்
மருந்திட்டான் வானவர்க்கு மாய னல்லோடி
மருந்திட்டான மாயனென்று யுகக ளாணடைபோல்
வஞ்சகரி பரியாக மாயஞ் செய்தானே.

4. குற்றிடை யிடைச்சியர்கள் கூறை கவர்ந்தே
குருந்தேறினா னுங்கள் கொண்ட லல்லோடி
நற்றவர்த மங்கையரைத தாரு வனத்தே
நாணழிவு செய்ததுங்கள் தானு வல்லோடி

(பி - ம்) 1. குள்ளியவள் 2. பேற்றில 3. களவாகிக 4. உபாயத்தாலேவோல் 5. சாற்றினேனலடே.

5. மாதினுரு வாகிவந்த சீதை தன்னையு
மாமியையுங் கொண்டா னுங்கள்மாய னல்லோடி
காதலுமை பங்கிருக்கக் கங்கை சடைமேல
கரணவைத்தா னுங்கள் கறைக்கண்ட னல்லோடி.

6. ஏறுபுகழ் தேர்விசைய னேறு தேரின்மே
லிருந்துபரி தூண்டினு னுன்னுண்டை யல்லோடி
மாறிலாத மாறனுக்குக் குதிரை யாளாய்
மதுரையிற் சென்று னுங்கள்பதி யலலோடி.

7. பாவல ஜெருவனுக்கு ஏவ லாளாகிப்
பாயுஞ்சுமந் தானுங்களதா னு மலலோடி
தாவுபுகழ்ப் புலவர்க்கு யண்ணு மன்றியே
சாணுகஞ் சுமந்தா னுங்கள் தானு வலலோடி.

8. தாடகைதன் பெண்பழியைச் சற்று மெண்ணுமல்
தாண்டியாடல செய்தானுங்களாண்டையல்லோடி
வாடிமுகம் நாணவொரு மங்கை யுடனே
வாதுசெய்தா னுங்களுடை நாத னல்லோடி.

9. அந்தகன்றன் மைந்தரிடத்தே ஐவ ரேவவே
அன்று தூது சென்றுனுங்க ளாண்டை யல்லோடி
சுந்தரன் விடுத்தபோது அந்த பிரவிற்
றூதுசென்று னுங்களிட சோதி யல்லோடி.

10. கூச்சமறப் பேசமுலைப் பாலு முயிருங்
கொண்டவனு முங்கள்கருங் கொண்ட லல்லோடி
ஏச்சென்றால் வாச்சுதென்று வேட னுதவும்
எச்சில்தின்று னுங்களுடை யீச னல்லோடி.

11. வீடுதோறு மாய்ச்சியர்கள் காய்ச்சிய பாலும்
வெண்ணெயுந் திருடினா னுங்கள் கண்ண னல்லோடி;
கூடுபுகழ் அமர்நீதி வீடு தனிலே
கோவணந் திருடினானுன் றண்டை யல்லோடி.

12. கற்றவரை வெற்றிசெயும் காம னார்தமைக்
காற்றிலேற வைத்தானுங்கள் கண்ண னல்லோடி;
பெற்றகரி முகனுக் குற்ற பரியாகப்
பெருச்சாளி யளித்தா னுன்பிரா னல்லோடி.

13. படுக்கவோர் பாயு மின்றிப் பாம்புதனிலே
பள்ளிகொண்டா னுங்கள் கண்ண னல்லோடி;
உடுக்கவொரு துகிலுமின்றி யன்று புலியி
னுரிவை யுடுத்தினா னுன்னீச னல்லோடி.

14. மட்டுப்படாத் துட்டத் தனஞ்செய் தசோதைதன்
மத்தடி பட்டானுங்கள் மத்த னல்லோடி;
பிட்டுக்கு மண்சுமந்து பாண்டியன் கையிற்
பிரம்படி பட்டா னுங்கள்பிரா னல்லோடி.

15. ஆட்டுக்கா லுக் காசையாகி மேட்டுப் பன்றியா
யன்றுதேடிச் சென்றானுங்க ளாண்டை யல்லோடி;
மோட்டுப்பனறி யாயனறு குட்டி தனக்கு
முலைகொடுத்தா னுங்கள் முத்த னல்லோடி.

16. ஆனிரையைக் காத்தளிக்கக் கோலுங் கையுமாய்
ஆயனா னுனுங்கள் வள்ள லல்லோடி,
மாநிலத்தில வேடனாகு மீன மின்றியே
வலையனு மானானுங்கள் மத்த னல்லோடி

17. கறுத்தன்று கறைக்கண்டன் காமனைக் கொல்லக்
கண்டிருந் தானுங்கள் விண்டு வல்லோடி;
சிறுத்தொண்டர் மகன்றன் னையறுத் துண்ணவே
சிந்தைமகிழ்ந் திட்டா னுங்கள்சிவ னல்லோடி.

18. வாவி தன்னில மேவுமொருவன் கழுவின்மேல்
வண்டுருவங் கொண்டா னுங்கள்விண்டு வல்லோடி;
பூவிரியுந் தென்கமலைப் புற்றினிடத்தே செல்லாப்
புக்கிருந்தா னுங்களுடை நக்க னல்லோடி

19. வரமான மாவலிபால் வாம னாகியே
மண்ணிரந்தா னுங்கள் மாய னலலோடி;
பிரமன் சிரந்தன்னைக் கரத்தி லேந்தியே
பிச்சை யிரந்தா னுங்கள்பித்த னல்லோடி.

20. வைக்குமன்று தஞ்ச மான கஞ்சனாகிய
மாமனையுங் கொன்றவ னுன்மாய னல்லோடி;
தக்கனெனு மாமனைமுன் மிக்க வேள்வியில்
தலையறுத் தானுங்கள்தானு வல்லோடி.

21. கொட்டஞ்செயுங் குரக்குத் துட்ட சேனைதனைக்
குறைவறப் படைத்தா னுன்னிறை யல்லோடி;
வெட்டலகை புடைசூழச் சுட்ட சுடலை
நின்றுநடஞ் செய்தானுங்கள் நித்த னல்லோடி.

22. ஒருக்காலே யுமைபங்கன் அருக்கன் பல்லை
யுதிர்த்தாற்போ லுன்பல்லை யுதிர்ப் பேனடி;
தருக்காலே திருக்கேள்வன் தந்தி யின்றன்
தந்தத்தைத் தகர்த்தாற்போ லுனையானுந் தகர்ப்பேனடி.

23. கிள்ளைமொழிப் பாகனன்று வன்புலி வாயைக்
கிழித்தாற் போலுன் வாயைக் கிழிப்பேனடி;
பிள்ளையுரு வாகிமாயன் புள்ளின் வாய்தன்னைப்
பிளந்தாற் போலுன் வாயைப் பிளப்பேனடி.

24. பேசரிய வீசனன்று தக்கன் வயிற்றைப்
பீறினாற் போலுன் வயிற்றைப் பீறுவேனடி;
கேசவனன் றிரணியனைக் கூசும்படி யுகிராற்
கீறினாற் போலுன்வயிற்றைக் கீறுவேனடி.

25. தோற்பதன்றி வென்றியரன் னரக்கி மூக்கினை
துணித்தாற் போலுன் மூக்கைத் துணிப்பேனடி;
ஆற்பரவ மானமாயன் சூரன் றங்கைமூக்
கரிந்தாற் போலுன் மூக்கை யரிவேனடி.

26. பாழ்படவே பாற்கரன்கண்ணை வேள்வியி லெங்கோன்
பறித்தாற் போலுன் கண்ணைக் கெடுப்பேனடி;
கேழ்பரவு கேசவன்முன் சுக்கிரன் கண்ணைக்
கெடுத்தாற் போலுன் கண்ணைக் கெடுப்பேனடி.

27. அன்றுமுய லகன்மீதி னின்று பரமன்
மிதித்தாற் போலுனை நானு மிதிப்பேனடி;
துன்றுமுடி கன்றமாய னன்று கரனைத்
துளைத்தாற் போலுனை யானுந் துளைப்பேனடி.

28. ஈசனன்று பாசமேறிக் காலனைக் காலால்
எற்றினாற்போ லுன் மார்பி லெற்றுவேனடி;
ஓசைகொள் சகடிதன்னைக் கேசவன் முன்னு
ளெற்றினாற் போலுன் மார்பி லெற்றுவேனடி.

69. ஆதார மானதிரு வாரூர ரேநீதி
வேதா கமங்கள் விரும்பியே—காதல
விருதாது காமனையும் வென்றநீர் மாதர்க்
கொருதூது செல்லலா மோ.

70. கைத்தலங்கொள் திகிரி யெறிந்து
கதிர்ம றைத்தவன் கண்ண னல்லோடி;
பத்தர் சூழுங் கமலைப் பிரான்கைப்
பணியின் வாய்க்கதுவும் பற்றுமோடி.

2. வழிபயின்ற கல்லைப் பெண்ணாக
வருத்தவ னெங்கள் மாய னல்லோடி;
அழிதருமங் கத்தைப் பூம்பாவை
யாக்கினா னெங்க ள[1]ண்ண லல்லோடி.

3. மாறுகொண்டொரு மீனமெனக் கடல்
வந்தடைந்தவன் மாய னல்லோடி;
கூறுமந்தப் பெருங்கடலு மெங்கள்
குறுமுனி வன்குடித்தா னல்லோடி.

4. செங்கண் மாலன்று வேழ மளித்த[2]
திருவருளைத் தெளிந்ததில்லை[3]யோடி;
வெங்கரா முண்ட மைந்தனைச் சுந்தரன்
மீட்ட மேன்மையுங் கேட்டிலை யோடி.

5. ஏங்குமானிரை காக்க வரையை
யெடுத்துமாரி தடுத்தா னெங்க ளாண்டை;
யோங்குமேரு நெடுங்கிரி யைக்கர
புண்டரிகத் திலங்கக் கொண்டா னென்னாண்டை.

(பி - ம்) 1.ஞானசம்பந்தனல்லோடி. 2.மழைத்த. 3.தெளிந்தி

6. இறாகு வச்சிர னாக்கிக்கொள் வேலை
யிடத்தி லங்கையை யழித்தா னென்னாண்டை;
முறா வலற்ப மரும்பிமரு வலர்
முப்புரங்க ளெரித்தா னெங்க ளாண்டை.

7. ாண்டுவெம் பாரதஞ் செய்து மைவர்க்குயி
ரீந்தா னென்னுடை யாண்டை;
தாண்டவஞ்செய்து சூலமுமேந்திச்
சர்வசங்காரஞ் செய்தா னென்னாண்டை.

8. முடிகவித்து விபீடணனுக் கன்று
மூதி லங்கை யளித்தா னென்னாண்டை
இடைதவிர்ந்த மறைவனந் தன்னில்
எலிக்கு மூவுல கீந்தா னென்னாண்டை.

9. கேசவனை யேசுவதேது சொல்லடி
கிட்டிப் பார்க்கிலவர்க் கிவரிட்ட ரல்லோடி;
ஈசனைநீ யேசுவதேது சொல்லடி
யிருவர்க்கு முறவன்றிப் பகையு முண்டோ.

10. அண்ணியெங்க ளண்ணனெங்கள் சங்கரனாற்கே
யடுத்த தங்கையை யன்று கொடுத்தானடி;
மண்டலமகிழ் தென்கமலைத் தேவரகண்டன்
மாலுங்கன்று செந்திருவைப் பாலித்தானடி.

11. வையமுண்ட வெங்களையன் வையம்பாவியே
மாதேவன் பற்றலரை வதைத்தானடி,
ஐயமின்றி யெங்களண்ண னுங்கள் மாலுக்கே
அக்காலத்திற் சக்கரமொன் றளித்தானடி.

சனாரு ளாகி யெங்கள் கேசவன் முன்னாள்
ஏற்ற வொரு பாகந்தன்னி லேற்றினாடி;
ஓசைமணித் தேரின்மிசை யீசனார் தம்மை
யோடி விடையாகி மாயன் தாங்கினாடி.

13. மறந்திடா யென்பிழைபை யன்புகூரவே
வன்மமாக நீ யெண்ணாதே வன்மீகப் பள்ளி
சிறந்துநா மிருவருங் கூடி யாடியே
சேர்ந்துவாழ வேணுங்காணுஞ் சிரங்கப்பள்ளி.

71. நற்கவிதை கொண்டுபள்ளின் வர்க்க முரைத்த
ஞானப்பரகா சன்வாழி நற்புவி வாழி
விற்குலவுமா றன்மிகுமா னேந்து கையான்
வித்தியாதி பதிமுதலி மெய்ப்புகழ் வாழி
நற்கமலை நகர்வாழி சாமந்தன் வாழி
தானமும் பரிகலமும் தழைத்து வாழி
மற்குலவு திண்புயத்தான் மல்லைய பூபன்
வாழிபூமி யானெந்நா ளும்வாழி வாழியே.

72. ஆண்ட புகழ்க்கமலை யத்தரே போர்விசயன்
பூண்டசிலை தாக்கப் பொறுத்தீர்—ஈண்டு
வெறுப்பதுவே யானாலு மெய்யடியேன் புன்சொல்
பொறுப்பதுமக் கன்றோ புகழ்.

நப்பைஞ்ஞீலிக்கோயில் அர[illegible]

திருச்சி பிஷபஹீபா ஹைஸ்கூல் தமிழ் ஆசிரியா

திரு. R பஞ்சநதம் பிள்ளை அவர்க[illegible]

எழுதப்பெறறு

திருப்பைஞ்ஞீலி தேவஸ்தானம் நிர்வாகத தலைவா

திரு. P. சுப்பையா பிள்ளை, B. A.,

கௌரவ தாமகர்ததாகள

திரு நா. அரங்கசாமி செட்டியார்

திரு தா. செவந்திலிங்கம் பிள்ளை

ஆகியவர்களால வெளியிடப் பெற்றது.

இரண்டாம் பதிப்பு

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

1942

செயயப்பட்டது]

முகவுரை

மனிதனை விலங்கு நெறியினின்று விலக்கித் தன்னையும், தன்னைச் சூழ்ந்துள்ள பந்த பாசங்களையும், தலைவனையும் உள்ளவாறு அறிவித்துத் தெய்வ நெறியில் செலுத்துவது சமய வாழ்க்கையாம். பசுவின உடல் முழுதும் பால் மறைந்திருந்த போதிலும மடியின் மூலமாகவே பால தோன்றுவது போல, எல்லாப் பொருள்களிடத்திலும் இறைவன் கலந்திருந்த போதிலும் ஆன்றோர்கள் அருள்பெற்ற ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் அருள்புரிவான் எனப் பெரியோர் கூறுவர். தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்கள் தமிழ் அரசர்கள் காலத்தில் மிகவும் பெருமையுற்றிருந்து பிற்காலத்தில் அவற்றின் பெருமைகள் குறையலாயின. கோயிற் பூஜைகள் சரிவர நிகழாதாயின் நாட்டின் நலம் குன்றுமென நூல்கள் கூறும்.

சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகம (Hindu Religious Endowments Board) ஏற்பட்டுத் தற்கால நிர்வாகத்தில் ஆலயங்கள் யாவும் புத்துயிர் பெற்று வருகின்றன. செந்தமிழ்ப் பற்றுடையவரும், சைவரும், கலவெட்டு ஆராய்ச்சியாளரும், போர்டின் கமிஷனருமாகிய திருவாளர் - ராவ்பகதூர் - C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B. A., B. L., அவர்கள் தேவஸ்தானங்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கைக்கு இணங்க, இச்சிறு நூல் திருப்பைஞ்ஞீலிப புராணத்தைத் தழுவி யாவரும் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய நடையில் எழுதப் பெற்றுள்ளது. இத்தலத்தைப்பற்றிய சில துதிப் பாடல்களும் பின்னே சேர்க்கப்பட்டுள்ளன. திருச்சி தமிழ் ஆசிரியர் திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள் இந்நூலை அன்புடன எழுதி உதவினார்கள். இரண்டாம் பதிப்பு புதிய திருத்தங்களுடன் வெளியிடப் பட்டுள்ளது.

திருப்பைஞ்ஞீலி
தேவஸ்தானம
26—8—42

P. சுப்பையா பிள்ளை, B. A.
நிர்வாகத் தலைவர்

உள்ளுறை

			பக்கம்.
1.	தலமும் இருப்பிடமும்	...	5
2.	கோயிலின் அமைப்பு	...	6
3.	தலத்தின் வேறு பெயர்கள்	...	7
4.	மூர்த்திகளின் பெயர்கள்	...	8
5.	தீர்த்தங்கள்	...	9
6.	ஆலயத்திலுள்ள பிறகோயில்கள்	...	10
7.	சுற்றுக் கோயில்கள்	...	10
8.	முக்கிய திருப்பணிகளும் சீர்திருத்தங்களும		10
9.	தலப்பெருமைகள்	..	11
10.	கல்வெட்டுக்கள்	..	13
11.	புராண வரலாறுகள்	...	15
	(1) தென்கைலாயப் பெயர் பெற்றது	...	16
	(2) அப்பருக்குக் கட்டமுது அளித்தது	...	17
	(3) யமனுக்கு அதிகாரங் கொடுத்தது	...	22
	(4) கலியுகராமபாண்டியன் அருள்பெற்றது		23
12.	கர்ணபரம்பரைக் கதைகள்	...	26
13.	வழிபட்டோர்	...	27
14.	பூஜைகள்	...	28
15.	திருவிழாக்கள்	...	28
16.	சொத்துக்களும் வருவாயும்	...	28
17.	நகை வாகனங்கள்	...	29
18.	ஆலய நிர்வாகம்	...	29
19.	தனி நூல்கள்	...	29
20.	தேவாரமும் தனிப்பாடல்களும்	...	32

திருப்பைஞ்ஞீலிக் கோயில் வரலாறு

மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாந்தொழு தேத்தும்பைஞ் ஞீலியெம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே.

1. தலமும் இருப்பிடமும்

எவ்வுயிர்க்குந் தாயாகித் தன்னை அன்புடன் அடைந்தார்க்குத் தஞ்சமென நிற்கும் தனிப்பரஞ் சுடராகிய தண்ணளி மிகுந்த இறைவன், உலகத்தில் உள்ள உயிர்கள் தன்னை வழிபட்டு இன்புறும் வண்ணம், ஆங்காங்குள்ள பல கோயில்களில் எழுந்தருளி யிருந்து அருள் செய்து வருகின்றான். தமிழ் நாட்டில் அத்தகைய சிவத்தலங்கள் 274 உள்ளன. அவைகளுள் என்றும் வற்றாத நீர் வளமுடைய காவிரிபாயும் சோழ நாட்டில் காவிரிக்கு வடகரையில் உள்ள பல திருத்தலங் களில் திருப்பைஞ்ஞீலி என்னும் சிறந்த தலம் ஒன்று உள்ளது. பசுமையான ஞீலி என்னும் ஒருவகை வாழை யைக் கொண்டுள்ளதால் இத்தலம் திருப்பைஞ்ஞீலி எனப் பெயர் பெற்றது.

இத்தலம் திருச்சி ஜில்லா லால்குடி தாலூகாவில் திருச்சிக்கு வடமேற்கில் 11 மைல் தூரத்தில் உள்ளது. திருச்சியிலிருந்து மண்ணச்சநல்லூர் வழியாயும், தொடையூர் வழியாயும், பாச்சூர் வழியாயும் இவ்வூரை அடையலாம். மண்ணச்சநல்லூரிலிருந்து மேற்கில் 4 மைல் தூரம் நல்ல கற்சாலையும், தொடையூரிலிருந்து

வடக்கே 3 மைல வரை கரடு முரடான நடைப்பாதை யும் உணடு. இப்பதியைச் சுற்றிக் கிழககில மண்ணச்ச (மண்ணிறைச்ச) நல்லூரும், தெறகில பாணடிபுரம் என் னும சிறறாரும, மேறகில சிறுகாமபூரும, வடகில திரு, வெள்ளறை எனனும வைணவத தலமும உள்ளன.

2. கோயிலின் அமைப்பு

கோயில ஊருககு மததியில அழகாக அமைநதுள ளது. கோயிலின உளளேயிருநது வெளிவீதிவரையில 4 பிரகாரஙகள உளளன. 2-ம பிரகாரததில வாழைகள செழிதது வளாநதுள்ளன. 3, 4-வது பிரகாரஙகளுககுப பெரிய மதிலகளும வாயிலகளும உளளன. 4-ம பிரகா ரத்து மதில வாயிலில முடிவுபெருத முழுதும கருங கலலால, கடடபபடட பெரிய மடடகோபுரம உள ளது. இது சுநதரபாணடியத தேவா காலததில ஏற படடதெனறு கூறுகினறனர். இதன வாயிலின உயரம சுமார் 35 அடி. அகலம 15 அடி. இதில உளள பழங கால மரககதவுகள மகமமதிய அரசாட்சியில எரிக்கப படடுத தறபோது வேறு கதவுகள இருககினறன. இக்கோபுர வாயிலிலும உள பிரகாரததிலும பல கல வெட்டுககள உளளன. ஆதனூா எனனும கிராமததில கோபுர வேலைககாக நிலஙகள விடபபட்டு வேலைகள் நடைபெறறு வநததாகக கோபுர வாயிலில உளள கலவெட்டினால தெரியவருகிறது. கோயிலின விஸதீர ணம சுமாா 1,70,800 சதுர அடி. தெனவடல மதிலின நீளம சுமாா 305 அடி. கிழமேல மதிலின நீளம் சுமார் 560 அடி. புதுமைப் பொருளகள மலிநது விளஙகும இககாலத்தில இததலம மிகப பழமையானதாய் விளங்குகின்றது. இது ஒரு காலததில சீரும் சிறபபு

முறற நகரமாய் விளங்கியிருக்க வேண்டுமெனத தெரி கின்றது.

ஆலயத்துககு வெளியே விநாயகா அமர்ந்துள்ள வசநத மணடபம, 3-ம் பிரகாரததில உள்ள நூற்றுக் கால மணடபம, நடுவில உளள நாலுகால மணடபம, 2-ம பிரகாரததில உளள சுறறுப பிரகார மணடபம ஆகிய மணடபஙகள உளளன. வசநத மண்டபத்துக குப பினனே ஒரு நநதவனம உளளது.

3. தலத்தின் வேறு பெயர்கள்

இததலததிறகு கதலிவனம, கதலிவனம, அரம்பை வனம, அவுரிவனம, விமலாரணயம, தரளகிரி, முதது மலை, சுவேதகிரி, ஓஙகாரகிரி, பிரணவகிரி, வியாகரபுரி, வெளவரை, மேலைசசிதமபரம, தெனகைலாயம் முதலிய வேறு பெயாகளும உணடு.

ஒரு வகை வாழையைக கொணடிருந்ததலால கதலி வனம் அரமபைவனம எனறும, விமலையாகிய பாாவதி தஙகித் தவம செயததால விமலாரணயம, கதலிவனம் எனறும, வெணமை கலநத கறகளைக கொணடிருந்தத லால தரளகிரி, முததுமலை, சுவேதகிரி, வெளவரை என றும, பிரணவமபோல அமைநதிருபபதால ஓஙகாரகிரி, பிரணவகிரி எனறும, கறகளில புலிவரிக கோடுகள அமைநதிருபபதால் வியாகரபுரி எனறும, வடகைலா யததிலிருநது ஒரு துணடு வநது விழபபெறறமையால தெனகைலாயமெனறும பெயர்கள பெறும. இததலம மிகவும் மேட்டுப் பாஙகான நிலப் பகுதியில அமைககப் பட்டு, ஆஙகாஙகுச சிறுசிறு பாறைகள கரிய புலிவரிகளு டன காணப்படுகினறன. இத்தலததிலுள்ள வாழையை ஒருவரும் உபயோகிப்பதில்லை. தெய்வமாகவே கருதி

போற்றுகின்றனர். இத்தலத்தில் தவம் செய்த பார்வதி
யின் கட்டளையால் தேவலோகத்து தேவரம்பைகளே
வாழை மரங்களாயிருந்து நிழலைத்தந்து கொண்டிருக்
கின்றனர் என்பது புராண வரலாறு அம்பிகை மிகக்
கருணையுடையவள். அதற்கு அறிகுறியாகவே மிகவும்
ஈரமும் குளிர்ச்சியுமுள்ள வாழைகள் இவ்விடம் அமைந்
தன போலும்.

4. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்திலுறையும் பெருமானுக்குக் கதலி வசந்
தர், நீலவண்ணநாதர், நீலகண்டர், சக்கரத்தியாகேசர்,
ஆரணிய விடங்கர் என்னும் பெயர்களும், அம்பிகைக்கு
விசாலாட்சியம்மை, நீணெடுங்கண்ணி என்னும் பெயர்
களும் அமைந்துள்ளன. திருமாலுக்குச் சக்கரம்
கொடுத்த காரணமாகச் சக்கரத்தியாகேசர் என்றும்,
செயற்கையாய்ச் செய்யப்படாமல் வனத்தில் இயற்கை
யாய்ச் சுயம்புவாய் வெளிப்பட்ட காரணத்தால் ஆர
ணிய விடங்கர் என்றும், வாழையின் நிழலில் தென்
றல் வீசும்படி தங்கியிருந்ததால் கதலிவசந்தர் என்
றும் பெயர்கள் வழங்கலாயின. தலவிநாயகர் வசந்த
மண்டப விநாயகர் என்றும், நடராஜர் இரத்தின
சபாபதி என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. நட
ராஜர் சபை இரத்தின சபை. வசிட்ட முனிவருக்கு நட
னக்காட்சி அளிக்கப்பட்டது என்பர். மகாமண்டபத்
தில் நடராஜருக்குரிய ஒரு கல் பீடம் உள்ளது.
நடராஜருக்குரிய விசேட அபிஷேக நாட்களில் இதற்கு
அபிஷேகம் செய்யப்படுகின்றது. இத்தலத்தில் இரண்டு
அம்மன் சந்நிதிகள் உள்ளன. பழமையான சந்நிதி
கிழக்கு நோக்கியும், மற்றொன்று தெற்கு நோக்கியும்

உள்ளன. பழைய இடத்தில புதிய அம்மனையும, புதிய இடததில் பழைய அமமனையும் பிரதிட்டை செய்துள் ளார்கள். ஒருகாலத்தில பழைய இடததில இருநத அம்மன பின்னமடைந்து அதை அபபுறப்படுததிப் புதிய அமமனைப் பிரதிட்டை செயதபோது, திருபபணிககுக காரணமாயிருநத துரையூா ஜமீநதாருடைய கனவில அமமன தோனறித தனனை அபபுறப படுததாமல ஆலயததிலேயே அமைகக வேணடுமென வறபுறுததிய தால அநதப பழைய வடிவததையே தெறகு நோககிய புதிய சநநிதியில பிரதிட்டை செயதிருபபதாகக கூறுகினறனா. எனினும இவவடிவமே மிகச சோதியு டன துலஙகுகினறது.

5. தீர்த்தங்கள்

ஆதியில பாாவதியால உணடாககபபடடு இப் பககம ஓடியதாகச சொலலபபடும விமலாரணய நதி இபபோது காணபபடவிலலை. இககோவிலைச சேரநத தீாததஙகளா மணிகாணிகை, அபபா தீாததம, தேவ தீாததம, அகனி தீர்ததம, யமதீாததம, கலயாண தீாத தம, விசால புட்கரிணி எனபன. இவறறுள தேவதீர்த் தம எனபது ஆலயததுககு வடககே உளள பெருங குளம. வசந்த மணடபததிறகு வெளியே உளளது அகனி தீாததம. இதில குளிப்பவாககு வெணகுட்ட நோய் நீஙகுவதாகக கூறுகினறனர். உளளே இரணடு அமமன சநநிதிகளுககும இடையில உளளது விசால புடகரிணி. இது அமபிகையான விசாலாடசியமமை யால உண்டாககப்பட்டது. இது விசால தடமெனவும பெயர் பெறும். இப்பககத்தில உளள நீர் நிலைகள நலல ஊற்றுக்களை யுடையன.

6. ஆலயத்திலுள்ள பிற கோயில்கள்.

(1) வசந்த மணடபத்திலுளள வசந்த விநாயகர் கோயில். இது தல விநாயகர் எனறு கூறப்படுகின்றது

(2) பெரிய கோபுர வாயிலை அடுத்துள்ளது சோறுடை ஈசுவரர் கோயில. அபபா சுவாமிகளுககுப பிராமண வேடததுடன வநது சோறும நீரும தந்து காட்சி கொடுதத இறைவன இவ்விடததில மறைநத தாகக கூறுவா.

(3) இதறகு எதிரில உள்ளது துரையூா ஜமீன் தார்கள ஸதாபிதத காசி விசுவநாதா கோயில.

(4) இநதப பிரகாரததின தெறகில யமன கோயி லும அதைச சேர்நத தீாததமும உளளன. இது நில மட்டததுககுக கீழே பாறையில அமைநதுளளது. இது பலலவா வழிபட்ட கோயிலாயிருககலாமெனக கருது கினறனர்.

(5) சுவாமி சநநிதிககுப பினனே மகாலடசுமி (திரு மகள்) கோயிலும, திருமால கோயிலும உளளன. இவை கலியுகராமபாணடியன காலததில ஏறபட்டவை எனபர்.

7. சுற்றுக் கோயில்கள்

இவ்வூா சிவன கோவிலைச சோநதனவாக நீலிவனத தாயி எனனும பிடாரி கோயில, ஐயனூர் கோயில, பூஞ்சியம்மன கோயில, ஆதாளி கோயில, மதுரை வீரசாமி கோயில எனனும கோயிலகள இருககினறன. அவைகட்குத தனியே பூஜைகள் நடைபெறுகினறன.

8. முக்கிய திருப்பணிகளும் சீர்திருத்தங்களும்

பழனி சிவம் என்பவரும மறறும உளள அன்பர் களும ஆகிய இவர்களுடைய முயறசியால் கோயில

பழுதுபார்க்கப்பட்டு 1934-ம் ஆண்டு கும்பாபிடேகம் சிறப்பாக நடைபெற்றது. பொன் தாடங்கம் என்னும் இரண்டு காதணிகள் செய்யப்பட்டு, சிருங்கேரி மடத்துப் பூஜையில் சில தினங்கள் வைக்கப்பட்டுப் பிறகு இத் தலத்து அம்மனுக்குச் சாத்தப்பட்டுள்ளன.

சென்ற சில மாதங்களாகக் கோயிலில் சில புதிய திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. மதில்களில் ஊடுருவிப் பதிந்திருந்த வேர்கள் நீக்கப்பட்டு மதில்கள் பழுது பார்க்கப்பட்டன. கோயிலுக்கு முன்னேயுள்ள நூற்றுக்கால் மண்டபம் செப்பனிடப்பட்டு அதில் தற்போது தேவஸ்தான காரியாலயம் இருந்து வருகிறது. தேர் நிலையின் மேல் கட்டிடம் புதுப்பிக்கப் பட்டது. கோயிலுக்குள்ளே இருள் மூடிக்கிடந்த இடங்களில் வெளிச்சம் உண்டாக்கப்பட்டது. சில வருடங்களாக நின்று போயிருந்த பிரமமோற்சவம் சென்ற ஆண்டு முதல் நடைபெற்று வருவதுடன் இழுக்கப்படாதிருந்த பெரிய இரதமும் ஓடி வருகிறது. கோயிலைச் சேர்ந்த சுற்றுக் கோயில்களில் ஒன்றாகிய **நீலி வனத்தாயி** அம்மன் கோயிலில் திருப்பணி தொடங்கப்பெற்று முடிந்து நாளது சித்திரபானுஹு ஆவணி மீ 31உ (16-9-42) கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. தற்போதுள்ள நிர்வாகத் தலைவரின் ஊக்கத்தாலும், மற்ற அன்பர்களின் உதவியாலும் இத் திருப்பணிகள் நிறைவேறின.

9. தலப் பெருமைகள்

இத்தலத்து மூல லிங்கம் சுயம்புமூர்த்தி. துவஜஸ்தம்பத்துக்குப் பக்கத்திலுள்ள நந்தியும் சுயம்பு என்று கூறப்படுகின்றது. மூல லிங்கத்துக்குப் பின்னுள்ள சுவரில் 27 விளக்குகள் நட்சத்திரங்களைப்போல ஏற்ற

படுகின்றன. 2-ம் பிரகாரததின் வெளிப்புறததில் பல வாழைகள செழிதது வளர்நதுளளன. சுவாமி சநநிதிக குப் போகும் வழியின இரு பககஙகளிலும இரணடு சோமாஸகநத வடிவஙகள உள்ளன. ஒனறு உததர கைலாசமூர்ததி என்றும, மறறொனறு தக்ஷிண கைலாச மூர்ததி எனறும வழஙகப்படுகினறன. இவறறுள ஒனறு உத்தராயணத தொடககததில, தைமாதம முதலி லும, மறறொனறு, தக்ஷிணயன ஆரமபததில ஆடிமாதம முதலிலும வெளிப்புறப்பட்டு ரிஷப வாகனததில காட்சி யளிககும். இவ்வாலயததில நவககிரக வடிவஙகள இலலை. அதறகுப பதிலாக துவஜஸதமபததுககுப் பககத்தில 9 குழிகள அமைதது அவறறில விளககுகள எரிககப்படுகினறன. சுவாமி சநநிதியில உளள மணட பததிலும, அமமன சந்நிதியிலும் மேல தளததில மீன் வடிவஙகள பொறிககபபட்டுள்ளதால இது ஒரு காலத தில பாணடிய மனனரின ஆட்சிககுட்பட்டிருககலாம எனத் தெரிகிறது. சுவாமி சநநிதியில உளள முதல பிரகாரததிலும, வெளியிலும இரணடு சுரங்கஙகள இருநது அவறறுள ஒனறு கருவூலமாக உபயோகப பட்டு வந்ததாகத் தெரிகிறது. தறபோது அவை இரண டும அடைபட்டுள்ளன. இததலததில வசிட்ட முனிவ ருக்கு நடராஜர் நடனககாட்சி அளிதததாக ஐதீகம. திருநாவுககரசு சுவாமிகள தல யாததிரை செயது இப பதியைத தரிசிக்க வரும்போது வெயிலின வெபபத தால வருந்த, அப்போது இறைவன பிராமண வேடங கொண்டு எதிரில தோனறிப் பொதி சோறும தண்ணீ ரும தநது மறைந்தருளிய மாணபுடையது. கோவிலில உள்ள இரண்டு துவஜஸ்தமபஙகளும பெரியாணடவா, சின்னணடவர் எனனும தேவதைகளாகப் போறறப

பட்டு அவை இரண்டையும் மக்கள் மிக்க பக்தியுடன் வழிபட்டு வருகின்றனர். பிற ஆலயங்களில் உள்ளதைப் போல அல்லாமல் இவ்வாலயத்தில் பள்ளியறை சுவாமி சந்நிதியில் அமைந்துள்ளது. கோடைகாலத்தில் ... வரட்சியுற்றிருந்த போதிலும் மாரிக்காலத்தில் ... கம் அமைந்துள்ள கொப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், முதல் பிரகாரம் முற்றும் நீர் ஊற்றுக்க ளால் தண்ணீர் நிறைந்து இறைவனின் தண்ணருளைக் காட்டுகின்றது.

10. கல்வெட்டுக்கள்

இத்தலத்தின் வெளியேயுள்ள பெரிய மட்டக் கோபுரத்திலும், ஆலயத்திற்குள் சுவாமிகோயில் அம் மன் கோவில் மண்டபங்களிலும் பல தமிழ்க் கல்வெட் டுக்கள் உள்ளன. அவற்றுள் சில பகுதிகள் பின்னே தரப் பெற்றுள்ளன.

(1) மட்டக் கோபுரத்தின் இருபக்கத்துச் சுவர் களிலும் பல கல்வெட்டு வரிகள் உள்ளன. அவைகளுள் தென்புறச் சுவரில் உள்ளவை :—

மெலகொண்டான

உடையார் திருப்பைஞ்ஞீலி உடையார் கொயில் தானக்காரருக்கு கொயிலில் செய்கிற திருநிலை ஏழு கொபுரத் திருப்பணிக்கும பல திருப்பணிக்கும வடலாக வளளுவப பாடி நாட்டில ஆதனூர நான்கெல்லை உட்பட்ட நனசெய புனசெயயும குளமும கரையும பொதுவும் பொகாதியும் உட்பட 31-வது முபபத்தொன்றுவது காரத்திகை மாதமுதல் இறையிலியாகத் தநதோம. இநநாள முதல் கைக்கொணடு நன்செய் புன்செயயும் கமுகும கொழுந் தும் கரும்பும் செஙகழு நீரும உள்ளிட்டுத் தாம வேணடும பயன் செய்து கொணடு வஜாதவரை செல்லுக்காக கலலிலும செமபி

லும் வெட்டி நான்கெல்லையிலும் கல்வெட்டி நாட்டிக் கொண்டு அனுபவிக்கல்."

வடபுறச் சுவரில் உள்ளவை:—

நீலிவன அகவத்து கோனேரினும (கோன ரோ இன்மை) கொணடான உடையார திருபபைஞ்ஞீலி உடைய நாயனார் கோயில் தானததுக்கு கரிகாலகனன வளநாட்டு மேலை வளநுவபபாடி நாடடு பெரிய களளிகொடி நான கெலலைகருட் பட்ட நனசெய, புனசெய, நோகிலைமரம ஊாநததம உளபட இந நாயனார் கோயில் திருநிலை எழுகோபுரத திருபபணிகரும பலதிருப் பணிகரும் திருபபணிப் புரமாக பொனவரிகாசு கடமை பெறுவா. பல பேறு, இலாஞசினைப பேறு, தறியிறை, செககிறை, தட்டாா பாட்டம, இடையாவரி, இனவரிகளும, புனசெயநாட்டு வினியோ கம உட்பட்ட அனைததாயஙகளும வரியிலும கழிதது முபபததா ருவது மாாகழி மாதம் முதல் இந்நாயனாருககு முதலடஙக இறை யிலியாகத தநதோம். இபபடிககு இவவோலைபபடி பாடாகக் கொணடு இப்படி வஜாரிதது செலலுமபடியாக இவவூா நான கெலலையும திருச சூலஸதாபனமும பணணி கலலிலும செமபி லும வெட்டிக கொளக. இவை ஒருடையான எழுதது. இவை வாணுவாரிய னெழுதது. யாணடு 36. நாள 154."

In the unfinished Gopura in the front of the Temple. A Record in the 31st year of Koneri Mel Kondan. (Inscriptions of the Madras Presidency.)

(2) கோயிலுககுள மண்டபச சுவாகளில உள்ள தமிழக கலவெட்டுககளின செயதிகள:—

1. சுவாமி சநநிதியின முதல பிரகாரததுத தென் சுவரில ராஜகேசரி வாமன் எனனும முதலாவது ராஜாதி ராஜ தேவ சோழன எனபவன (கி. பி. 1018—1052) தான பட்டததிறகு வநத 27-வது ஆணடில செய்து வைதத தான சாசனக குறிபபு

௨. அதே சுவரின் அடியில் பரகேசரி வாமன் என்னும் முதலாம் ராஜேந்திர சோழதேவன் என்பவன் (கி.பி. 1012—1032) தனது பட்டத்தின் 6-ம் ஆண்டில் 185-வது நாளில் ஆண்டு தோறும் ஆராதனைக்காக 64 கலம் தானியம் கொடுக்க மூலதனமாக 150 பொற்காசுகளை மகாசபைக்கு எழுதி வைத்த தான சாசனக்குறிப்பு. (இவனுக்குக் கங்கைகொண்டசோழன், விக்கிரம சோழன், பண்டிதசோழன் என்ற வேறுபெயர்களும் வழங்குகின்றன. இவன் தன்பெயரால் ஓர் நகரம் அமைத்துக் கங்கைகொண்ட சோழீசுவரம் என்னும் ஆலயத்தையும் அமைத்துள்ளான்)

3. முதற் பிரகாரத்து வடசுவரில் ராஜகேசரி வாமன் என்னும் முதலாவது ராஜாதி ராஜதேவ சோழன் என்பவன் (கி. பி. 1018—1052) கோவிலுக்குச் சில நிலங்களை 160 பொற்காசுகளுக்குக் கிரயம் செய்த சாசனக் குறிப்பு.

4. இரண்டாம் பிரகாரத்தில் அம்மன் கோயிலின் வடபுறச் சுவரில் பரகேசரிவாமன் என்னும் இரண்டாம் ராஜராஜ தேவ சோழன் என்பவன் (கி. பி 1146—78) தன் பட்டத்தின் 25-ம் ஆண்டில் எழுதி வைத்த தான சாசனக் குறிப்பு.

This place (Tiruppangili) which figures in the old Tamil Poems and which was visited by Appar (to whom God is said to have given food) is noted for some curious legends and for a temple dedicated to the God of death. (I. M. P.)

11. புராண வரலாறுகள்

இத்தலத்திற்கு வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட புராணம் ஒன்றுண்டு. 25 அத்தியாயங்களைக் கொண்ட விரிவான வரலாற்றை யுடையது. சோழநாட்டில் கும்பகோணத்தில் இருந்து அரசு புரிந்த சந்திராபீட சோழனுக்கு அகத்திய முனிவர் திருப்பைஞ்ஞீலியின் மகத்துவங்களைச் சொல்லி யருளிய தாகப் புராணங் கூறுகின்றது. அவ்வரலாறுகளில் சில கண்டுச் சுருக்கிக் கூறப்படும்.

16

(1) தென்கைலாயப் பெயர் பெற்றது

முன் ஒரு காலத்தில் தேவலோகத் தலைவனான இந்திரன், தேவர்களும், முனிவர்களும், மற்றைப் பரிவாரங்களும் சூழ்ந்த தனது அழகிய சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். அப்போது உலகத்தைத் தாங்கும்படியான ஆதிசேடன் அங்குவர இந்திரன் அவனைப் பலவாறுகப் புகழ்ந்து வரவேற்றான். அவ்வார்த்தைகளைக் கேட்ட வாயுதேவன் மிகவும் வெகுண்டு ஆதிசேடனைப்பற்றி இகழ்ந்து பேசலானான். ஆகவே வாயுதேவனுக்கும் ஆதிசேடனுக்கும் கோபம் பொங்கி எழுந்தது. இந்திரனாலும் மற்ற எவராலும் அவர்கள் கோபத்தைத் தணிக்க முடியவில்லை. 'இவர்கள் கோபத்தைப் பரமசிவன் ஒருவன்தான் தீர்க்கமுடியும்', என்று இந்திரனும் மற்றவர்களும் தீர்மானித்தனர். பிறகு யாவரும் கூட்டமாய்ப் புறப்பட்டுக் கைலாயத்தை அடைந்து அங்கு வீற்றிருக்கும் சிவபெருமானிடம் அணுகி வாயுதேவனுக்கும், ஆதிசேடனுக்கும் உண்டான பகைமையையும், அவர்கள் தாம்தாம் பெரியவர் என்று கொண்டுள்ள கர்வத்தையும் முறையிட்டனர்.

அவைகளைக் கேட்ட சிவபெருமான் அவர்கள் கர்வம் அடங்க ஒரு சூழ்ச்சி செய்தார். கைலாயமலையை ஆதிசேடன் இறுகப்பிணித்துச் சுற்றிக் கொள்ளவும், வாயுதேவன் தன் பலங்கொண்டமட்டும் காற்றை வீசி ஆதிசேடனுடைய பிணிப்பைத் தளர்த்தவும் கட்டளையிட்டு, இருவருள் எவர் தம் செயலில் வல்லவரோ அவரே பெரியவர் என்று தீர்மானித்தார். அவ்வாறே ஆதிசேடன் கண்களில் நெருப்புப் பொறி சிந்த மிகவும் வெகுண்டு தன் நீண்ட உடலால் கைலாயமலையைச் சிறி

தும •இடமின்றிச் சுற்றி வளைத்துக் கொண்டான் வாயுதேவனும தன் முழுபலங் கொண்டு சண்ட மா(ததைதை வீசினுன். உலகம் யாவும் அதிர்ந்தன. உயிர்க ததளித்தன. முனிவரும் பிறரும கலக்கங் கொண்ட னர். இறைவனுடைய குறிபபினுல ஆதிசேடன த பிணிபபைச் சிறிது தளாததினை. அப்போது கை மலையிலிருநது எட்டுத துணடுகள கிளமபி வேகமாக பறநது வநது தெனதிசையில விழுநதன அமமலை துணடுகள விழுநத இடஙகள திருககாளததிமலை, தி சிராமலை, இலஙகைத திருககோணமலை, ரஜிதகிரி, நீரத கிரி, சுவேதகிரி, திரு ஈங்கோயமலை, இரததினகிரி ஆகி இடஙகளாகும. இவறறுள சுவேதகிரி எனபதே திரு பைஞ்ஞீலி எனனும தலமாகும. சுவேதகிரி எனபத வெணமையானமலை எனப பொருளபடுத தெனமை லாயம என வழஙகும். வெணமையான படிகமணிகளி இடையில மாணிககம விளஙகுவதுபோல, வெண்மை யான மதிறகறகளின மததியில பெருமான விறறிரு கினறுா.

(2) அப்பருக்குக் கட்டமுது அளித்தது

திருமுனைபபாடி நாட்டில சகல செலவஙகளு நிறைநத திருவாமூர் எனனும திருபபதியில சை வேளாளா மரபில குறுககையா குடியில கி. பி. 6-ம் நூறறுணடில புகழ்மிகக புகழனுா எனபவர்ககும, மாதி சிறநத மாதினியாா எனபவாககும புதலவராகத தி நாவுககரசா திரு அவதாரம செயதாா. இவா பிறந் போது மருள நீககியார் என அழைக்கப பட்டார். இ ருககுத் திலகவதியார் எனனும அருமைத தமககையா ஒருவர் உணடு. திலகவதியாரைக்கலிப்பகையார் எனப ருக்குத் திருமணம செய்து கொடுக்கப் பெற்றே

எண்ணி யிருந்தனர். கலிப்பகையார் போர்மேற் சென்று இறக்கவே திலகவதியாரும அவரையே கணவரெனக் கொணடு தம தமபியாரின் பொருட்டு உயிர்வாழநது வநதார். பெறறோர்களும காலஞ் செனறனர். மருள நீககியார் கறக வேணடியவைகளேக கறறு, கறறபடி ஒழுகி மனிதப் பிறவியைப் பெற்றதனுல அடையுமபேறு எனன வெனறு ஆராயநது வரலாஞர. இவ்வாறு வாழநது வருமபோது மருள நீககியார அககாலததில பரவியிருநத சமண சமயததின கூடடஙகளுககுச செனறு அவர்களுடைய உபதேசஙகளே உறுதியெனக் கொணடு சமணமதததிற் சோநது தருமசேனர் எனனும பெயாபூணடு வாழநது வநதார். தமமையும கைவிட்டுத தமபியார சமண சமயததிற பிரவேசிததமைத திலகவதி யார எணணி எணணித துககங்கொணடு திருவதிகைப பெருமானிடம முறையிடடுவநதார. பெருமான அமமை யாரின முறையீடடைக கேடடு மருள நீககியாரை மீண டும சைவ சமயததிறகுக கொணடுவரக கருதி அவருக குச சூலேநோய எனனும கொடிய வியாதியை மறக கருணேயால வருமாறு செயதார. மருளநீககியார அந நோயினுல மிகவும துனபுறறுப பலவகைக சிகிசசை களேச செயதும பயனபடாமல திருவருள தூணட திருவதிகையில உள்ள தம தமககையாரிடம வநது சோநதார. திலகவதியாரும சூலே நோயால துனபுறும தம தமபியாரைத திருவதிகை ஆலயத்திறகு அழைதது்ச் செனருர. மருணீககியார இனிய செநதமிழச சொற்களால " கூறறுயினவாறு " எனனும் பதிகம பாடி இறைவனேத துதிததார். சூலேநோயும நீஙகியது. அப் போது அவருக்குத திருநாவுக்கரசர் எனனும் திருநாமம் கிடைத்தது. இவருககு அப்பர், வாகீசர், ஆளுடைய

அரசு, சொற்கோ, வாக்கின் மன்னர், தாண்டகவேந்து முதலிய வேறு பெயர்களும் உண்டு. திருநாவுக்கரசர் அவ்விடத்தில் சில நாள் தங்கியிருந்தார். இவ்வாறு இருக்கப் பாடலிபுத்திரத்தில் இருந்த பல்லவ அரசன் நாயனார் மீண்டும் சைவ சமயத்தில் சேர்ந்துவிட்டார் என்பதை அறிந்து அவரை வரவழைத்துப் பலவாறு துன்புறுத்தினன். அவரை நீற்றறையில் வைத்தும், நஞ்சு கலந்த உணவைக் கொடுத்தும், மதயானையைக் கொண்டு கொல்விக்கவும் முயன்றான். அரசன் செயல் யாவும் வீணாயின. முடிவில் திருநாவுக்கரசரைக் கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலில் இடுவித்தான். இறைவன் திருவருளால் அக்கல்லே மிதவையாயிருந்து நாயனாரைக் காப்பாற்றியது. நாவுக்கரசர் கடலில் மிதந்து திருப்பாதிரிப்புலியூரக் கரையில் வந்து ஏறினார். இன்றும் அவர் கரை ஏறிய இடம் கரையேறிக் குப்பம் என வழங்குகின்றது. இந்த அற்புதங்களைக் கேட்ட சமண அரசன் சைவனாகிச் சிவபெருமானை வழிபட்டுப் பல திருப்பணிகள் செய்தான். நாவுக்கரசர் திருப்பாதிரிப் புலியூர் இறைவனைத் தரிசித்துப் பதிகம் பாடித் துதித்தார். அதுமுதல் நாயனார் பலதலங்களுக்கும் சென்று பதிகம் பாடியும், உழவாரப் படையால் புல் செதுக்குவதாகிய திருத்தொண்டைச் செய்தும் வழிபட்டு வந்தார். பிறகு சீகாழியில் உலகுய்ய அவதரித்து ஞானப்பாலுண்டு தமிழ்ப்பாக்களைப் பாடிய திருஞானசம்பந்த சுவாமிகளைச் சந்தித்து அவருடைய நட்பைப் பெற்று இருவருமாகப் பல தலங்களைத் தரிசித்தார்கள். அப்போது திருநாவுக்கரசருக்குத் திருஞானசம்பந்தரால் அப்பர் என நாமம் அருளப்பட்டது. அப்பர் சுவாமிகள் பல அற்புதங்களைச் செய்தார். திருமறைக்காட்டில் பல

காலம் மூடப்பெற்றிருந்த திருக்கோயிற் கதவைப் பதிகம் பாடித் திறந்தார். திருவீழிமிழலையில் இறைவனால் படிக் காசுப்பெற்றுப் பஞ்சத்தால் வருந்திய அடியார்களைக் காப்பாற்றினர். திருவையாற்றுக்கடுத்த திங்களூரில் அப்பூதியடிகளுடைய புதல்வன் பாம்பு கடித்து இறக்க அவனைப் பதிகம் பாடிப் பிழைப்பித்தார். இவைபோன்ற பல செய்தற்கரிய செயல்களைச் செய்து சோழநாடு சென்று காவிரியின் இரு கரைகளிலும் உள்ள தலங்களைத் தரிசித்து வந்தார். தென் கைலாயமாகிய திரிசிராப்பள்ளி, திருவானைக்காவல், திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் திருவாசி ஆகிய க்ஷேத்திரங்களைத் தரிசித்தார்.

பிறகு அப்பர் சுவாமிகள் தேவதேவனை சிவ பெருமான் வீற்றிருக்கும் திருப்பைஞ்ஞீலியை அடைந்து வணங்குவதற்கு மிகுந்த ஆவலுடையவராய் வடதிசை நோக்கி வழிநடக்கலாயினர். கடுங்கோடையின் உச்சிப் பொழுதில் காலவலியுங் கருதாது பெருமானிடம் வைத்த அன்பு காரணமாய் நடப்பதற்கரிய பரற்கற்கள் படர்ந் துள்ள வழியே நடந்தேகினர். களைப்பால் மிகவும் களைப் புற்றனர்.

உற்ற இடத்து உதவுபவனும், ஆபத்சகாயனும், உண்மையடியார் உள்ளத்தில் ஊற்றெடுத்து விளங்கு பவனும், பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரி வுடையனும், திருப்பைஞ்ஞீலியில் கோயில் கொண்ட வனும் ஆன இறைவனார் தன் பெருஞ்சடையையும், தன் கையில் உள்ள மானையும் மழுவையும் மறைத்து, விபூதி முதலிய சிவசின்னங்களைத் தரித்த ஒரு வேதிய ரின் உருவங்கொண்டு தோன்றிப் பொதிச்சோறு சுமந்து அப்பர் சுவாமிகள் நடந்துவரும் வழியில் ஒரு சோலையை யும் பொய்கையையும் உண்டாக்கி அப்பர் சுவாமிக

ளிடம் அணுகி, "யாம் பைஞ்ஞீலிப் பெருமானைப் பூஜிக்கும் அர்ச்சகர். இப் பொதிசோற்றை உண்டு நீரருந்தி சோலையில் இளைப்பாறிய பிறகு செல்லலாம்" என்றனர். பிரயாணத்தால் அயாசமுற்ற அப்பரும் கட்டமுதை உண்டு நீரருந்தி இளைப்பாறினார்.

சொல்லிறைவ ரன்பு துணையாய நடுப்பகலிற்
கல்லதாசென் றெய்தது வருங்கானின் வழியருகில்
ஒல்லைதரு நீழற்ட முண்டாக்கிக் கட்டன தோள
வல்லவராய்ச் செஞ்சடையு மானுமழு வுங்கரந்து.

பூதி யணிந்துகண்டி பூண்டுமுந்நூன மார்பிலங்க
ஆதிசிவ வேதியரா யாங்குற்றவ் வனபரைப்பார்த்த
தோதுசிவ வேடமுடை யீர்வருந்தி யெங்குப்
போதிரென்ற வேதியாக்கப் போதிலன்ப ரீதுசொல்வார்

விண்பரவு பைஞ்ஞீலி மேவலெனற் ரிப்பொதிசோ
றுண்பிரிதி னீரருந்தி யுற்றிளைப்பா றிச்செலுவீர்
எண்பெருமைப் பைஞ்ஞீலி யீசாக்க ருச்சகராயாம்
வெண்பொடியீ ரென்றுரைசொல் வேந்தரவை செய்துவந்தார்.

பிறகு அப்பரும், வேதியராய் வந்த விமலரும் நடந்து சென்று திருப்பைஞ்ஞீலிக் கோயிலை அடைந்தனர். கோயிலின் கோபுரத்தை அணுகியவுடன் துணைவராக வந்த வேதியர் மறைந்தார். அப்பரும் மனமதளர்ந்து பெருமானைப் பலவாறாகத் துதித்தார். கருணையே உருவாகக் கொண்ட பைஞ்ஞீலிப் பெருமானும் பார்வதி சமேதராய் இடபவாகனத்தில் காட்சி கொடுத்தார். அப்பரும் சில காலம் அவ்விடத்தில் தங்கி உழவாரத் திருப்பணி செய்து வந்தார். அப்பருக்குக் கட்டமுதளித்த உற்சவம் ஆண்டு தோறும் சித்திரைமாதம் அவிட்ட நட்சத்திர தினத்தில் மிகச் சிறப்புடன் நடைபெற்று வருகின்றது.

(3) யமனுக்கு அதிகாரங் கொடுத்தது

சிவபக்தரான மிருகண்டு முனிவர்க்கு மார்க்கண டேன் என்பவன் புதல்வனாகத் தோன்றிச் சகல கலைகளை யும் கற்று அறிவில மிக்கானாய் யாவரும புகழுமபடி வளர்ந்து வந்தான். அவன் பதினாறு ஆணடே உயிர் வாழவன் எனச சிவபிரான அருளியிருந்தார். அவனுக் குப் பதினைநது வயது நிறைநதபோது பெறறோர் அவனுககுக கிடைதத அறப ஆயுளை எணணி வருநதி னர். இதை யறிநத மார்ககணடன திருககடவூரில உளள சிவபெருமானின் பாதமே அடைககல மென று பூஜை செய்தான. பூஜையையும கவனியாமல யமன மார்ககணடனைப் பாசததால பிணிததான. அபபோது சிவபெருமானர் கோபததுடன தோனறி யமனைப் பாத லததில விழுமபடி உதைததுத தளளி மார்ககணடனை என றும பதினாறாக இருககச செயதார யமனும வீழந திறநதான. யமபுரியும அழிநதது. யமன இறநத காரணததால உலகததில உளள உயிரவகைகள யாவும இருகக இடமின்றிப பெருகின. மலைகளிலும வனங களிலும் உயிர்கள் நிறைநதன. நீரில வாழும் உயிர் களும நிரமபின. உலகததில புணணியஙகள குறைநது பாவஙகள நிறைந்தன. நாலவகை மரபினரும தஙகள தங்கள் கருமஙகளை விட்டனர். கோயிலகளில பூஜைகள குனறின.

இவ்வாறிருகக, திருப்பைஞ்ஞீலியைச் சூழ்ந்துளள இடஙகளில மட்டும் வழககமபோல உலக காரியஙகள் நடைபெற்று வந்தன. பிற ஆலயஙகளில உளள சிவ கலைகள் யாவும் இததலததில வநது சேர்ந்தன. யமன் காரணமாகச் சிவபிரானுககுண்டான கோபம் நீஙகா

திருப்பணிதக் கண்ட பிரமன், திருமால், இந்திரன், பூமி தேவி முதலியோர்கள் திருப்பைஞ்ஞீலிககு வந்து பல காலம தவம் செய்தார்கள். சிவபெருமான் அவர் களுக்கு ரிஷப வாகனததில காட்சி கொடுத்து அவர்கள் குறைகளைக கேட்டு வேண்டிய வரஙகளைத தந்தார். சிவ பெருமான், கோயிலின தெனதிசையில பாதலத்தில ஒரு பிலததுவாரததின வழியே யமனை வரவழைததார். சூரியன புதலவனான யமனும வணஙகினான. சிவ பெருமான யமனுககு உணமைச சிவபகதாகளைக கிட்ட லாகாது என்று பல உபதேசஙகளைச செயது அவனுககு முனபோலவே அழித்தல தொழிலையும அதிகாரததையும கொடுததருளினா. இதனால இததலதது இறைவருககு அதிகார வலலவா என்னும பெயரும உண்டு. இததலத தில வாழும உயிாகளுககு மரணவேதனையிலலை. இவ்வர லாற்றிறகு அடையாளமாக ஆலயததின தெனபககத தில பூமிககடியில யமன கோவிலும, யமதீாததமும உளளன.

(4) கலியுகராம பாண்டியன் அருள் பெற்றது

செநதமிழ நாடான பாணடிய நாட்டில பல வளங களும நிறைநத தலைநகரான மதுரைப பதியில பாணடிய குலததில மிகுநத புகழ பெறறவனும, பகையரசாகள யாவரும திறைகொணடுவநது வணஙகத தகக வலிமை யுடையவனுமான கலியுகராம பாணடியன எனபவன நீதியுடன அரசு புரிநது வந்தான. அவன பூர்வத்தில செயத தீவினையின பயனால வெணகுட்ட நோயககு ஆளாகி வெளுதத நணடைபபோல இரததம குனறி மிகவும துனபபபட்டு வநதான. அநநோயினால துன புறற மறற அரசர்களான பாணடுவெனன, சிஙகவாம

னென்ன ஆகிய இவர்களைப்பற்றி எண்ணுவான். தனக் குற்ற நோய் நீங்கும்படி பல சிகிச்சைகளைச் செய்தும் அவை பயனபடாது ஒழிந்தன. கோயிலில் பல பூஜை கள செய்வித்தான். பல. முனிவர்களிடம் சென்று வியாதி நீங்க வேண்டினன். ஒன்றினுலும நோய் நீங்காதபடியால மனம் வெறுத்துக காசி யாத்திரை செலல உறுதி கொண்டு முதலில திருநெலவேலிககுச சென்று, ஆங்கு தாமபிர சபையில் எழுந்தருளி யுள்ள பெருமானைத் தரிசனம் செய்து அவ்விடத்தில் தங்கியிருந்தான. அப்போது உணமை அடியாருள்ளத் தில உறைபவரும், திருப்பைஞ்ஞீலி இறைவரும ஆகிய நீலிவனநாதர் பாணடியனை அடிமைகொணடு அருள் செயயவேணடி அவன கனவில சென்று "உனககுற்ற நோய நீங்கி உனது உடலெல்லாம இரததினம்போல பிரகாசிககச் செய்வோம. காசி யாத்திரை போவதை நிறுத்து. யாம திருப்பைஞ்ஞீலிப பதியில இரத்தின சபை யில நடனம் செய்வோம" என்று சொலலி மறைந்தார.

தூக்கத்திலிருந்து விழித்த பாணடியனும் மனத துயர் நீங்கி மகிழ்சசிகொணடு இறைவன அருளியபடி திருபபைஞ்ஞீலிக்குத் தன சேனையுடன விரைந்து சென றன. இடையிலுள்ள பல வழிகளைக் கடந்து சோலை களும வாவிகளும் சூழ்நத நீலிவனமாகிய திருப்பைஞ் ஞீலியின் எலலையைக கண்டான. தன உடல் முழுதும பூமியில படும்படி கீழே விழுந்து வணங்கி எழுந்து மெய்மமறந்து தன் இருகைகளாலும அஞ்சலிசெயது பிரார்த்திததான. "சொலவதற்கு அரியதாயும், பகத ருடைய உளளமாயும, தெண. கைலாயமாயும விளங்கு கின்ற இந்த ஸதலத்தைக காணபதற்கு என்ன தவம செயதேனே" என்று வியந்தான.

சிவனருளையும குருமுகததால் பெறவேண்டு மென்ற எண்ணங்கொண்டு, உடம்பு வற்றும்படி பல விரதங்களை யும், தவங்களையும ஆற்றிவந்த வசிஷ்ட முனிவரையும தாறபிய முனிவரையும தரிசிதது வணங்கித் தான பெரு நோய காரணமாக வருந்துவதையும, சிவபிரான கனவில அருளியதையும, தான புறப்பட்டுவந்த வரலாற்றையும தெரிவிததான.

அவ்விரு முனிவரும அரசனுககுச் சில உபதேசங களைச செயதாாகள. திருப்பைஞ்ஞீலிப பதியில உள்ள எட்டுத தீாததங்களிலும மூழ்கி, அட்ட லிங்கங்களையும் தொழுது வழிபட்டுவந்தால் அரசனுககுற்ற குட்டநோய தீரும எனத தெரிவிததனா. பாணடியனும அமமொழி யைச சிரமேறகொணடு எட்டுத தினங்கள வரையில அட்ட தீாததங்களில மூழ்கி அட்ட லிங்கங்களைப் பூஜிதது வநதான.

பிறகு ஒருநாள் அரசன காவிரியில நீராடிச சிவ சின்னங்களுடன ஆலயததின் கோபுரவாயிலைக கடந்து பகதியுடன் உளளே சென்று சந்நிதியில உள்ள ரிஷபக கொடியைக கணடான. அககணமே அரசனைப பீடிதத திருநத வெணகுட்ட நோயும நீங்கியது. அவன வடிவம பொன எனப் பொலிநதது. அரசனும தன் புது உடலைக கணடு தரித்திரனுககுத தரணியாளும பேறு கிடைத தாறபோல மகிழ்ந்தான ; திருவருளை வியந்தான. ஆடிப பாடித துதிததான். உளளே சென்று தனககு அருள செயத நீலிவனநாதரையும, விசாலாட்சி யமமையாரை யும, இரதன சபாபதியையும் மெயமமறந்து வணங்கி ஞன. பலதானங்களைச செயதான. திருப்பைஞ்ஞீலிககுத தெறகே பாணடிபுரம என்னும ஒரு நகரம அமைதது அதில இருநதுகொண்டு மறற அரசர்கள போற்றும்படி

வாழ்ந்து வரலானன். அவ்வூருக்குத் தெறகில காவிரிக்கு வடகரையில ஓர் சிறு ஆலயம ஏற்படுத்தி வடமதுரை என்று பெயரிட்டுத தான வழிபட்டுவந்ததுடன் மறறை யோரையும வழிபடுமபடிச செயதான. திருப்பைஞ்ஞீலி ஆலயததிறகு முன்னே ஓர இரட்டைக கோபுரம கட்டு விததுத தன பெயரால விளங்குமபடிச செயதான. மேலும சுறறுமதிலகள, பல மணடபஙகள, மடைப பள்ளி, லட்சுமி, துாககை ஆகிய தெயவஙகளுககுக் கோயிலகள முதலிய திருபபணிகளைச செயதான. வசிட்டா, தாறபியா ஆகிய முனிவாகளுககுரிய பாண சாலைகளை அமைததான. பெருமானுககுரிய புதிய திரு வாபரணஙகளைச செயவிததான. இவ்வாறு ஆலயத தைப புதுமைசெயது தினபபூஜை, மாதவிழா, வருட விழா முதலியன நடைபெறுமபடிச செயதான். பசிப் பிணியால வருநதும மககளுககு உதவுமபடி பல அனன சததிரஙகளை அமைததான. இவ்விதம கலியுகராம பாண டியன பல புணணியஙகளைச செயது பனனாள வாழநது இறைவன திருவடியடைநதான. இததலம பாணடிய ரின ஆட்சிக குட்படடிருநததறகு அடையாளமாக ஆலய மணடபஙகளின் மேலதளததில பாணடியருக் குரிய மீன உருவஙகள பொறிககபபட்டுள்ளன.

12. கர்ண பரம்பரைக் கதைகள்

(1) ஆதிகாலததில இககோயிலின மூலலிஙகம மட்டும சுயமபுவாய்த தோனறிச சுறறும புதா சூழநது மூடியிருநததெனறும, அபபோது ஊரிலுள்ள பசுககள புதாப்பககஙகளில சென்று வயிறார மேயந்து தமமையு மறியாமல பால சொரிநதனவெனறும, அப்பசுககள தததம வீடுகளுககுச சென்று உடையவர்கள கறககும

போது பால் குறைந்ததென்றும், பின்பு அவர்கள் மேய்ச்சலிடமான புதர்களிடம் சென்று மண் வெட்டியால் வெட்டும்போது அவ்விடத்திலிருந்து உதிரம் வெளிப்பட்டதென்றும், மேலும் ஆராயும்போது ஆங்கு ஓர் லிங்கம் தோன்றியதென்றும், அதை யாவரும் பக்தியுடன் வழிபட்டு வந்தார்கள் என்றும், பிறகு அவ்விடம் ஆலயமாக விளங்கியது என்றும் கதைகள் சொல்லப்படுகின்றன.

(2) ஒரு காலத்தில் கோயில் குருக்களும், பரிசாரகரும், வேறு சிலரும் இத்தலத்திலிருந்து புறப்பட்டு, ஆடி மாதம் 18-ல் கொள்ளிட நதிக்கரைக்குச் சென்றதாகவும், அப்போது அவர்களுக்கு ஆற்றில் சில விக்கிரகங்கள் அகப்பட்டதாகவும், அவற்றை எடுத்து வந்து இவ்வூரில் பிரதிட்டை செய்துப் பலியிட்டுப் பூஜை செய்து வந்ததாகவும், அவ்விக்கிரகங்களால் பல அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும், பின்பு அவைகளை வேறு தனியிடத்தில் வைத்துக் கோயில்கள் அமைத்ததாகவும் கூறப்படுகின்றன. நாளடைவில் பெரிய கோயிலில் உள்ள இரண்டு துவஜஸ்தம்பங்களும் அவற்றின் அம்சங்களாகக் கருதப்பட்டுப் பெரியாண்டவர், சின்னாண்டவர் என்று வழங்கப்பட்டுப் பூஜிக்கப்பட்டு வருகின்றன.

13. வழிபட்டோர்

பிரமன், திருமால், தேவேந்திரன், முசுகுந்தன், காமதேனு, வசிட்டர், இராமர், இலட்சுமணர், அர்ச்சுனன், கலியுகராம பாண்டியன், தாற்பிய முனிவர், வியாக்கிரசூரன், சுதர்மன், அங்கமித்திரன், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திகள் ஆகியோர் இத்தலத்திலுள்ள இறைவனை வழிபட்டுப் பெருமையடைந்துள்ளார்கள். கலியுகராம பாண்டியன் வழிபட்டதற்கு அவன் அமைத்த கோயில்களும் கோபுரமும் உள்ளன. வியர்க்கிரசூரன் புலி உடலைப் பெற்றவன். தான் இறக்கும்போது தன் புலி வடிவம் இவ்வூரக் கல்லில் இருக்க வேண்டுமென வேண்டிக்கொண்டதாகவும், அவ்வாறே

இவ்வூர் மதிலிலும் கோபுரத்திலும் புலிவரிகள் அமைந் திருப்பதாகவும் புராணம் கூறும்.

14. பூஜைகள்

இவ்வாலயத்தில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை இரவு ஆகிய நான்கு காலங்களிலும் அபிடேக ஆரா தனைகள் நடைபெறுகின்றன. மாலை, இரவுப் பூஜை நேரங்களில் சின்ன மேளமாகிய நாட்டியமும் பெரிய மேளமும் நடைபெறுகின்றன. இவை நான்கும் சாக்கார் கட்டளையில் நிகழ்கின்றன. தேவதாசிகள் கையில் மந்தார மலர்களை வைத்துக்கொண்டு ஆடிப்பாடி வழி படுவார்கள்.

15. திருவிழாக்கள்

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் பிரமோற் சவமும், பௌர்ணமியில் திருத்தேர் விழாவும், சித்திரை மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் அப்பர் கட்டமுது உற்ச வமும், புரட்டாசியில் நவராத்திரி உற்சவமும், ஐப்பசியில் கந்த சஷ்டி உற்சவமும் நடைபெறுகின்றன. இவையன் றித் தைப்பூசத் தினத்தன்று சுவாமி கொள்ளிடக் கரைக் குப் புறப்பட்டுச் சென்று தங்கி, இரவில் சுவாமி குதிரை வாகனத்திலும், அம்மன் பல்லக்கிலும் காட்சியளித்து ஊர் திரும்பும். அப்பர் கட்டமுது உற்சவத்தின்போது வழிகளில் அடுத்தடுத்துத் தண்ணீர்ப் பந்தல்களை அமைத்து வழி நடப்போர்க்கு உபசாரம் செய்வர்.

16. சொத்துக்களும் வருவாயும்

இக்கோயிலுக்குத் தனியே 5 காணி நன்செய் நிலங் களும், இறும் மேல்வார உரிமையில் திருப்பைஞ்ஞீலி, ஈச்சம்பட்டி, வாழ்மாலைப் பாளையம், கவுண்டன்பட்டி, மூவராம் பாளையம் முதலிய கிராமங்களில் 5000 காணி நிலங்களும் உண்டு. இவைகள் மூலமாய் வருடத்தில் சுமார் ரூ. 7000-மும், ஞாயிற்றுக்கிழமைகளில் இவ் வூரில் கூடும் சந்தையின் மூலம் ரூ. 280-ம் கிடைக்கின

றன. கோயில் சிப்பந்திகள் 64 பேர்கள் உள்ளனர். இவர்களுக்கு மானியமாக 700 காணிகள் விடப்பட்டுள்ளன.

17. நகை வாகனங்கள்

கோயிலுக்குச் சுமார் ரூ. 2000 மதிப்புள்ள திருவாபரணங்களும், ரூ. 1000 மதிப்புள்ள வாகனங்களும், ரூ. 5000 மதிப்புள்ள ரதமும் உள்ளன

18. ஆலய நிர்வாகம்

திருச்சி லால்குடி சர்க்கிள் தேவஸ்தான கமிட்டியின் மேற்பார்வையில் இக்கோயில் இருந்துவந்து பிறகு 1939ம் வருஷம் மார்ச் மாதம் முதல் சென்னை இந்துமத தாம பரிபாலன பாதுகாப்பு போர்டு (Hindu Religious Endowments Board) நிர்வாகத்திற்குட்பட்டு நிர்வாகத் தலைவர் (Executive officer) ஒருவரின் மேற்பார்வையில் ஆலய காரியங்கள் நடைபெற்று வருகின்றன. மேலும் இருவர் இவ்வாலயத்திற்குக் கௌரவ தர்மகர்த்தர்களாகத் தற்போது இருந்துவருகின்றனர். தற்போதுள்ள நிர்வாகத்தலைவரின் ஊக்கத்தால் கோயில் காரியங்கள் செவ்வையாய் நடைபெற்று வருவதுடன், சிறிது மூலதனமும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

இச்சிறு வரலாற்றைப் படிப்போர் யாவரும் பின்னே சேர்க்கப் பெற்றுள்ள துதிப்பாடல்களையும் பக்தியுடன் பயின்று திருப்பைஞ்ஞீலி நாதரின் திருவருளைப் பெற்று எண்ணிய பயன்களை எளிதில் எய்தித் துன்பம் நீங்கி இன்ப வாழ்வு பெறுவார்களாக. ஞீலிவன நாதரின் திருவருள் எங்கும் நிலவுக.

19. தனி நூல்கள்

(1) திருப்பைஞ்ஞீலிப் புராணம். இந்நூல் வடமொழியிலிருந்து மெய்ப்பாத புராணிகரால் மொழி பெயர்க்கப்பட்டது. 25 அத்தியாயங்களைக் கொண்டது.

தல விநாயகர்

நிதிபெரு வளங்களும் நிகரில் கல்வியும்
கதிகருமெய்ஞ் ஞானமும கதிகக்த தந்திட
மதிததலைபெரு ஞீலியின வசநத மணடபத
அதிசகையா னிணையடி துதிததுப போறறுவாம.

முருகப் பெருமான்

2. பாகைநிகாத திடுசுரருஞ சரிசொலமு
தெனவமுத பததைத நேராய
நாகநகாப பெருமபதஞசிற றிடைகொடிகருப
படைகொடிகள நாகரீக
மாகனகக குவடடிபஙக ளைகொடுததும்
புணாநதானை மயூரத தோகை
வாகனனைக குறவனிதை மோகனனைக
குகனையனபின வணஙகு வோமே

சிவபெருமான்

3. பரதார விந்தபரா பரைதனில மாயா
தருவுற பததி யாகிய
பூதாதி நாதமெழும பணைகளவிரித
தகிலாணட புவன கோடி
மீதான கனிகளைத ததந துயிராவரிவண
டினஙகளுணடு விளஙக நோககி
யாதார மாகியபைஞ ஞீலிநிதத
னடிவணஙகி யருளைச சாரவாம்.

இரத்ன சபாபதி

4. துதியைமொழிந திதயிருபத தியினையுணாந
தருசசனைசெய தொடாபை வேதனை
விதியைவெலுந திறநதருசந நிதியையக
லாதிருககும விருபபை மோட்சக
கதியையெனறு வினிலதிக நடமிடுபா
ரதியையருள கடாட்சங கூர
மதியைவர நதியையணி நிதியை ரதன
சபாபதியை வணஙகி வாழ்வாம்.

விசாலாட்சியம்மை

5. பரிபுரமு மருமறையும் விரவியொலி
நிறைகமல பததநி ஞளை
யரிபுரமும் விதிபுரமும அடியவாகள்
கொடுததிடததாக தருள்செய வாளை
எரிபுரைமே னியாகடிகரு மெழிலிரதன
சடைததழைகக விளிது மேவும
திரிபுரைநீ ளெடுமகணவிசா லாட்சிதனைப
போறறியிடர் தீாகது வாழுவாம.

(2) திருப்பைஞஞீலித திரிபநதாதி:—இது திரிசிர புரம மகாவிதவான மீனாட்சிசுநதரம பிளளை அவர்க ளால இயறறப பெறறது. 101 பாடலகளை யுடையது.

1. உததமனே யெனறும பைஞஞீலியா யென்று மொணகலஞசே
ரததமனே யெனறும வாழததறி யேனையின் றுணடருளவாய
நிததமனே யபபனே யெனறலறுவா நெஞசுறுவாய
முததமனேகம் பொலிமுளைபாகவென முனனவனே.

2. தேவிகருருவம பகிாநதாா பைஞஞீலிச சிவபுராககுப
பாவிககுருகு மனமிலராய பரமருககுத
தூவிககுருமணி ரததினஞ சிநதுந துறைமலியும
வாவிககுரு கினஙகாள சொலலுவீ ரெனறன மையலையே.

(3) இரததினசபாபதிமாலை. ஆசிரியர் பெயர்தெரிய விலலை. 100 பாடலகளைக கொணடது.

1. மதிமாலை மும்மத மானதி மாலை வயஙகுசெமபொன
கதிமாலை வணண நிறததணலை சேவடி கைதொழுதே
எதிாமாலை யெயதருள பைஞஞீலி நாதற கிரதனசபா
பதிமாலை யெனனுந துதிமாலை நூறும பகாநதிடவே.

2. மழைககாா பொழிநது நனனீா கதித்தேரி வரையுதவக
குழைததோடி வசசிரத துணடஙகள் மாறிக குறைவதுபோல
விழைததூாத ரவுதருநதன மதான மிகுதது மெனமேல்
தழைததோஙகு மன்றிக குறையாது ரதன சபாபதியே.

3. இனிதான சறசன ரில்லாதவூரி லிருபபதிலுந
தனியேயிருக்கு மவன்வாச நல்லது தன்மஞ செயயா

அனியாயஞ் செயயுங் கொடுங்கோற் றுரைகளி லஷ்டமத்துச்
சனியாகிலு மெத்த நன்றாகும் ரதன சபாபதியே.

4. சிந்திக்கு நுணணறி வில்லோரை மேலவர் சேர்ந்தாரினுந்
தந்தன்மையி லெந்நாளுநங குணமுறினப தாருவைச்சாரந்
தெந்தபொழுதும் பிரியாமல் கூடியிருககு மந்த
சநதனம் வேம்பு மணககாது ரதன சபாபதியே.

5. கறறுயர்ந்தவ ருபதேசஞ் செயதோர் தவங்கைப் பிடித்தோர்
விறறுனே வேந்தனமைச்சன் கருணீகன வீறுசெமபொன்
பெறறோன் வயித்தியஞ் செயவோ னிவரெட்டுப் பேருடனுஞ்
சறறுகிலும் பகையாகாது ரதன சபாபதியே.

20. தேவாரமும் தனிப்பாடல்களும்

(1) திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருக் குறுந்தொகை. *10* செய்யுட்கள்.

1. விழுது சூலதுதன் வெண்மழு வாடபடை
கழுது துஞ்சிருள் காட்டகத தாடலான்
பழுதொன றின்றிப பைஞ்ஞீலிப பரமனைத
தொழுது செல்பவா தமவினை தூளியே.

2. தருக்கிச் சென்று திடவரை பறறலும்
நெருககி யூன்ற நினைந்து சிவனையே
யரககன் பாட வருளுமெம் மாணிடம்
இருககை ஞீலியென பாாககிட ரிலலையே.

(2) சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது. *11* செய் யுட்கள்.

1. காருலாவிய நஞ்சை யுணடிருள்
கணடர் வெணடலை யோடுகொண்
டூரெலாந்திரிந் தென்செய் வீரபலி
யோரி டத்திலே கொள்ளுமீா
பாரெலாம் பணிந்தும்மை யேபர
விபபணி யும்பைஞ் ஞீலியீர்
ஆரமாவது நாகமோசொலு
மார ணீயவிடங்கரே.

2. அன்னஞ்சேர் வயல் சூழ்பைஞ்ஞீலியி
லார ணியவி டங்கரை
மின்னும நுண்ணிடைமங்கை மாரபலா
வேணடிக காதல் மொழிந்தசொல்
மன்னுதொல் புகழநாவ லூரனவன்
றெணடன் வாயமொழி பாடல்பத
துன்னியின் னிசைபாடு வாருமை
கேள்வன சேவடி சேரவரே.

(3) திருஞான சமபநத சுவாமிகள அருளியது. 11 செய்யுட்கள்.

1. ஆரிடம் பாடில ரடிகள காடலால்
ஓரிடங குறைவில ருடையா கோவணம
நீரிடஞ சடைவிடை யூர்தி நிததலும்
பாரிடம பணிசெயும பயிலபைஞ் ஞீலியே.

2. கணபுனல் விளைவயற காழிக கறபகம
நணபுண ருமறை ஞானசம் பந்தன
பணபினா பரவுபைஞ ஞீலி பாடுவாா.
உணபின வுலகினி லோங்கி வாழ்வரே.

(4) தனிப் பாடலகள். ஆசிரியாகளின் பெயர்கள் தெரியவில்லை.

1. ஆடரவஞ் சூடிநடம ஆடரவங காணவுமே
தேடரவ நீயுகந்தென் சிந்தையில்வந தாண்டருள்வாய
வேடனே யருபிசெயது வியாகர மோட்சங கொடுதது
நீடுபுகழ காாபுன்னநத நீலகண்ட நாயகரே.

2. சீதரனும நான்முகனுந் தேடியடிக காணபரிய
நாதவிந்து வேயுமது நன்னெறியைத தேம்பியிப்போ
சாதகம பெடைபிரிந்த தனமையது போலானேன்
ஆதரவு சொல்லெனக்கு அதிகார வல்லவரே.

3. முதலாக் வனைத்திலுக்கும் நிற்கின்ற பொருளே
மும்மூர்தநி சொருபத்தை யுடையோய் நீமேரு
மதலையாய் வந்தபரை மணங்கொண்ட பொருளே
மயக்கமுடைத தக்கனையு மாளுவிததாய் சிவனே

சுதர்மமதை நிலைநாட்டி நிற்கின்ற பொருளே
சொல்லரிய தத்துவத்தின சுகம்விளக்கும் பொருளே
கதலிவனம வாழுமுயிர காக்கும்வான் பொருளே
காணகின்ற வனைத்தினிலும் ஆளுயர் பொருளே.

4. சுந்தரம் பொழியுமுகி லளகபார
முகமதில் துளிகைகோ ரித்தமுத்தும்
சுட்டிவெண பிறையிலகு ரதன நிகாக
கொப்புதுலஙகு பொனனூலை யொளியும
செந்தூர திலகநுதல் முதது மூககுததியும
செமபவள வாயுநகையும
செணடையுங கிளிளையும் தஙகவளையும்
பெருஞ் செஙகையுந திருமேனியும
சுந்தர நிறைந்திலகு முகதார தனமார
கருணை யருள்விழி பாாவையும்
கலகலென தணடை யும பாதமும
யானகாண காட்சிதரவேணுமே
செந்திரு தினம்பரவு மேருச் சிதம்பரந
தெரிசிகக வேணடு மடியாா
சிந்தைவளா பைஞ்ஞீலி நாதாபாகத்திலுறை
தேவி விசாலாடசி யுமையே.

5. காலைமாலை யுனைதொழு தேததினேன்
காமவாாிக கயலபோல வாடினேன
பாலைவிட டுப்புனலைக் குடிததிடும
பாவிபோலப பறந்து மயஙகினேன்
நீலியான வனநதனில் மேவிய
நிததாபாக வளரும் பராபரி
மேலதில்லை யில்முகதிய மாகிய
விமலையான விசாலாட்சி தேவியே.

வாழ்க அந்தணர் வானவா ஆனினம
வீழ்க தணபுனல வேந்தனும ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன நாமமே
சூழ்க வையக முந்துயர் தீரகவே.

கணபதி துணை

திருப்போரூர்த் தலபுராண வசனம்

இது

புரசை-அஷ்டாவதானம்

சபாபதி முதலியாரவர்கள்

இயற்றியது

எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும்

'நல்லாசிரியன்' பத்திராதிபருமாகிய

கா. நமச்சிவாய முதலியாரவர்கள்

பரிசோதித்தது

இந்நூலாசிரியரது தமையனார் குமாரர்

புரசை-த. குப்புசாமி முதலியார் அவர்கள்

பதிப்பித்தது

இரண்டாம் பதிப்பு, 1000-புத்தகம்.

இராமலிங்கம் விவேகானந்த அச்சியந்திரசாலை

ரெஜிஸ்தர் செய்தது.] 1913 [விலை அணா ௧-பை-௬.

உ

கணபதி துணை

ஆபாடம்.

இவ்வசனநூலை 'திருப்போரூர்த் தலபுராண சரித்திரச் சுருக்கம்' என்னும் பெயரால், இதனது ஆசிரியராகிய புலவர் பெருமான் புரசை அஷ்டாவதானம் சபாபதிமுதலியார் அவர்கள் சுமார் 38 யாண்டுகளுக்கு முன்னர் கலியாண்டு 4976-ல் நிகழும் பவ௵ கும்பரவியில் வெளியிட்டனர். அதன் முகப்பில் "முன்னர் வடமொழியிலிருந்ததைக் கிருஷ்ண சாஸ்திரியார் அவர்களைக்கொண்டு தமிழில் மொழி பெயர்த்து விருத்தச் செய்யுளாகப் பாடிய அப்புராணசரித்திரத்தை வசனரூபமாகச் செய்து தருகவென்ற, தையூர் நரசப்ப சுப்பராயமுதலியார், வைத்தி சுப்பராய முதலியார் இவர்கள் கேட்டுக்கொண்டபடி மேற்படி தேவஸ்தான தர்மகர்த்தா ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் ஆதீனம் ஒன்பதாம்பட்டம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் அநுமதியில் இயற்றியது" என நூலாசிரியர் குறித்திருக்கின்றனர். இந்நூல் வடமொழியினின்றும் தமிழ் மொழி பெயர்த்த செய்யுட்களை ஆதாரவாகக்கொண்டு வசனரூபமாகச் செய்யப்பட்டதாகலின் முதனூலுக்கு முற்றும் ஒத்துப் பெரியமலையையும் சிறியவுருவில் அகப்படக்காட்டும் ஆடிக்குச் சமமுற விளங்குகின்றது. புராணத்திலுள்ள சகல விஷயங்களும் முறையே நன்கு வெளிப்பட அமைந்திருக்கின்றன.

செய்யுளாலியன்ற நூல்கள் கற்றோர்க்கே பயன்படுகின்றனவாதலின், அவைகளிலுள்ள அரிய விஷயங்கள் என்போ

லும் கல்லார்க்குச் சிறிதும் பயன்படாமல் பூமியிற் புதை யுண்ட பொன்னேபோல மறைந்து கிடக்கின்றன. வசன நூல்களே பெரிதும் பயன் தரத்தக்கவையாதலுணர்ந்து, இந்நூலாசிரியர் செய்து வெளியிட்ட இந்நூலை இரண்டா முறை பதிப்பிக்க ஆவங்கொண்டேன் யான் இத்தகைய நூல்களைப் பதிப்பிக்கும் ஆற்றல் சிறிதும் இலனேனுயினும், எனது சிறிய தந்தையாகிய இக்கிரந்த கர்த்தர் எனக்கு அவ்வப்போது ஓதிவந்த நலலுபதேசமும், அவர்பால யான் கொண்ட அன்பும் என்னைத்தூண்ட இதனைச் செய் யத் துணிந்தேன்

இப்புராணம் பதினேழு அத்தியாயங்களை யுடையது. இந்நூலில் முருகக்கடவுள் இத்தலத்தினகண் அருளுருக் கொண்டு விளங்கும் விவரமும், கண்ணுவர் சிவமுனி முத லிய முனிவர்களுக்கு அருள்புரிந்த விவரமும், பிரணவத் தின் சிறப்பும், நிம்பவிருக்ஷத்தின் மேன்மையும், வேம்படி விநாயகர் வரலாறும் விளக்கமுறுகின்றன இந்த க்ஷேத்தி ரம் தலம், தீர்த்தம், மூர்த்தியாகிய மூன்று விசேடங்களை யும் ஒருங்கே எய்தப் பெற்றது மன்றி பிரணவமே மலை யுருக்கொண்டு விளங்கும் சிறப்பினையு முடையதாகும் இப் பதிப்பில செய்யுட் புராணத்திற்கேற்ப அத்தியாயம் வகுத்து, அப்புராணத்திலுள்ள தோத்திரப் பாடல்களையும் சேர்த்துள்ளேன்.

படிக்குந்தோறும் முருகக்கடவுள் திருவடியிற் பத்தி யை முதிரச்செய்யும் இப்புராணநூலை அரிதிற் றேடியபின் னர், அதனை அச்சிட முயன்றேன். என் முயற்சி இனிது முடியுமாறு பொருளுதவி புரிந்து என்னை ஊக்கி முட்டி ன்றி முடிவுபெறச் செய்த அன்பர்களுக்கு நல்லருள் சுரக்

குமாறு அம்முருகக் கடவுளை வேண்டுதலும், எனது மன முவந்த வந்தனம் செலுத்துதலுமன்றி மற்று யாது செய்ய வல்லேன்.

இந்நூலினை அச்சிடக் கருதிய காலத்து முதற்பதிப் புப் பிரதி அகப்படாது எனது மனமாழ்குந் தருணத்து முதற்பதிப்புப் பிரதியுதவி எனதுமனக்குறைதனை அகற்றிய பரோபகாரியாகிய ஸ்ரீமான் ஒ. தேவராஜமுதலியாரவர்களு க்கு அன்பு நிறைந்த வந்தனமும் நன்றியும் பாராட்ட வுரி மையுற்றிருக்கின்றேன்.

'எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
றெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே!

என்னும் மாட்சிமையுற்ற வாக்கியத்திற் கிலக்கியமா யுள்ள வரும்

'நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று'

என்றுள்ள இவ்வரிய வாக்கியத்தில் "மேலுலகமில்லெனினு மீதலே நன்று" என்னும் வாக்கியத்தைக் கடைப்பிடித் தொழுகுதலே தமது பொழுது போக்காகவுடையவரும் சென்னை-வேப்பேரி எஸ் பி ஜி ஹைஸ்கூல் தலைமைத் தமி ழ்ப் பண்டிதரும் 'நல்லாசிரியன்' பத்திராதிபரும் இந்நூலா சிரியர் வழியிற் கல்வி கற்றவரும் அவர்பால் ஆர்வமிக் குடையவரும் எனக்குச் சுகானுபவமே யுண்டாகத் திரு வருளை பிரார்த்திப்பவரும் என்னுயிரனைய நண்பருமாகிய கா-நமசிவாய முதலியாரவர்கள் யான் இந்நூலினை அச்சி டும் அமயத்து தமது யாக்கையின் சௌகரியத்தை எட்டு ணையு மதியாமலும் மனமுரிவின்றியும் இந்நூலிற்கு முத

னூலாகிய செய்யுட் புராணத்திற் கேற்ப அத்தியாயம் வகுத்து முதற்பதிப்புக் கிணங்க பரிசோதித்துத் தந்து பொருளும் உதவினர். அருபான் மும்மை நாயன்மார்க ளுள் ஒருவராகிய குலச்சிறை நாயனார் அவதரித்த கருணீ கர் குலத்தில் உதித்தவரும், அரிய உரைநடை நூல்கள் பல இயற்றியவரும் ஏழைகளிடத்து தகாயினும் அன்புடைய வரும் எனது இன்னுயிர் நண்பரும் ஆகிய திரு பக்தவத் சலம் பிள்ளை, பி ஏ, எம் பி பி. ஐ அவர்கள் இதற்கான அச்சுக்கூலி முழுவதும் உதவி புரிந்தனா இம்மகோப காரிகளுக்கு எமமாட்டுக் கைம்மாறொன்றிலதாயினும் எண் வகைச் செல்வத்தையும் வள்ளலாகிய காரிபோன்ற இவ்வுப காரிகளுக்கு அருளிசசெய்து பாலிக்குமாறு பஞ்சதரதரன் பதாமபுயத்தைப் பழிசசுதலோடு நன்றியும பாராட்டக் கடமை வகித்துள்ளேன்

யான் கொண்ட இநநன முயற்சி இடையூறு படா வண்ணம் தோன்றாததுணையாக இருநது அருள்புரிநத வேமபடி விநாயகக்கடவுளை மனமொழி மெய்களால வணங் குகின்றேன்.

இங்ஙனம்

இந்நூலாசிரியர் தமையனார் குமாரன்,

புரசை-த. குப்புசாமி முதலியார்.

4—12—1913.

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
		ஆபாடத்தில்.	
5	9	[illegible]பா	மென்னுயிர்போ
6	1	புரணத்தி[illegible]	புராணத்திற
,,	2	கிணங்க	கிணங்கப்[illegible]
,,	3	அருபான	அரூபா[illegible]
36	6	விதிபாதம்	[illegible]
39	16	சொருபமாகுமென	சொரூபமாகுமென

34 ஆம் பக்கத்து உடுக்குறியிட்ட பாகத்தை ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறு எனக்கொள்க.

சதாசிவம்.

மாமருவுஞ் சதுர்வேத வுட்பொருளா
யருட்பரையின் வடிவாய் நந்நான்
காமருவு முருவுமிகங் கைம்முகத்தோ
டருள்சுரக்கு மமலன் பாதந்
[illegible]ய்வ யானைவள்ளி
[illegible]ய்போ ரூர்வன்
[illegible] தமிழுரைக்க
வெக்காலும் ப[illegible] வாழ்வாம்.

ந[illegible].

கருத்திருத்திக் களித்[illegible] புலிப்பாதர்
காண்முளைக்குக்[illegible]ப் பாலங்
கருத்திருத்திக் ககன[illegible]ர் போற்றுகரு
ணைப்பதியுட் கரி[illegible]
கருத்திருத்திக் கனிஞா[illegible]ா
டுறுமெம்மான் கமல பா[illegible]
கருத்திருத்திக் கரியமல மிரியவருட்
குரியநலங் கவின வாழ்வாம்.

கைலாய நாதர்.

பூதனைமுன் படைத்திடுமைம் பூதனையாண்
டருளுறா புரங்கொண் டாடும்
பாதனையெல் லாந்தருநாற் பாதனைப்பெண்
பாகனைப்பாம் பணிகுழைப்பொற்
காதனைமுப் புரத்தொடும்வி காதனைமுக்
கண்ணனைத்தான் கடக்கும் வித்த
காதனைவான் கயிலாய காதனைநெ
ஞ்சாருமுள நாடி வாழ்வாம்.

வாலாம்பிகை யம்மை.

வேணியிடங் கொண்டாடான் றணக்கிருப்பின்
வயப்படுத்து மேனி முற்றும்
பேணியென்றோர் பாற்றனுத விடைகட்டோ
றுமையாங்கூன் பிறைநா கம்மான்
காணிலவள் கலப்புரையின் னெனக்காவற்
படுத்தியர னுடற்செம் பாதி
காணிகொள்வா லாம்பிகைமென் மலர்ப்பதத்தை
யுளத்தமைத்துக் களித்து வாழ்வாம். (எ)

வேம்படி விநாயகர்

வேம்படி முளைத்த வேழமன் பகவா
வியில்வள ராம்பன்மூ வெயிலும்
வேம்படி நகைத்தோன் புயத்திவர் களப
மெய்ம்மையோர் போதக மிக்க
வேம்படி மைப்ப டார்க்குவன் மதமா
விறைஞ்சுநர்க் கருட்கயம் போற்று
வேம்படி மிசையென் றடைபணி புரிநம்
வெம்பவங் கடத்திடு மனனே. (அ)

இட்டசித்தி விநாயகர்.

சிட்ட சித்தது விதுவென வுணர்த்திக
பரத்திடைச் சிற்றின்பத்
தொட்ட சித்திடு மெய்ம்மையோர்
விரும்புவ வுதவுபோ ரியில்வானக்
தொட்ட சித்திரச் சினகரஞ் சூழ்மதிற்
குணதிசை யின்பாங்கர்
இட்ட சித்தியா னையினிரு சேவடி
யிறைஞ்சி நாடொறும் வாழ்வாம். (கூ)

கணநாதர்.

பணநாதன் பலநாவி னும்பகர
வருஞ்சீர்த்தாய்ப் பைந்தார்ச் செங்கே
ணுணநாக மணிமுரலும் பொழிலுடுத்த
திருப்போரூ ரொருவி லாகீர்க்
குணநாதத் துச்சியின்மேற் கொளும்பெருமான்
பொலங்கோயிற் குணபான் மன்னுங்
கணநாதர் னிருபாதங் கணவாம
லனவரதங் கருத்துள் வைப்பாம். (க0

திருப்போரூர் சிந்தாத்திரி விநாயகர்.

நிதிவருபொன் னட்டரசன் மணமலர்நந்
தனம்வளர நெடுநீ ருண்ட
துதிவருபைந் தமிழ்முனிபொற் கமண்டலநீ
ரளித்தருளுந் தோன்றல் கங்கை
மதிவருசெவ் வேணியண்ணல் பெறுமதலை
மலர்வாவி வளங்கூர் போரூர்ப்
பதிவருசிந் தாத்திரித்தந் தாவளத்தின்
புகழ்பாடிப் பணிந்து வாழ்வாம். (கக

சுப்பிரமணியர்.

மணிதாங்கு பணிக்குழையார் முதற்கோட்டி
விவர்ந்தவுண விருள்வ ரைந்து
பிணிதாங்கு முயிர்ப்பைங்கூழ் மல்கவருட்
டிவிரமீப் பிறங்க வெங்கும்
அணிதாங்கு மன்பரக மரைமலர்த்திப்
புலவர்களைத் தெடுப்ப வெட்சிக்
கணிதாங்கு தோளாறு முகப்பரிதி
யுளத்திருக்கக் கருதி வாழ்வாம். (கஉ

வேதகிரீசர்.

அங்கமறை யெவர்க்குமள வறிவரிய
வவைமேற்று மமருங் கோலம்
புங்கவரா தியரானு மறியவொண்ணா
தென்றெவரும் புலங்கொண் டுய்வான்
றங்கருணை யாலமைந்த சதுர்வேத
கிரியினிடந் தங்கி யாண்ட
மங்கையிடங் கொண்டகழுக் குன்றரடி
போற்றிவினை மாற்றி வாழ்வாம். (கங)

தக்ஷிணாமூர்த்தி.

சொல்லா ரணங்களாய் வாசசியமாய்
நின்மலமாய்ச சோதி யாயொன்
றல்லாதும் யாவுமாம் விபுவாய்நால்
வருக்கருளா தருளித தெய்வக்
கல்லாலி னீழலுமென் சிரமுமென்கண்
ணெஞ்சிடமுங் காணி கொண்டு
நில்லாம னிற்குமொரு குருமணியி
னருளொளியி னெடிது வாழ்வாம். (கச)

தெய்வயானை யம்மை.

தனைமணக்க மடலூர்த லாதியினான்
முறையன்றென் றடற்றூர் வேலான்
முனைமணக்குந் தாரவுணர் முதற்பறித்து
வென்றிபுனை முறையாற் பொற்கேழ்ச்
சினைமணக்குந் தருநிழலான் றரவெங்கோன்
றனைமணந்த தெய்வக் கற்பின்
கனைமணக்குங் குழற்கடவுட் பிடியெம்பி
ராட்டிபத நளினம் போற்றி. (கரு)

வள்ளியம்மை.

விண்ணொளி யரிதீன்ற தெய்வவிளம்
பிடியிருக்க வேட்கை மீக்கூர்ந்
தண்ணொளில் வேற்றுருவாய் மூததோன்புக்
குறுத்தவுளத் தச்சுற் றுங்குத்
திண்ணொளித் திறற்குகனைக் காதலுட
னேதழுவு சீர்த்திக் கூரவேற்
கண்ணொளி கலுங்குறவர் பெண்பெருமா
னிருதாளைக் கருதா நிற்பாம் (கசு)

குமரகோட்ட முருகக்கடவுள்.

சமரக் கோட்டந் தரப்பரர் மாவொடு
தமரக் கோட்டக் கிரிசெகுஞ் சத்தியான்
கமரக் கோட்டமி லார்கண்ணி யேத்துமெங்
குமரக் கோட்டக் குமரனைப் போற்றுவாம். (கஎ)

வீரவாகுதேவர்.

தோட்கு ரியது விந்தையி துடையர்
வீரர்களெனப் புவிசொல்ப
வாட்கு றுங்கைய ரஃது தான் தோன்றிநேர்
மாற்றலர்ப் படுத்தெய்தி
வேட்குறுந்துணை யுற்றதா லறிந்துதன்
விறல்சொல வியற்கைப்பேர்
மீட்குத லரும்வீர வாகுவினிரு
வியன்மலர்ப் பதம்போற்றி. (கஅ)

வெற்றிவேற்படை.

ஏவ ராலுமெப் படையினும் வேறற்
கெளித லாதசூர் மாவினைக் கிரியைத்

தேவ ராலமர் வானொடேத் தெடுப்பச்
செகுத்த தோர்தலைச் சத்தியென் றேனோ
ஈவ ராலமார் களததர்முத் தலைசசத்
திகளு மாவலிற் புகழ்தர விளங்கும்
பூவ ராலுகள் பண்ணையம் போரிப்
புநித ஞர்வெற்றி வேலுற்ற துணையே. (கக)

சேங்கண்மாலீசர்.

தங்கண்மா லீரமெய்த் தவரு மாயிரம்
பைங்கண்மா லூர்தியும் பரவப் பூசனைக்
கங்கண்மா லீகென வாழி யீந்தருள்
செங்கண்மா லீசர்தாள் சென்னி சேர்த்துவாம் (உ0)

திருவிடவெந்தை-நித்திய கல்யாணப் பெருமாள்.

பூமகவு புதனுகத் துற்றதெனக்
கவுத்துவம்வாள் பொலியு மார்பில்
மாமகவை யின்றமுந்நூற் றறுபான்மா
தவரளிப்ப மகிழ்ந்து தோகை
தாமகவுந் தவவனத்தோ ராண்டளவு
மணம்புணர்ந்து தங்கு மன்ன
வாமகெவி வருநித்ய கல்யாண
மாதவனை வணங்கி வாழ்வாம். (உக)

மயிலும்வேலும்-ஆண்டலைக்கொடியும்.

வாரணாலூர் தியுங்கொடியு மாயிருப்பிற்
றம்வயிர மறிந தேற்றூர்
கோளார்தோட் சூர்வடிவாய்ப் போரியிளங்
குமரன்கூ ராலி னன்றி

மாளாமெனன் றறிவுறுத்து ஞாட்பிகலி
மேல்வரத்தி னிருகூ றுய்ச்செவ்
வேளாண்ட வாகைபுனை தோகைவேல்
பதாகைவிறல் வென்றி போற்றி. (உஉ)

நாமகள்.

மறுவ லாரியா தியர்திரு வாக்க
மன்னி றுமெனு மழிவிலாப் பொருட்கல
விறுவ லாரெனி னுவதென் னெனப்பொன்
வெறுக்கை யாப்பிசைக் திருகையுஞ் சிவப்பத்
தறுவ லான்கண்டு மெய்யெலாங் கறுக்கத்
தன்பு கழ்த்தக வெள்ளெனுங் கடவுட்
பறுவ லாட்டிசெந் திருவடிப் புணையைப்
பற்றி முத்தமிழ்க் கடற்கரை காண்பாம் (உ௩)

அகத்திய முநிவர்.

முன்மலைவில் வலற்சவட்டித் தவப்படையான்
வல்லசுரன் முற்க ரந்து
சென்மலையார் கலியுழுந்தத் தனையாக்கி
மிசைந்தமரர் புரந்து சிற்றப
பன்மலையொன் றுரித்தபிரா னருட்கருகூ
லமுமாய்ப்பைந் தமிழ் மணக்குந்
தென்மலையாந் தொன்மலைவாழ் கும்பமுனி
யம்பொனடி நம்பல் செய்வாம். (உ௪)

திருஞானசம்பந்தப்பிள்ளையார்.

கருக்காழி யன்றதரு முதற்கட்டுக்
கவுரியருள் கருணைப் பாலுண்
டிருக்காழி மெய்ப்பயனை மூவாட்டிற்
பாவாக விசைத்துத் தந்தை *

யருக்காழி விடமுண்ட வருட்கடலை
விரல்சுட்டிக் காட்டு மண்ணல்
திருக்காழி யெம்பெருமான் திருவடியைப்
பரவிவினை யொருவல செய்வாம். (௨௫)

திருநாவுக்கரசு சுவாமிகள்.

தோமூர்க்க வருகவஞ்சர் வலியெரிமுன்
றுரும்பாகச சூல மேற்றார்
தாமூர்த்தி யெனுமெய்ம்மை யெளிதுணர
வைக்தெழுத்தே சங்கார் வாரி
யாமூர்த்த மொடுங்கடக்கப் புணையென்றோர்க்
துய்யுநெறி யினிது தேற்ற
வாமூர்க்கண் வரும்பெருமா னடிதொழுது
கொடியவினை யடியை வெல்வாம். (௨௬)

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

தருமுதலை யாதியெனக் கொண்டாங்கெவ்
வுலகுமரன் றனைக் கொள்ள
வுருமுதலை வீழ்ந்தென்னப் பரசமய
நாகமெலா முரறக் கூரநதவ்
வொருமுதலைப் பாடியொரு கருமுதலை
வயிற்றுமக வுதவு மெமகோன்
பொருமுதலை யுடைப்பிறவி யழனீக்குங்
கழலிணையி னிழற்புக் குய்வாம். (௨௭)

திருவாதவூரர்.

மாசகம்போற் றிடவெமது மாசகம்பாற்
றிடவாத வூரின் மேவித்
தேசகனா னம்பரவத் தேசமெலாம்
பெருந்துறையிற் றேர்ந்து மாயைப்

பாசகர ணக்துரியங் கடந்தவொளிக்
காகந்த மல்கும் பண்பின்
வாசகமா ணிக்கமணிக் கோவைபுனை
யண்ணலடி சென்னி வைப்பாம். (உ௯)

அருணகிரி நாதர்.

உருப்புகல வரியமறை நான்குமெனிற்
றன்சீர்த்தி யுரைப்பா ரியாரென்
றிருப்புகலுங் குழையவருட் டாறுக்கித்
தனையுணர்த்த வெடுதவெதம போலவீ
யருப்புகலாங் கநதராறு பூதியலங்
காரமொடந் தாதி யண்ணல
திருப்புகழ்சொல தமிழ்த்தலைவா மலர்ப்பதத்தைத்
தலைப்புனைந்து சென்மந்தீாவாம். (உக)

நக்கீரர்.

பெருகாற்றுப படைபபயனு ரறிவரிய
செவ்வேணிப் பெருமான் பாகத
திருகாற்றுப் படைவணங்கூ ரனநடையா
ருமையளித்த விளவற் போற்றிய
பொருகாற்றுப் படையரவப் படைமுனும்
படியடுத்த பொருமலுட்க
முருகாற்றுப் படைமொழிமுத தமிழ்க்கழக
முதல்வர்பத முன்னி வாழ்வாம். (௩0)

கச்சியப்ப குருக்கள்.

நச்சி யப்ப னவரும் நயப்புற
பிச்சி யபப னகமுடிப பெய்திடும்
உச்சி யப்பன் புகழ்க்காந்த மோதுசீர்க்
கச்சி யப்பன் கழறொழு தேத்துவாம். (௩க)

சிதம்பர சுவாமி.

பதம்ப ரவுநர் பல்பவம் பாற்றுவ
துதம்ப ரமெனுங் கந்தர்க்குச் சொல்லின
முதம்ப ரவபபு கல்சந்நிதி முறைச்
சிதம்பர வள்ளல சேவடி யுள்ளுவாம். (கஉ)

திருப்போரூர்ச் சந்நிதி முறை.

எந்நிதி யுளுசெவ்வே ளிறைவா போரூ
ரிநநிதி யுநதனி யிசைக்கு மாதவர்
தந்நிதிச சிதம்பர வடிகள் சாற்றிய
சநநிதி முறையினைத தாழ்ந்து வாழ்குவாம். (கங.)

குருவணக்கம்.

அச்சுதன் பரம னமபுய னாதி
யருண்மகா லிங்கமெய் வடிவாய்ச
சச்சிதா நநத சரவணற் பெறுமோா
தாண்டவ ராயதற் பரமாம்
விச்சுவ வுருவ விமலனை யுள்கு
மெய்ந்நெறி தநதெனை யெடுததாள்
கச்சியம் பதிவாழ் சபாபதிக் குரவன்
கான்மலர் சென்னியிற் புனைவாம் (கச)

அவையடக்கம்.

இகபர முணர்தது முத்தமிழ் நூலி
னியலறி மேதக்க வல்லோர்
தகைகெழுஉ மான்பா ஞேக்கிமட் கலனுக்
தகக்கொளு மாறெனத் தேறும்
வகைகலங் கிதென் ரேர்கலா வெளியேன்
வாய்கிரம் பாப்புன்சொல் போரித்

திகழைம் முகன்சே யறுமுகன் கருணைச்
சீர்ச்சரி தத்திறு தரிப்ப. (௩௫)

இதுவுமது.

கோள்கலை மலயத் தருந்தமிழ்க் குரவுக்
கொண்டுளா னதிமுன் னவர்க்காங்
கெள்கலை யகற்றும் பொருண்மொழி போரி
யிறைமுதற் குரவற்கு வன்மை
யுள்கலை யுறவி லறிஞர்முன் யானீ
துட்கிலா துரைசெயப் புக்கேன்
வெள்கலை யாசை யறிவரி தெனுமவ்
வழக்கென்பா லேவிளங் கிற்றால். (௩௬)

பாயிர முற்றுப்பெற்றது.

உ

கணபதி துணை.

திருப்போரூர்த் தலபுராண வசனம்.

முதலாவது

நைமிசாரணிய அத்தியாயம்.

சந்தன மகரு முல்லை தாமரை நெய்த லாதி
வந்தன பொருட் கிருக்கை வரைமுதற் றிணையே போலப்
பந்தமும் வீடுங் கண்டு பயிலுமெய்த் தவமு மான
கந்தரும் பொருட்கி ருக்கை நைம்மிசா ரணிய மென்ப.

பூர்வம் நைமிசாரணியத்தில் காசிபர், கௌதமர், கர்க்கர், வசிஷ்டர், வாமதேவர், புலஸ்தியர், விசுவாமித்திரர், பராசரர் முதலிய அநேக ருஷிகள் பிரமநிஷ்டாபரராயும் விபூதி ருத்திராக்ஷம் தரித்த அங்கங்களை யுடையவராயும் ஜிதேந்திரியராயும் சிவபூஜாதுரந்தரராயும் ஓரிடத்திற் சேர்ந்து தமக்குள் பேசத்தொடங்கினர்.

ஜனன மரணமான சமுத்திரம் அஞ்ஞானமாகிய ஜலத்தால் நிறைந்து, அவாவாகிய அலைகளையுடைத்தாய், காமாதிகளாகியமுதலைகளால் சஞ்சரிக்கப்பெற்றதாய்,மனோ பாவங்களாகிய மச்சங்களுக் கிடமாய், தாபத்திரயமாகிய சேறுகளுள்ளே பற்றி மோகமென்னும் பாசியால் மறைவுற்று,மாதர்களென்னும் அட்டைகள் மிக்கதாய்,அகங்கார மென்னும் குன்றுகளால் மேடுபள்ளங்களுள்ளதாய், பழைய வாசனையாகிய புதல்களோடு கூடியதாய், அபிமான மென்

னும் நீர்ச்சுழியால் அங்கங்கும் நெருக்கமுறறு ஆசையென்னும் முத்துச்சிப்பிகளால் நிரம்பி, பொய்யாகிய நுரைகளைக் கொழித்து, ராகமென்னும் நீரோட்டத்துடனே மாயையென்னும் ஆழத்தால் நீசகுநிலைகொள்ளாமல துக்கமென்னும் தவளைகளாற் கோஷிக்கபபட்டு துவேஷங்களென்னும் ஊற்றுக்களாலதிகரித்து, உலோபமாகிய அளவில்லாத விசாலத்தை யுடைத்தாய், அசுதத கருமங்களாகிய பயங்கர ஜலஜந்துக்களால் பயமுறுத்தி, காயக்கிலேச மென்னும பிலங்களும் வளைகளும் அங்கங்கும் பொருநதியதாய், வியாதியாகிய பிரவாகங்களால் அடிக்கடி நிரமபி அசத்தாகிய கரையை யுடைததா யிருக்கின்றது.

அன்றியும், அது மகோததியைப்பாரக்கிலும் மிகப் பெரிதாயிருப்பதால் அதனைக் கடத்தற்குத தகுதியாயிருக்கின்ற மரக்கலம் யாதெனில் ஸ்ரீ சுபபிரமணியக் கடவுளது பாதமேயன்றிப் பிறிதில்லை யென்று அக்கடவுளின் சாக்ஷாத்காரத்தை அடைதற்கு அநுகூலமாகிய உததியை அவ்விமலராகிய மாதவர்கள் யோசிக்கலுற்றனர்.

பரத்துவாசர் சத்தியமென்னும் உபாயத்தால் அடையலாமென்றும், வசிஷ்டர் தபோபலத்தால் அது கிடைக்குமென்றும், சதான்மர் தருமத்தால் கிடைக்குமென்றும், காசிபர் யாகங்களால் கிடைக்குமென்றும், கண்ணுவர் தானங்களாற் பெறலாமென்றும், கௌதமர் புததிரரால் அகப்படுமென்றும், துருவாசர் துறவால் சித்தியாகுமென்றும், இவ்வாறு அவ்விருடிகள் பற்பல விதமாக யோசித்துக்கொண்டிருக்கையில் வியாசருஷிக்கு முக்கிய மாணுக்கராகிய சூதபுராணிகர் முனிவர்களது புண்யாதிகத்தினுல் அவ்வனத்தில் வந்தனர்.

அம்முனிவர் அவரை நோக்கி, அர்க்கிய பாத்திய முதலியவற்றாற் பூசித்து, ஆசனத்தி லிருத்தினர். அவர் சூத புராணிகரைத் தோத்திரஞ்செய்து தமது உள்ளக் கொள்கையை அவரிடத்தில் விண்ணப்பஞ் செய்து தாம் பேசிக்கொண்டிருந்த பலவித யுத்திகளையும் விவரமாகச் சொல்லிப் பிரார்த்தித்தனர். சூத புராணிகர் முனிவரரை நோக்கிச் சொல்லுவார். பதினெண் புராணங்களையும் வெளியிட்டவராகிய வியாசரால் பூர்வத்தில சமஸ்த வேதாகமங்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்ற இப்பொருளைக்குக் கிடைத்தது காந்தபுராணத்தில் சங்கரசங்கிதையில் சிவரகசிய கண்டத்தில் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளால் வள்ளியம்மைபொருட்டு விவரித்துச சொல்லப்பட்டுள்ளதாயிருக்கின்றது. அதனை நான் கேள்வியுற்றபடி சொல்வேனாக, நீவிர பரமபக்தியோடு கேட்கத் தக்கதென்று சூதபுராணிகர் சொல்லிவருகின்றனர்.

முதலாவது நைமிசாரணிய அத்தியாயம்

முற்றிற்று.

உ

கணபதி துணை.

இரண்டாவது

திருக்கயிலாய அத்தியாயம்.

முருக வேளடிப் பத்திமை யோகருண்முன் னவராய்ந்
திருகி லாச்சிவ ஞானநீர் நிறையுவா செறியாப்
பெருகு மாக்கட லாயுமை பாகங்கொள் பெம்மான்
மருவு லாங்கழல் வாரிசந் தனிநிகர் மதியீர். (௧)

ஆறு மாமுகப் பிரான்றிரு மான்மகட் கந்நாள்
கூறு மாக்கதை யனைத்தையும் விரியுறக் கூறி
யேறு மாறரும் பவக்கட லெமக்கரு ளுமினென்
றூறு மூறிலார் தவத்தொடு முறைசெய வுவந்தான் (௨)

மாற்றும் வெவ்வினை யாளனு சூதமா தவன்வெங்
கூற்ற டேஊந்திருந் தாளுமை கொண்கனூர் பயந்த
வேற்ற ருந்திறற் பிள்ளையார் வியன்மலர்ப் பாதம்
போற்றிச சிந்தித்து வணங்கியன் னவாக்கிது புகலவான்.(௩)

ஊழிக்காலந்தோறும் வளர்ந்தோங்குகின்ற ஸ்ரீ கைலாசத்தின் கொடுமுடி நடுவில் சகலவித அலங்காரங்களால் நிறைவுள்ள திருக்கோயிலுள் நவரத்தினங்களழுத்திய சிங்காதனத்தில் ஸ்ரீபார்வதிசமேதராய் விநாயகர், முருகக்கடவுள் சூழ்ந்திருக்கப் பரமேசுவரர் வீற்றிருந்து பிரமவிஷ்ணுக்களும் ஜனகர் முதலிய முனிவரும் அநந்த முக்தர்களும் நந்திதேவர் முதலிய கணங்களும் அளவற்ற உருத்

திரர்களும் மற்றை யெல்லாத் தேவர்களும் வந்து நெருங்கி பயபக்தியுடன் சேவிக்க அவரவர்களுக்கும் இச்சித்த வரங்களை அநுக்கிரகித்து வருகின்ற சமயத்தில், அநேக ருஷிகளுடன் அகஸ்திய முனிவர் பக்தியினால் பலமுறை நமஸ்கரித்துக்கொண்டு பயபக்தியுடன் மெள்ளமெள்ள நெருங்கிச் சந்நிதானத்தில் வந்து அநேக முறை அஷ்டாங்கமாக ஸ்ரீ பாதங்களை வணங்கி வேதவாக்கியங்களால் தோத்திரம் பண்ணினார்.

இரண்டாவது திருக்கயிலாய அத்தியாயம்

முற்றிற்று.

உ

கணபதி துணை.

மூன்றாவது

கந்தமாதன அத்தியாயம்.

வடவரை யிறுஞ்சிர மிசைக வண்டமிழ்ப் பொதியின் மேவுங்
குடமுனி வரனெங் கோமான் கொடுமுடிக் கயிலை யாங்கர்த்
தடவரை யகலா வேறாகத் தனிமுதல் பொறுமை யாற்ற
லிடனுற வினைந்நெறி வேட்ட தேற்றமை யினிது சொற்றாம்.

அதனைக் கேட்டுத் திருவுள மகிழ்ந்தருளிய பரமேசுவரர் அவரைக் கடாக்ஷித்து யாது வேண்டி வந்தனை யென வினவ, அகத்தியர் இறைவரைப் பணிந்து விண்ணப்பஞ் செய்கின்றனர்: ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கிய மென்னும் ஆறும் பகமென்னும் சப்தத்தால் சொல்லப்பட்டுள்ளது. அவற்றின் உண்மையை அடியே

ரகத்துக் கெளிதாக் கிடைக்கப்பெறுவேனென்பேனை, முனிவ! நீ விரும்பியது போகசாதனமாயுள்ளது, உண்மையே, அதிருந்து கொள்ளத் தக்கதுதான்; இப்படியாகவே அதனை உணர்ந்துள்ள ஸ்ரீ சனற்குமாரத்தி முனிவனை ஒருகாலத்து நம்பெருமாட்டி செல்விலிருந்தனன்; அது பிள்ளையா பெரு வீதங்கால நாமத்து அதந்தத்தை யுடையாக்கியது. ஆதலால், விரத்தமாய் பண்ணுது அதனைக் கேட்டுத் தெளிவாய் கடவுளை பெண்ணுகிடப் பெறியிட, அவரோ அகஸ்தியர் புனிவடு கொண்டு பல திருப்பதிகளையும் பல அருவிகளையும் தொழுது அப்பால் இருந்தனர் அதர்த் தவத்தின பயனடையவர்க்குப் புயிர்த்துணையாகிய ஏந்தத்திலிருந்த சகல தேவர்களும் ஆனையான விண்ணாகு தேவர் முதல்வேபார புரிய கரத்துப் பணிவேன்டிய அத்திகளிருந்தன செயற்கையைத் தில நீ கந்த விட்டிருந்தனர் திருமேனி தத்தத்த அகஸ் தியர் காணப்பெற்று, ஆனந்த பரவசப்பட்டார் கண்ணீர் பர்ந்தோடியுடையவராய் மனமுருகி முகத்துடன் பெற்றிலிருந்தனர் கத்து, பலபடிமுறை நமஸ்கரித்துக் கைகளை யஞ்சலித்துக் கொண்டு தோத்திரமுமாற்றத் துதிசெய்தனர்.

ஆதித்தியாமாயுமாய அகஸ்தியரைத் திருநோக்குச்செய்தருளி, அவரது விண்ணப்பத்தைத் திருவுளங்கொண்டு நம்மைத் துதிசெய்த தோத்திரம் அகஸ்தியத்தை மென்று விளங்கக்கடவது, இப்போது நமையக் கோரிவந்து பிரார்த்தித்த ஏழை குணம்பொருள்ள பலவகைச் சத்திகளுக்கும் பிரபவித்துகளுக்கும் திருமால் முதலிய தேவர்களுக்கும் அந்தணர் முதலியோர்க்கும் போகத்தையும் முத்தியையும் கொடுத்து அவர்களால் வழிக்கத் தக்கதாயுள்ள நிலவுலகத்தில் குருபுரத்தைப் புரோசிக்கின்றேனெனறு

அருளிச்செய்யக்கேட்டு அகஸ்தியர் சந்தோஷித்து வணங்கி உலகத்தில் அநேக க்ஷேத்திரமுண்டு, அவற்றுள் எந்த க்ஷேத்திரத்தில் அந்தப் பதவியேறுதற்குக் கட்டளையிட்டருளத் திருவுளங்கொண்டது, அந்தக் கருணைபாலத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று நமஸ்கரிக்க, ஸ்ரீ சண்முக மூர்த்தி அருளிச்செய்கின்றனர்.

மூன்றாவது கந்தமாதன அத்தியாயம்

முற்றிற்று.

உ

கணபதி துணை.

நான்காவது

தலவிசேட அத்தியாயம்.

பன்னிரண்டு கண்ணுடைய பரமபரன் பெருந்தவத்துத்
தன்னுரும்ப முனிவர்க் குரைத்தவா றியம்புதலை
முன்னைமறை சொற்றொடர்ந்த முனிவன் மாதவத்தோர்
சொன்னவண்ணம் பலசாரத் தலத்தின் வண்ண மறை சொல்லு
[வாரம்.

உலகத்தில் போகமோக்ஷங்களுக்கு ஹேதுவாக அநந்த ஸ்தலங்களிருக்கின்றன, அவற்றுள் பாமரருக்குப் பிரீதிகரமான புராணங்களைப் பகிர்கின்றேன். அவற்றுள் ஆறுதலங்கள் விசேடமானவை, அவற்றுள் பரமசிவனுக்கும் நமக்கு ஆனந்தகரமாயும் சாந்நித்தியமாகியும் பாப சமூகமாகிய இருட்டுக்குத் தேஜஸாகியும் முக்தியென்னும் ஸ்ரீ சையோகத்திற்குப் புட்பவமளியாகியும் சர்வ பாப விமோசனகரமாகியும்

உள்ள தலங்கள் அறுபத்து நான்குண்டு அவற்றுள் ஆறு தலங்கள் நமக்குரியவை, அவை பாக்கியம், திருச்செந்தூர், சாமிமலை, கோமுகதம், மகாகந்தமாவனம், யுத்தபுரம் என்பனவாம் இவ்வாறு தலங்களுள் நமக்குமிகுந்த பிரீதிகரமாயுள்ளது யுத்தபுரியென்னும் திருப்போரூர். அது நாம் இடைவிடாமல் வசிக்கின்ற ஸ்தலமாகிய பாபமென்னும் காட்டிக்கு அக்கினி பாகமும் சோமமாகிய விருட்டிக்குச் சூரிய மண்டலமாகியும் ஜனன மரணமாகிய விஷப்பூண்டுகளுக்குக் கோடாலி யாகியும் முத்தியென்னும் பெண்ணின் விவாகத்திற்கு மங்களகிருத்தியமாகியும் சகல தேவர்களுக்கும் ஆஸ்பத ஸ்தானமாகியும் ருஷிசங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டதாயுமுள்ளது. அது அத்தியந்தம் புண்ணிய க்ஷேத்திரமாயு மிருக்கின்றது அந்த க்ஷேத்திரத்தில் சகல தேவர்களும் பூசிக்கின்ற யுத்தபர்வத மென்னுமொரு மலையுண்டு அதன் கொடுமுடியில் பூர்வகாலத்தில் நாம் பரார்த்தமாகப் பிரதிஷ்டை பண்ணிய பரமேசுவரர் பார்வதி சமேதராய் விக்கேசுவரருடன் வீற்றிருந்து பக்தஜனங்களுக்குச் சதுர்வித புருஷார்த்த பலன்களையும் பொழிந்து மனமார ஸ்மரிக்கின்றவர்களுக்குச் சகல பாவங்களையும் பரிகரித்து இடைவிடாமல் சாந்நித்தியரா யிருக்கின்றனர். அந்தப் பர்வதத்தின் கிழக்கில் அன்பர்களுக்கு எண்ணியவாறு பலன்களைக் கொடுத்துக்கொண்டு விஷ்ணுபுத்திரியாகிய வள்ளியம்மையும் இந்திர புத்திரியாகிய தெய்வயானையாரும் இருபக்கத்தினு மிருக்க நாமெக்காலமும் நீங்காமல் வீற்றிருக்கின்றேம்.

நான்காவது தலவிசேட அத்தியாயம்

முற்றிற்று.

உ

கணபதி துணை

ஐந்தாவது

தீர்த்தவிசேட அத்தியாயம்.

அருச்சனை புரிபவ ரகமெ லாக்குறழ்
திருச்சம ராபுரிக் கோயிற் றென்புடைக்
கருச்சுவை நச்சிலாத கருதி யேத்துதே
மருச்சத் தளத்தடப் புகழ்மை வாழ்த்துவாம்.

அதற்குத் தக்ஷிணபாகத்தில மூழ்கினவர்களுக்குப் பிரமகத்தி முதலிய கொடிய பாவங்களையும் நசிக்கப்பண்ணு கின்றதா யுள்ளது ஒரு தடாகம், அது வள்ளியாரோடை யென்றும் சரவணப்பொய்கை யென்றும் பெயருள்ளது. அது தீர்த்த விசேஷத்திற் சிறந்திருக்கின்றது

ஐந்தாவது தீர்த்தவிசேட அத்தியாயம்

முற்றிற்று

உ

கணபதி துணை.

ஆறுவது

மூர்த்திவிசேட அத்தியாயம்.

தென்றல் சூழ்வரை முனிக்கிளந்த சேயருள் செய்த
துன்றுகேள்விசால வியாதனைமுன் தொகுத்தவை யுறவோ
கன்றுசூதமா தவனசொற்ற படியணி போரூர் [ராச
நின்ற சீர்க்குரு மூர்த்தியி னருணிகழ்ந்த திடுவாம்.

அதற்கு வடதிசையில் நிம்ப விருக்ஷத்தின் மூலத்தில் விக்நேசுவரர் வீற்றிருந்து தம்மை வந்து தரிசிப்பவர்களுக்கு விக்னங்களை யொழித்து அபீஷ்டங்களைப் பாலிக்கின்றனர். இவ்வகை மகாத்மியமுள்ள யுத்தபுரியில் நாம் பிரணவப் பொருளை உபதேசித்தருளுவோம். எந்த நாளத்தில் தேவர்களும் முனிவர்களும் சித்தர் முதலியோரும் மாசற்ற மனத்துடனே நம்மைப் பக்தி பூர்வமாகப் பூசித்து இஷ்ட பலன்களை அடைகின்றனரோ அத்தலமாகிய திருப்போரூரின்கண், அகஸ்தியமுனியே! போய்த் தியானித்துக்கொண்டிருந்தால் உனது அபீஷ்டம் நிச்சயமாகக் கூடிய விரைவில் சித்தியாகுமென்று பிரசாதித்தருளினார்.

ஆறுவது மூர்த்திவிசேட அத்தியாயம்

முற்றிற்று.

கணபதி துணை.

ஏழாவது

திருஎல்லை அத்தியாயம்.

மருப்போர்ந்த கோட்டுமலைப் பொலிகோமான
புத்தலவியொடு மதித்தோருள்ளத்
திருப்போமுன் றிணைப்புணர்ப்பைக் கிளிகேட்கக்
கருணையொடு மியம்பு மீற்றுத்
திருப்போரு மெல்லைவரை யுடன்முன்னேன்
பாலபதிகள் சேவித்தோருள்
விருப்போங்கதின் னருளுதவு சிவதலங்க
ளுளவவற்றை விரித்துச் சொல்வாம்.

இவ்வாறு சொல்லக் கேட்ட நைமிசாரணிய முனிவர்கள் புத்தபுரி க்ஷேத்திரத்தின் எல்லையும் அதிலுள்ள சிவத்தலங்களும் விஷ்ணுஸ்தலங்களும் விநாயகர் தலங்களும் இன்னினவென்று சொல்லவேண்டுமென விஞவச் சூத புராணிகர் சொல்லுகின்றனர்.

ஸ்ரீகாஞ்சிபுரத்திற்குக் கிழக்கில் ஐந்து யோசனைக்குள்ளும் திருக்கழுக்குன்றத்திற்கு ஈசான திக்கில் பத்து நாழிகை வழிக்குள்ளும் கிழக்குச் சமுத்திரத்திற்கு மேற்கில் இரண்டு நாழிகை வழிக்குள்ளும் திருமயிலையைச் சார்ந்த திருவான்மியூர்க்கு இருபது நாழிகை வழிக்குள்ளும் அத்தல மிருக்கின்றது. இங்ஙனம் நான்கு திக்கிலுமுள்ள எல்லையினளவு ஒன்றரைக் காவதமாம் அத்தலத்தில் ஆன்மாக்களுக்குக் கலியுகாவத்தைத்தும் இடமேதனையு முண்டாவ

தில்லை. ஸ்ரீசண்முக மூர்த்தியின் சத்திமுனையாற் பெருமையுற்று அவரது தேஜசினால் நிறைந்துள்ளது. அங்கு வசிப்பவர்கட்கு முத்தி எளிதின[illegible]லாவது அபக்தியாலாவது அங்கு இறப்பவன் சர்வ பாபத்தினின்று நீங்கித தேகாந்தத்தில் [illegible] கைலாசத்தையடையவன் அத்தலத்திலுள்ள யுத்[illegible]யை ஒரு முறை வலம்வந்தவன மற்றைப் புண்ணிய தலங்களில் வாசஞ்செய்தவனுகிச சகல இஷ்ட காமியங்களையும் பெறுவன் அதன் கொடுமுடியிற சுயம்புவாய் வீற்றிருன்ற ஸ்ரீபாலாம்பிகை சமேத மகேசுவரரை ஒரு முறை பக்தியுடன் பிரதக்ஷிணம பண்ணினவன் பநத விமோசனம் பெறுவன் அமமலை திருமகள் பூஜித்தமையால ஸ்ரீபாவத மென்றும் சணமுக மூாத்தியால் அங்குச் சில அசுரர் தாக்கப்பட்டுப் போய்விட்டமையால யுத்தகிரி யென்றும் பெயர் பெற்றது.

ஏழாவது திருவெல்லை அத்தியாயம்

முற்றிற்று.

உ

கணபதி துணை.

எட்டாவது
கண்ணுவர் அத்தியாயம்.

நித்தமா தவப்பொன் மேரு நிறைகுணக் கண்ணு வப்பேர்
வித்தகா ரணன்மால செய்யா ளுபேந்திர வீரம் சிறிக்
கைத்தசா பமப ரித்த காதையுங் கமலை சாபம [வாம்.
யுத்தவான் கிரியைச் சூழ்ந்தாங் கொருவிய வாறுஞ் சொல்

அவற்றின் வரலாறு பூர்வம ராதாந்தர கற்பத்தில் ஸ்ரீவைகுண்டத்தின்கண் விஷ்ணுதேவர் ஒரு நாள் மஹா மணி மேடைமேற் பரிவாரங்களின்றி உபேந்திரனுடன் ஸ்ரீதேவி சமேதராய் வீற்றிருந்து சில ரகசிய வார்த்தையாடிக்கொண்டிருந்த சமயத்தில அங்கு வந்த கண்ணுவ முனிவரைத், தமது ரகசிய வார்த்தைகளாலே பரவசராக இருந்தமையால், தாம உபசரிக்கவில்லை அதனாற் கண்ணுவர் கோபமுற்று விஷ்ணு தேவரையும் ஸ்ரீதேவியையும உபேந்திரனையும் நோக்கி நம்மை உபசாரம் செய்யாதிருந்தமையால் நீவிர் மூவரும் முறையே ஊமையாகவும் மானாகவும் வேடனாகவும் தோன்றி வனங்களிற் சஞ்சரிக்கக்கடவீர் என்று சபித்துத் தமது ஆசிரமம் வந்து சேர்ந்தனர்

எட்டாவது கண்ணுவர் அத்தியாயம

முற்றிற்று.

உ

கணபதி துணை.

ஒன்பதாவது

சிவமுனி அத்தியாயம்.

தவமுநிக்கா சறைநததாற் றிருமகள் தாங்கும்
பவமுனிப்பெரு மானருள் கிடைத்துப்பாற் றியபின்
அவமுனிப்படா பவர்க்கறி வருஞ்சமர்க் கிரிக்கண்
சிவமுநிக்குமே லடுததமை வரன்முறை தெரிப்பாம்.

பின்பு, மேற்கூறிய மலையைச் சார்ந்த ஆரணியத்தில் உபேநதிரன் வேடர்க்கரசனுகத் தோன்றியிருநதான். அவ் வனததிற்குச சிறிது தூரத்திலுள்ள ஒரு மலைச்சாரலில் விஷ்ணுதேவர் சிவமுனியென்னும் பேருடன் மரவுரியுடுத்து விபூதி ருத்திராக்ஷ தாரணராய்ப பஞ்சாக்ஷர மநதிரத்தை ஜபித்துக் கொண்டொரு புனனை மரத்தின்கீழ்த தவத்தி லிருநதனர். திருமகளும் ஒரு பெண்மானுகித துணையில்லா மையால் பயமும் மருட்சியு மிகுந்து தனது துணையாகிய பதியை யடையவேண்டுமென்னும் இசசையுடன் வனந தோறும் தேடிப் பார்ததுக்கொண்டு துணையைக் காணுமை யால அதிக கிலேசங்கொண்டு சஞ்சரிதது வருங்கால் ஒரு நாள் தெய்வாதீனத்தால் மேற்கூறிய மலைச்சாரலில் வரப் பெற்று அங்குத் தவததிலிருக்கின்ற சிவமுனியைக்கண்டு இச்சையுண்டாகி அருகில்வநது இடைவிடாமல் அவர்முக த்தை மோந்துமோநது அன்புட னெதிரில் நிற்க முனிவ ரும் அழகுள்ள இளமைவாய்ந்த அந்தப் பெண்மானை யிச் சையொடுங் கண்களால் நோக்கியமாத்திரத்தில் அது கர்ப்

பங்கொண்டு, அங்கே ஓரோடைக் கரையில் குறத்தியர் வள்ளிக்கிழங்குகள் தோண்டிய பள்ளத்தில ஒருபெண்குழந்தையைப் பெற்றது. அக்குழநதை தன்னில்நின்றும் வேறுபட்டதாய்க் குரல்பேதமுள்ளதாயிருநதும், அதனைத் தான் விட்டுப்போகத் துணியாமல் அடிக்கடி முகத்தைநோக்கியும் உடம்பை நாவினல் நக்கியும் அடஙகாத பிரியுடன் பால் சுரநது பூரிக்கின்ற மடியையுடையதாய்க் கூவிக்கூவிச் சுற்றிச்சுற்றி ஓடியும் வநதும களித்திருநதது. அனறியும அக்குழநதையை யெடுததுக்கொண்டு போகமாட்டாமையாற் காட்டு மிருகங்கள் அதனை வருத்தி வதைத்திடாதபடி பாதுகாத்துக்கொண்டு மிகுந்த அச்சததுடனிருநத சமயத்தில், நான்கு பககங்களிலும நாய்கள் சூழப பம்பைகளொலிக்க வாாவலை வெடிகளுடன வேட்டைமேல வருகின்ற ஒரு கூட்டததைத தூரததிற பாாதது மருணடு பயநது இனி யாது செய்யககடவோம், நாம இஙகு தாமதிதது நின்றால் வேடா வநது நம்மைப்பற்றி வதைப்பா, குழநதைக்கு வேறோர் துணையுமில்லை, எவ்வாறானலும நாம இதுபோது, இவ்விடத்தைவிட்டு நீஙகுவதே நலன், எலலா வுயிாகளுக்கும் பதியாகிய கடவுளே இக்குழநதைக்குப் பிரியாத் துணையாகுமென் றுட்கொண்டு மேல்நடக்க விருக்கின்ற நிமித்தத்தால் தன் குழநதையை விட்டுப போகததுணிநதது.

அத்தருணத்தில் வேட்டைமேல் வநத உபேந்திர வேடராஜன் அக்குழநதையைக் கண்டு பூரித்து, கையினல் தழுவி யேந்திக்கொண்டுபோய்த் தனது பததினி கையிற் கொடுக்க அதனைப் பாாத்து மகிழ்ந்து இரு கையாலும் வாங்கிப பால்சுரந்து அதற்கு ஊட்டிச் சீராட்டி வளர்க்க வள்ளியம்மை யென்னும் பெயருடன் அதுவளாந்திருநதது.

பின்பு, வனந்தோறும் சஞ்சரித்து வருங்கால் சாப விமோசன காலம் நேர்ந்தமையால் திருப்போரூரின் கண்ணுள்ள யுத்தகிரியை யடைந்து நானிலைசயினுஞ் சுற்றிப் புல் மேயவேண்டுமென்னும் இச்சையால் மூன்று தினம் வலமாகத் திரிந்துகொண்டிருக்க அம்மலையின தெய்வத்தன்மையால் மான்வடிவு நீங்கிச சுயரூபத்தைப் பெற்றவளவில் ஸ்ரீதேவிக்கு அதிசயமும் அனபுந தோன்றி, இக்கிரியில் ஏதோ தெய்வததன்மை நிலைபெற்றுள்ளது, இது புண்ணிய க்ஷேத்திரமாகும, நிச்சயந்தான், வேறுவிசாரம் வேண்டுவதில்லை யென்று அத்தலத்தை நானகு பக்கங்களிலும் போய்ப்பார்த்துப புண்ணியதீர்த்தமாகிய வள்ளையாரோடையில் ஸ்நானஞ்செய்து நித்திய விதிகளை முடித்து அதன்வடகரையிற்கோயில்கொண்டிருக்கும ஸ்ரீசண்முக மூர்த்தியைத் தரிசித்து விடைகொண்டு யுத்தகிரியைப பத்தியொடு வலம் வந்து, மேலேயேறிக் கொடுமுடியின்கண் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து, இந்த மஹாலிங்கத்தின பிரபாவத்தினலேயன்றோ நமக்குச சாபவிமோசனங் கிடைத்ததென்று துதித்து, கிரீசனையும பாலாம்பிகை அம்மையையும் நின்மலமான தீர்த்தம புஷ்பம் அக்ஷதை முதலியவற்றால அபிஷேக அலங்காரங்கள்செய்து, நாடோறும் பூசித்து, நவநவமாகிய ஸ்தோத்திரங்களால் துதிசெய்து, பிரார்த்தித்துத்தன் பதியாகிய விஷ்ணுதேவரை யடைய வேண்டுமென்னுங் கருத்தால் அங்குத தவத்தை மேற்கொண்டு, ஆயிரவருடவரை நோற்றிருக்க, மேற புன்னைமரத்தின் கீழிருந்த சிவமுனிவர் பிறகு அநேக வனங்களிற் சஞ்சரித்து யோகுசெய்தும் சாப விமோசனங் கிடையாமையால் ஸ்ரீகைலாசத்தை நோக்கிச் சென்று அச்சாரலில ஆயிர வருடவரையில் அருமையான தவஞ்செய்து கொண்டிருக்கக் கைலாசபதி பிரத்தி

யக்ஷமாகி அநுக்கிரகித்தருள்கினூர் 'சிவமுனியே! பூமியின்கண் பிரசித்தமாயிருக்கின்ற நமது தலங்கள் அநேகங்களுள் யுத்தபுரி யென்றொரு மஹாஸ்தலமுண்டு. அதிற் கண்ணுவமுனிவ ராசிரமத்தில ஸ்கந்தரது ஆநந்தத்திற் கிருக்கையான யுத்தகிரியின்கண் கந்தரால் பிரதிஷ்டைசெய்த சிவலிங்கமொன்றுண்டு, அது கண்ணுவமுனிவனாலும் பூசிக்கப்பட்டுள்ளது, அம்மலையில் கந்தரது உபாசனையை முக்கியமாகவுடைய அம்முனிவன் நாடோறும் கிரிவலஞ் செய்துகொண்டு ஆசிரமத்தி லிருக்கின்றனன்.

'அங்கு உனது பாரியாகிய திருமகள் சாபவிமோசனமடைந்திருக்கின்றன ளாகையால் அவ்விடத்தி லுனக்கும் சாப விமோசனங்கிடைக்கும்' என்று சொல்லியெழுந்தருளலும் சிவமுனிவர் ஸ்ரீகைலையினின்றும் பூலோகத்தை யடைந்து யுத்தகிரியைச் சேர்ந்து தரிசித்தமாத்திரத்தில ஹிருதயம் நிர்மலமாகி அதிசயங்கொண்டு, இஃதென்ன அற்புதம், இவ்வுலகத்தில அநந்தவனங்களிற்போய் நாம் தவஞ் செய்தும இவவாறு மனம் நிர்மலமாக விலலை, இங்கே பிரவேசித்தமாத்திரத்தில் நிர்மலமாயிற்று, இது மஹா ஆச்சரியமென எண்ணி ஸ்ரீகைலாசத்திற் பரமசிவம் சொல்லியருளிய புண்ணிய தலம இதுவேயாம், அதோ எதிரிற்காண்பது கண்ணுவராசிரமமாகும, அதற்கருகில தோன்றுவது தான் யுத்தகிரி, அதற்குக் கீழ்ப்பாலுள்ளது கந்தராலயமாகும் என நிச்சயித்து ஆநந்தாகாரராய் அணுகி, அன்னப் பறவைகள் வசித்தொலிக்கின்ற தாமரை மலர் நிறைந்து வண்டுகளது கீதங்கள் மிகுந்து உத்தமர்களது உள்ளம் போல் மாசற்றிருக்கின்ற ஜலத்தால் நிறைவுற்றுச சித்தர் முதலிய தேவர்களால் சேவிக்கப்பட்டுப பிரமகத்தி முத

லிய மாபாதகங்களை நிவர்த்திசெய்து பிரமதீர்த்தமென்று பிரசித்தமாயுள்ள வள்ளையாரோடையைக் கங்காதீர்த்தமாகப் பாவித்துச சங்கற்ப மேற்கொண்டு அதில் மூழ்கி விபூதி ருத்திராக்ஷாலங்கிருதராய் நித்திய கன்மததைை முடித்து ஸ்கந்தரைத் தரிசித்து அந்தவிசேடத்தை அவர் சொல்லக்கேட்டுப் புளகாங்கிதமுற்றுப் பணிந்து அவர் திருவருளை மேற்கொண்டு கிரியை வலம்வந்து அதன் சிகரததிலுள்ள மறைலிஙகததைப பக்திபூரவகமாக வணங்கிச சங்கற்பஞ்செய்துகொண்டு காமிக ஆகமத்திற் சொல்லிய விதிபபடி அபிடேக முதலியனவும் அன்புடன் செய்து சகல வுபசாரஙகளினாற் பூசித்து வேதவாக்கியங்களாற் பற்பல விதமாகத் தோத்திரஞ் செய்தனர்

அப்பொழுது விஷ்ணுதேவா செய்த திவ்ய பூஜையினாலும் தோததிரங்களாலும் ஆநந்தமுற்றுப் புதல்வர்களுடன் பார்வதிசமேத கைலாசநாதர் சிவலிங்கததினின்றும் வெளிவந்து காட்சியருளி அவரது சாப விமோசனஞ் செய்து ஸ்ரீதேவி அதறகு முன் அங்குவநது தானுஞ் சாப விமோசனமபெற்றுத தமமைப் பூஜித்துத தன் பதியை யடையவேண்டிக் கந்தராலயததில் வள்ளியம்மைக்கருகில் நோற்றிருக்கின்ற செய்தியைச் சொல்லி ஸ்ரீதேவியையும் வரவழைதது உனது பூசையினாலும் கிரிபபிரதக்ஷிணத்தினாலும் அளவிலலாத ஆநந்தமுற்றோம்; உனது கோரிக்கையின்படி உனது பதியைப் பெற்றுக்கொள்க வென்று தந்தருளி ஸ்ரீதேவியை நோக்கி யநுக்கிரகிக்கின்றனர்.

ஒன்பதாவது சிவமுனி அத்தியாயம

முற்றிற்று.

உ

கணபதி துணை.

பத்தாவது

வாமகெவி அத்தியாயம்.

புவியெலாந் தந்த பாகப் புநிதனு மருளி யாங்குக்
குவியுள முநிவர் தந்த கோதையைத் திருமால் வேட்டாங்
கவிருநித் தியகல்யாண னுமொரு பெயர்கொள் வாம
கெவிவளம் போரு ரெங்கோன் கருணையாற் கிளக்கலுற்றும்.

இந்த மலைக்கு ஈசானத்தில் கீழ்ச்சமுத்திரக்கரையில் சில முனிவர்கள் உன்னைப் புத்திரியாகப் பெறவேண்டி நெடுங்காலம் தவஞ்செய்யா நின்றனர். அவர்களுக்குப் புத்திரிகளா யவதரிப்பாய். ஒருகாலத்திற் சதுரங்க விளையாட்டில் உனக்கும் உன்பதிக்கும் வாக்குவாதத்தினால் நீ தனித்து நீங்கி அம்முனிவர்கட்குப் புத்திரிகளாயிருக்க இந்த விஷ்ணுதேவர் வராக ரூபியாய்த் தேடிக்கொண்டு வந்து அம்முனிவ ராச்சிரமத்திலிருக்கும் உன்னை ஓராண்டு பரியந்தம் ஒவ்வொரு பெண்ணாக விவாகஞ்செய்து நித்திய கல்யாண ரென்னும் பெயருடைய ராயிருப்பர். அன்றியும் விஷ்ணுதேவர் உன்னைத் தமது மடியிலேந்திக்கொண்டு ஒருபோதுங் கீழே விடாமலிருப்பா ராகையால் அந்த க்ஷேத்திரம் வாமகெவி யென்னும் நாமத்தை யுடையதாகும்.

இன்னும் கேட்பாயாக, உனக்குப் பிரீதிகரமா யிருக்கின்ற சுக்கிரவாரம் விடியற்காலத்தி லெழுந்திருந்து ஸ்நான முதலிய நித்தியகன்மங்களைப் பிரணவாமிர்த தீர்த்தத்தி

ஞல் நிறைவேற்றி நமமாலும கௌரியினாலும் நமது குமாரர்களாலும் ஆசரிக்கப்பட்டிருக்கின்ற இவ்வோங்கார ரூபியாகிய ஸ்ரீசைலத்தை யாவன் பத்திமையோடும் பிரதக்ஷிணஞ்செய்கின்ருனே அவன எழுபிறவியாகிய துன்பங்களினின்றும் விடுபட்டவனும், இக்கிரிமைய முக்காலும் வலம் வருபவன் பாபரஹிதனும் ஆயிரம் அசுவமேதஞ் செய்த பயனை யடைந்து செல்வமிகுந்து அபீஷ்டங்களைப் பெற்றுச் சந்தானவிருததியுடன வாழ்ந்திருநது தேகாந்ததததில் நமது பதவியையும் அடைவனென்றும் வருடநதோறும ஆடிமாதக் கார்த்திகையில நியமத்துடன தேவ முனிவ யக்ஷ கந்தருவர் முதலியோரும தத்தம பததினிகளுடன் இங்குத் தரிசனததின்பொருட்டு வருகின்றன ராகையால் அவர்களுடன் நீங்களிருவீரும கூடிவநது சோமாஸ்கநதராகிய நம்மை பக்தியினு லாராதித்துச சேவிதது ஆனநதத்தை யடையக் கடவீரென்றுஞ் சொலலியருளினர்.

இவறறைக் கேள்வியுறறு இக்கிரியானது பிரணவாத்மா வென்றும் இததீர்த்தம் பிரணவாமிர்தமென்றும் யாது காரணத்தாற் பெயர் பெற்றன அவவரலாறறைச சொல்லியருள வேண்டுமென்று விஷ்ணுதேவா அஞ்சலித்து வினவுதலும் ஸ்ரீகைலாசநாதர் திருவாய்மலர்நதருள்கின்றனர்

பத்தாவது வாமதேவி அத்தியாயம்

முற்றிற்று.

உ

கணபதி துணை.

பதினொன்றாவது
பிரணவகிரி அத்தியாயம்.

வருபிர ணவமெனுஞ் சமர மாபுரி
மருவியன னந்தனெய்யா மனனுநிர்த்த நங்கண
டருவினை யறுத்தனிப் பூசையாற் றிகழ்ந்தா
னொருவனை யாயுய ருண்மை கூறுவாம்

ஒரு கற்பாந்தரத்தில் வேதங்கள் கலிகாலத்தைப் பயந்து
அருந்தவஞ்செய்து நம்மைப் பிரார்த்திக்க அவற்றிற்கு நாம்
காட்சிகொடுத்தருளி அவற்றின் வேண்டுகோளின்படி வரந்
தரப்பெற்ற வேதங்கள் ஸ்ரீகாஞ்சிபுரத்திற்குக் கிழக்கே ஒரு
சார் அக்கினி மூலையிற் கிழக்குச் சமுத்திரத்திற்கு மேற்
பால் காதவழி தூரத்தில் உருத்திரகோடி யென்கிற திவ்ய
க்ஷேத்திரத்தில் பர்வதமாகி நின்றன அது வேதகிரி யென்
று பெயராயினது அந்த மலையின் சிகரத்தே லோகாநுக்
கிரகத்தின்பொருட்டு நாம் திவ்யலிங்காகாரமாகிச் சாந்நித்
தியமாக இருக்கின்றோம் அவ்வாறு வேதங்கள் வரம்
பெற்றதையறிந்து வேதங்களுக்கு ஆதியந்தமாயிருக்கின்ற
பிரணவபுருஷன் நம்மையடைந்து நமஸ்கரித்துக் கேட்டுக்
கொண்டவாறு, ஸ்ரீ கைலாசபதியே! அடியேன் தேவரீர்
கிருபையினால் வேதங்களுக்கெல்லாம் ஆதியந்தமாகி மஹா
மந்திரங்களுக்கெல்லாம் முதலாகி யிருக்கின்றேன் என்னை
வேதங்கள் நீக்கிவிட்டுத் தனியே சென்று தவஞ்செய்து

வரம்பெற்றமையால் அடியேனுக்கு இருக்குமிடம் யாதென விண்ணப்பஞ்செய்ய, பிரணவமே! உன்னைத் தமது சரீரமா வகித்திருக்கின்ற நமது சுப்பிரமண்ணிய மூர்த்தியை நோக்கிப் பிரார்த்தித்தனையாயின் உனது மனோரதம் நிறைவேறுமென்று கட்டளையிட்டருளலும், பிரணவம் முருக கடவுளைப் பணிந்து வணங்கிப் பலவாறு தோத்திரஞ்செய்து பிள்ளையார் ஓங்காரத்தைக் கடைக்கணித்து அதன் விண்ணப்பத்தைக் கேட்டருளி அநுக்கிரகித்த வண்ணம் கைலையை நீங்கி யித்தலத்தின்கண் வந்து வள்ளையாரோடையில் நீராடி அநுஷ்டானங்களை முடித்து ஸ்கந்தனை நமஸ்கரித்து அவரைப் பூசிக்கவேண்டிக் கோயிலின் ஈசானத்தில் பிரணவாமிர்தமென்கிற பேரால் ஒரு தீர்த்தத்தை யுண்டுபண்ணி அதனாற் பிள்ளையாரை அபிஷேகித்து தோத்திரஞ்செய்து அன்புடன் பிரார்த்தித்த அளவில், ஐவரிய முதலிய *ஆறுலும் பூரணராயிருக்கின்ற ஷண்முக அங்குள்ள சுயம்புவாகிய விம்பத்தினின்றும் பிரத்தியராய் வந்து தமது பாதங்களில் நமஸ்கரித்த பிரணவபுருஷனைக் கைகளாலெடுத்து ஆசீர்வதித்து மஹாமந்திர யந்ரங்களில் உன்னை யெப்படிச் சூழப்பட்டிருக்கின்றோமோ அப்படி யிந்த யுத்தபுரியில் நீ நமது பின்பக்கத்திற் சூழ்ந்த மலைவடிவமாகி யிருக்கக்கடவை யென்றும் இது முதல் பிரணவ சைலமென்று பெயர் பெறுவா யென்றும் உனது உச்சியில் உன்பாலுள்ள பிரீதியினால் கௌரீபாகராகிய கைலாசநாதரும் நாமும் இடைவிடாமல் வீற்றிருந்து உன்னை சேவிக்கின்ற ஆத்மகோடிகளுக்கு மனோரதங்களைப் பூர்த்

* தன் வயத்தனாதல், முதலிலனாதல், உடம்பிலனாதல், எல் நலனுமுள்ளனாதல், எங்கும் வியாபகனாதல், எவற்றிற்கும் காரணனாதல்.

செய்வோம். ருத்திரகோடியில் பர்வதரூபங்களாய் நிற்கின்ற வேதங்களும் உபநிஷத்துக்கணங்களோடு நாடோறும் உன்னைச் சேவித்துக்கொண்டிருக்கக் கடவன. உன்னருகிலிருப்பவர் உன்னை முன்னர் வணங்கி வேதசைலத்தைப் பின்னர் ஒருமுறை தரிசிக்கப்பெறுவராயின் அவர்கட்கு இனி வரும் பிறவித்துன்பங்களை யொழித்துக் கடாக்ஷிப்போம். அவ்வாறே வேதகிரிக் கருகிலிருந்து முதலில் உன்னைச் சேவித்துப் பிறகு வேதகிரியைச் சேவித்தவர்க்குச் சிவபெருமான் போகமுத்திகளை யருளிச்செய்வர்.

பதினொன்றாவது பிரணவகிரி அத்தியாயம்

முற்றிற்று.

உ

கணபதிதுணை

பன்னிரண்டாவது
பிரணவதீர்த்த அத்தியாயம்.

முரணவ நீக்கிய முதுபெருந்தவ
வரணவாழ்க் கையாகத் தணுகு சண்முகப்
புரணவா தித்ததாதாள் புனைந்து சென்னியிற்
பிரணவ தீர்த்தத்தின் பெருமை கூறுவாம்

வருடந்தோறும் ஆடிமாதக் கார்த்திகையில் தேவர் முனிவர் முதலானவர்கள் சூழக் கிரிரூபமா யிருக்கின்ற உன்

சிரசில் விநாயகருடன் பார்வதி பாகராகிய மகேசுவரனை பரார்த்தமாக நாம பூசிப்போம. அத்திருநாளில் உன்லுண்டுபண்ணப்பட்டிருக்கின்ற பிரணவ தீர்த்தத்தில் மூழ்கிப் பதியுடன் வலம வநதவனுக்கு மறுபிறவி யுண்டாகமாட்டாதென்று பிரணவகிரி பிரணவதீர்த்தங்களின் விசேடங்களையும விதீபாதம, கநதசஷ்டி, கார்த்திகை, அமாவாசை, மாசப்பிரவேசம, சுக்கிரவாரம இவை முதலிய தினங்களில் இங்கிருநது முறைபபடி விரதம நோற்பார்க்கு கிடைக்கும பலவகைப பயன்களையும எடுததோதி விளங்கக் கொடுக்க, பிரணவமும அவ்வாறே யிப்பர்வதமாகி நின்றதென விஷ்ணுதேவருக்குச சொல்லி இலிங்கத்துள் அந்தர்த்தானமாயினா

பன்னிரண்டாவது பிரணவதீர்த்த அத்தியாயம்

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

பதின்மூன்றாவது
நிம்ப விருக்ஷ அத்தியாயம்.

சத்தபுரி தம்முளுயர் சாலபுமிகு சைவ
நித்தபுரி கசசியிரி னிகழ்தது திருவெல்லைச
சுத்தபுரி வல்வினை தொலைத்தபுரி சீர்சால்
யுததபுரி நிம்பவர லாறினி யுரைப்பாம்.

தேவரும் அசுரரும் முனனொரு காலத்தில் தாம்தாம் பராக்கிரமததி லதிகராய் ஒருவாக்கொருவர் நெடுங்காலம் யுததம்பண்ணினதில தேவாகள் தோறக, அசுரர் அதிக மதோனமததாகளா யுலகஙகளை யெல்லாம உபத்திரவஞ் செய்யககண்டு தேவா முதலானோா முறையிடவும் விஷ்ணு தேவர் அசுரரை யெதிர்நது பாணவருஷங்களாற சின்ன பின்னப் படுதத, இறநதவர்களொழிய உயிர்பிழைததுப் புறஙகொடுததோடினவர்கள பலவிடங்களிலுஞ் சென்று ஒளிததுக்கொண்டனா. சிலாகோபமூண்டெதிாததுபோா செய்ய அவாகளையும மாய்க்கத தொடங்கின போது அவர்கள் வலிமையறறு நிராயுதரா யோடுதலும் அவாகளை விடா மற்றொடாநது விஷ்ணுதேவா துரததியபோது ஓடிவநத அசுரா, பிருகுமுனிவா தவஞ்செய்துகொண்டிருநத ஆச்சிரமததைச சநதித்து அம்முனியைச சரணமடைய, இவையாமல் நாமின்னு மெஙகே போடிப்போவோமென்று பயநது சுற்றிக்கொண்டிருநத சமயததில, அங்குநீராடிவருகின்ற பிருகுபததினியைக் கண்டு சரணமடைநது தமது குறைகளைப பலவாறு சொல்லி யிரக்க, பிருகுபததினி கேட்டு நீஙகள் தேவர்க்கும முனிவாக்கும் ஜனம விரோதிகளான துாக்குண மூாக்கராதலால அபயங கொடேனென்று சொல்லி மறுக்கவும, அசுரா காலைசசுற்றிய பாமபுபோலப் பததினி காலில வீழ்நது விடுதலொலையாமல, அநநத விதமாகக் குறையிரநது ஓவென்றலறிக் கூசசலிட்டுத துயரப் பட்டதறகிரஙகி அவாகளை அபயஸ்தங் கொடுத தாதரிக்க, பின்னே துரததிய விஷ்ணுதேவர் அங்கு வந்து அவர்களைக் கண்டெதிர்க்க, பிருகுபததினியும் அவரைப் பிரார்த்திததுச் சொல்லிய வார்த்தைகளை அநாதரவு செய்து தயை பாராட்டாமல் அவ் வசுரரைத் தாக்கத் தொடங்கு

தலும், பிருகுபத்தினி பின்னும் விஷ்ணுவை நோக்கி அநந்த நியாயங்கள் சொல்லியுங் கேளாமலெதிர்த்தார் பிருகுபத்தினி அபயாஸ்தங்கொடுத்தவளையன்றோ முன்னே சங்கரித்துத் தோற்றுவந்த அசுரர்களை (நாயமாலை) பின்னே சங்கரிக்க வேண்டுமென்று சில கடுஞ் சொற்களால கண்டிக்கத் தொடங்குதலும், அதிக கோபங்கொண்டு விஷ்ணுதேவர் அவள் கழுத்தைச் சக்ராயுதத்தால அறுத்து வீழ்த்தினர். அது கண்டு அங்கிருந்த ருஷிபத்தினிகள் கோவென்றலறி யழுது விட்டனர் அவ்வழுகை யோசையாற் பிருகுமுனிவர் தவத்தினீங்கி விரைந்து வந்து நடந்த கொடுமைகளைக் கேள்வியுற்றுக் கோபமிகுந்து விஷ்ணுதேவரை யழைத்துச் சினந்துநோக்கி, நமது பத்தினிக்கு மருமகனாகி யிருக்கின்ற நீ உனது தாயாருக்குச் சமானமாக எண்ணத் தக்கவளை ஹத்திசெய்து என்னையும் உபேக்ஷை செய்தனை யாகையால் நீபத்து ஜனனத்தை யடையக்கடவை யென்றும் திருமகளை நோக்கி நீயும் உனது தாயாருடைய கொலையை உபேக்ஷையால பார்த்துக்கொண்டு உன் கணவன் மார்பினிடத்துத் தயை யெட்டுணையுமில்லாமல மரம்போல் இருந்தாயாகையால் கசப்பாகிய வேப்பமரமாகக் கடவை யென்றும் சபித்துவிட்டுச் சுக்ராசாரியரை வருவித்து அவரைக்கொண்டு மிருதசஞ்சீவினி மந்திரத்தால அற்றகழுத்தைச் சேர்த்துப் பத்தினியைப் பிழைப்பித்து அவளுடன் பன்னசாலையிற் பிரவேசித்துத் தவத்திலிருந்தனர்.

பதின்மூன்றாவது நிம்ப விருக்ஷ அத்தியாயம்

முற்றிற்று.

கணபதி துணை

பதினான்காவது

வேப்பமர விநாயகர் அத்தியாயம்.

ணைந்தி ரைகடல் பணிமுத்தம் படிவன நோக்கி
வந்தி ரைக்கலுழ் குங்குரு கினமடை வதியத்
தந்தி ரைக்குநீள் போரியில் நிம்பமாந் தழைந்த
இந்தி ரைக்குமுன் னவனரு ளியசெய லிசைப்பாம்.

பிருகுமுனிவரா லடைந்த சாபத்தால் திருமகள் சொல்லற்கரிய மனோதுக்கமுற்றிவ்வாறு சிந்திக்கலுற்றனள்.

முனிவர்களுக்குச் சிவயோகமே உயிர்க்குறுதியாம் அச்சிவயோகம் விக்கினேசுவரரால் இடையூறின்றி முடிகூடும். யோகியர் தியானிப்பது ஓங்காரமாம், பலவகை மறை மந்திரங்கட்கும் மேன்மையுள்ளதாகிய பிரணவம் வேதத்துட் பொருளாகி யோகியருள்ளத்தின்கண் பெரிய சுடரொளித்திரளாய் நிலைபெற் றிருக்கின்றதாகும். அப் பிரணவமே விக்கினேசுவரரது திவ்ய சொரூபமாகுமென வேதாகம நூல்கள் முறையிடுதலால் பிள்ளையாரது கருணையாகிய துணையால் தனது துன்பத்திற்கு முடிவு காணக்கூடுமென்று வந்து யுந்தபுரியிலுள்ள பிரணவ கிரியின் சாரலின் வனத்திற் கண்ணுவமுனிவரது ஆச்சிரமத்தி னருகே திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் விக்கினேசுவரரைச் சேவித்துத்துதித்து அன்புருவாய்க் கண்ணீர்பெருகப் பிரார்த்தித்துக் குறையிரக்க, பிள்ளையார் ஊர்த்தமுகத்ததாகிய மூஷிகவாகனரூடரா யெழுந்தருளித் தரிசனைகொடுக்க, மீண்டும் திருமகள் பலவாறு சுவாமி திருநாமங்களால் தோத்

திரஞ்செய்து போற்றி முன்னடந்த வற்றையும் பிருகுமுனியால் விஷ்ணுதேவர்க்கு தனக்கும் சாபம் வந்ததையும் விண்ணப்பஞ் செய்ய, விநாயகர் அருளிச்செய்கின்றனர்.

சர்வலோகங்களுக்கும் நிமித்த காரணராய்த் தமது திருவருளே சத்தியாகக்கொண்டு அநாதி மலமுத்தராய் அனைத்துயிர்க்கும் உயிரும் உணர்வுமாகித் தாம் அசைந்தாலன்றி உலகுயிர்கள் சிறிதும் அசையாவாக எல்லாமும் தம வயத்தே யாகப் பசுபதியாகிய உடையவராய்ப் பெருமைகளுட் பெருமையும் நுட்பங்களுள் நுட்பமுமாகி எங்கும் நிறைந்திருக்கின்ற சிவபெருமானுக்கு மனமாதி மூன்றிலும் நல்ல அடியவராயினோர் எவைக்கும் எவர்க்கு மேலோர் அவ்வடிமைத் திறத்தினுள்ளாராகிய முனிவரது சாபவலிமை [illegible]ாலும் [illegible]மாதிகளாலும் எளிதில் நீக்கரிது.

ஆதலால் அஞ்சவேண்டாம், திருமகளே! நீ அந்நிம்ப விருக்ஷ வடிவாகியே இங்கு நிலைபெற்றிருப்பாயாக அதன் அடிக்கண் நாமும் நீங்காமல் வீற்றிருந்து சகலருக்கும் இடையூறுகளை நீக்கி நன்மை செய்கின்றோமென்ன, அவ்வாறு திருமகளும் அம்மரமாகி நிற்க, அதன் மூலத்தில் தாமும் வீற்றிருந்தருளலும், தேவர் மலர்மாரி பொழிந்தனர் தேவதுந்துமிகள் முழங்கின, சகல முனிவரும் உலகத்திலுள்ளோரும் குதுகலித்து ஆநந்தமுற்றனர்

வேம்படி விநாயகரது புகழைத் துதித்தவர் புண்ணியராவர், அவ்விருக்ஷத்தை முறையாற் பிரதக்ஷிணம் செய்தவர் பிறவித் துன்பங்களை வெல்லவர், பிள்ளையாரைப் பூசித்தவர் எல்லாவிரதங்களையும் குறைவிலலாமற் செய்தவராவர்.

பதினொன்காவது வேம்படி விநாயகர் அத்தியாயம்

முற்றிற்று

உ

கணபதி துணை

திணைந்தாவது

திருவிழா அத்தியாயம்.

மாமலர்த்திரு வேம்படி விநாயக வரனைப்
பூமலர்த்திருத் தாள்சிரங் கண்ணுளம் புனைந்து
காமலர்த்திருப் போரியெங் கண்ணுதல் கருணைத்
தேமலர்த்திரு மேனியார் விழாவணி தெரிப்பாம்.

யுத்தபுரியாகிய திருப்போரூரின்கண் எத்தகையோருக்கும் சேவை தந்தருளத் திருவுளங்கொண்டு ஸ்கந்தர் பிரமன் இந்திரன் முதலியோரை வரும்படி கடாக்ஷிக்க, அவர்கள் யாவரும் அங்கடைந்து வேதாகம முறையாற் பூசித்து வணங்கிச் சந்நிதியில் நிற்க, ஸ்கந்தர் அவரைக் கடைக்கணித்து, வருடந்தோறும் உத்தராயண கும்பரவியில் (மாசி மாதம்) பூர்வபக்கத்திற் சகலாத்மகோடிகளுக்கும் தமது சேவை யெளிதிற் சித்திக்கும்படி திருவிழாச்செய்கவென்று அநுஜ்ஞை தந்தருளலும், கேட்டு, பரமாநந்த பரிதராய் அவ்வநுஜ்ஞையை மேற்கொண்டு ஆடிப்பாடித் துதித்துப் பெறுதற்கரிய பெருஞ்செல்வம் பெற்றாராய் வள்ளி தெய்வயானையாருடன் ஸ்கந்தருக்கு முறையே மஹோத்ஸவங்கள் விபவமாக நிறைவேற்றித் தாந்தாம இச்சித்த வரங்களையெல்லாந் தந்தருளப் பெற்றனர்.